98

உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 2.] 1923வ௵ பிப்ரவரி௴ 1உ [பகுதி 1.

இதில வெளிவரும அமராவதி யென்னும் நாவல்
ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

BY THE REGISTRAR OF ... MADRAS
2? MAR 1923

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1923

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந் போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொ நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட் வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் த வேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண் மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதாயிருக்கிறது. அத னால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வ தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய் தோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியத யிருக்குமென்று இதனை 1922ஸு பிப்ரவரிமீ 1வ முதல் ஆர பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியா வந்து ஆறு மாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்த கம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப் புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது முதலில் மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் வெளியாகி இத்துடன் முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923ஸு மார்ச்சுமீ 1வ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிகுந்த அதிசய மான நாவல் தொடங்கப்படும். அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்கும் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

21 MAR 1923

அரசனுடைய புதல்வனென்று தெரியாது. ஆகையால் அவனும் இதில் சம்பந்தப்பட்டிருந்தானோ வென்று பெருந்திகிலிருந்தது.

தன் தந்தை கூறியதைக்கேட்ட உலகநாயகன், "தந்தையே! அதைப்பற்றி நான் கேள்விப்பட்டேன். என் தாயார் சில நாட்களாக எங்களிடம் வசித்துக் கொண்டிருக்கிறார்களென்பது தாங்களறிந்த விஷயமே. அவர்கள் என்னிடம் இரகசியமாக அதைப்பற்றிக் கூறினார்கள். அதுவும் நான் தன் மைந்தன் என்றறிந்த பிறகுதான் கூறினார்கள்" என்றான்.

அரசன்:—நீ யேன் அதை யென்னிடம் கூறவில்லை?

உலகநாயகன்:—"தந்தையே! அக்காரணத்தைத் தாங்களே யூகித்துக்கொள்ளலாகுமே. என் மனைவியின் தந்தை அதில் சிக்கியிருக்கும் போது நான் எப்படி யதை வெளியிடுவேன். தாங்கள் அந்த இக்கட்டிற் சிக்காமல் தப்பித்துக் கொண்டீர்கள். கர்னல் இரகுநாதர் இனித் தங்களுக்கு விரோதமான யோசனை யெதுவும் செய்வதில்லை யென்று வாக்களித்து விட்டார். ஜனரல் உக்கிரசேனர் சென்றதினம் அதைப் பற்றி மிக்க கண்டிப்பாகக் கர்னலுக்கு எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றார். அதோடு இப்போது தாங்கள் என் விஷயத்தில் நடந்து கொண்டமாதிரியால் கர்னல் பூரண திருப்தி யடைந்துவிட்டார். அதனால்தான் இனித் தங்களுக்கு எவ்வித இடையூறு செய்யவும் கருதவில்லை யென்று என் தாயாருக்குச் சத்தியம் செய்து கொடுத்தார். அதோடு அந்த ஆலோசனை நிறைவேறாமல் தெய்வச் செயலாகத் தடைப்பட்டுப் போனதற்கு இப்போது தான் சந்தோஷப்படுவதாகவும் கூறினார். அப்போது தான் என் தாயார் தன் தமையனை யாலிங்கனம் செய்துகொண்டு, இவ்வூட்டிக்கிடங்கில் நடந்த விஷயங்கள் தனக்குத் தெரிந்த விவரத்தையும் அது நிறைவேற வொட்டாது தான் தடுத்து விட்ட விவ

186481.

ரத்தையும் கூறித் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள்'' என்றான்.

இதைக்கேட்ட அரசன் உள்ளத்தில் மிக்க சந்தோஷமும் வியப்புமடைந்து தன் புதல்வனை நோக்கி, "என்ன! உன் தாயார்!...உன் தாயார் இதை நடக்காதபடி தடுத்து விட்டாளா? ஜனரல் உக்கிரசேனர் அதில் சேர்ந்திருந்தாரோ?'' என்று ஆவலோடு வினவினான்.

உலகநாயகன் "தந்தையே! ஜனரல் உக்கிரசேனர் அதில் சேர்ந்திருந்தார் என்பதற்கு மாறாக அவர் தங்களோடு கூடத் தங்கள் வண்டியில் உட்கார்ந்து வந்ததாலே தான் அந்த விஷயம் நடைபெறாமல் போய்விட்டது'' என்று தன் தாயார் அவர் மூலமாய் அந்தச்சதியாலோசனை நடவாதபடி தடுத்த விவரத்தை யியம்பினான்.

யாவும் கேட்ட அரசன் மிக்க வியப்பும் ஒருபக்கம் சந்தோஷமுமடைந்து "ஆ! அப்படியா? இவ்விஷயத்தில் ஜனரல் உக்கிரசேனர் நடந்துகொண்ட மாதிரி மிக்க புகழத்தக்கதே. இவர்களிருவர்க்கும் நான் என்ன பிரதியுபகாரம் செய்யக்கூடும்?'' என்றான்.

உலகநாயகன் "தந்தையே! என் தாயின் சகோதரரையும், ஜனரலுடைய அன்பார்ந்த நண்பரையும் காப்பாற்றி விட்டால் அதுவே தாங்கள் செய்யும் பிரதியுபகாரமாகும்'' என்றான்.

அரசன்:—"குழந்தாய்! உன் வேண்டுகோளுக்கு மறுத்துக்கூற என்னால் முடியாது. ஆனால் ஒரு விஷயம். உன் மாமனார் இங்கேயே யிருந்தால் நான் அவரை மட்டும் காப்பாற்ற முடியாது. இச்சதியாலோசனையில் சம்பந்தப்பட்ட யாவரையும் சிறைப்படுத்தும்படி கட்டளை பிறப்பிக்கப்படும். ஆனால் நாளையனன்றைய வரையில் அக்கட்டளையைப் பிறப்பிக்காமலிருக்கிறேன். அதற்குள் கர்னல் இரகுநாதன் இந்நாட்டை விட்டு அன்னிய நாட்டிற்குச் சென்று விடவேண்டும். இவ்வளவே நான் செய்யக்கூடும். நீயே யிதை யறிந்து கொள்ளலாம்.'' என்றான்

உலகநாயகன் தன் தந்தையின் கரத்தைப்பற்றிக் கொண்டு தக்கபடி வந்தன மளித்து விட்டு விடை பெற்றுக்கொண்டு தன் மாளிகைக்குச் சென்றான்.

உலகநாயகன் தன் மாளிகைக்குச் சென்றதும் தன் மனைவியிடமும் தன் தாயிடமும் அரசன் தன்னை வரவழைத்ததும், கூறியசங்கதிகள் யாவையும் விவரமாக வியம்பினான். அவற்றைக்கேட்டதே அமராவதியும் இராஜாம்பாளும் மிக்க துயரமடைந்தார்கள். ஆயினும் கர்னல் இரகுநாதருடைய பிராணனுக்கு ஆபத்தில்லாமல் அவர் தப்பித்துக்கொள்ளும்படி அரசன் இடங்கொடுத்தது ஒரு சந்தோஷ சமாசாரமே. ஆனால் அவர் தன் தேசத்தையும் சுற்றத்தாரையும் விட்டுப்பிரிந்து போய் விடவேண்டும், அதோடு அவர் அச்சதியாலோசனையில் சேர்ந்திருந்த சங்கதியும் சிட்சை யடையவேண்டியவர்களில் ஒருவர் என்பதும் பகிரங்கமாக விளங்கிவிடும். இவ் விஷயம் அவர்கள் மனதிற்கு வியாகூலத்தை யுண்டாக்கியது.

அவர்கள் மூவரும் உடனே நகரினின்று புறப்பட்டு இரொட்டிக்கிடங்கிற்குச் சென்றார்கள். உலகநாயகன் மெதுவாக மாமனாருக்கு அரசன் இயம்பிய சங்கதியைக் கூறினபோது பிச்சப்பன் மேல் அவர் சொல்லொணா வெறுப்பும் கோபமுமடைந்தார். முதலில் தன் நண்பர்களை யெல்லாம் விட்டுவிட்டுத் தாம் மட்டும் தப்பித்துக் கொண்டு போய் விட அவர் சம்மதிக்க மாட்டேனென்றார்.

உலகநாயகன் அவரை நோக்கி "தாங்கள் அன்னிய நாட்டிற்குச்செல்லாமல் இங்கிருப்பதால் தாங்கள் நண்பர்களுக்கு எவ்வித உதவியும் செய்யப்போவதில்லை. தாங்களும் அவர்களோடு கூடச் சிக்கிக்கொண்டு தண்டனை யடைவீர்கள். அப்படி நேரிட்டால் தங்கள் புத்திரி, மனைவி, என் தாயார், நான் எங்களனைவர்க்கும் தீராத் துயரத்தை யுண்டாக்குவதாகும். அப்படிக்கின்றித் தாங்கள் அன்னிய நாடுகளில் ஒன்றுக்குச் சென்றிருந்தால்

காலம் செல்லச்செல்ல ஏதேனும் மாறுதல் நேரிடலாகும். தாங்கள் மன்னிப்புப்பெற்று வீடுவந்து சேரும் படியான சந்தர்ப்பம் வாய்க்கலாகும். தாங்கள் தைரியத்தோடு எத்தகைய இக்கட்டையும் சகித்துக்கொள்ளும் சுத்தவீரர் என்பது யாவரு மறிந்த விஷயம். ஆனல் எங்களைக்கவனித்து எங்களுக்காக அரசன் அனுமதிப்படி செய்யப் பிரார்த்திக்கிறேன்" என்று வேண்டிக்கொண்டான்.

அதன்மேல் கர்னல் மனந்திரும்பி "சரிதான்; ஆயினும் என் நண்பர்களுக்கு எச்சரிக்கையேனும் செய்ய வேண்டாமா?" என்றார். உலகநாயகன், "அந்தோ! அரசர் அப்படிச்செய்ய அனுமதியளிக்கவில்லையே, தாங்கள் அவ்வாறு செய்வது, நன்றி யற்ற செய்கையாகவல்லவோ தோன்றும்" என்றான். கர்னல் சற்று சிந்தித்துக்கடைசியில் அவ்வாறே யொப்புக்கொண்டார்.

மறுநாளே கர்னல் இரகுநாதரும் அவர் மனைவியும் இலவணபுரி நாட்டைவிட்டுப் பாஞ்சால நாட்டிற்குச்சென்றார்கள். பிச்சப்பனிடம் பேசிவிட்டுச் சென்ற கர்னல் இரவணப்பன் நேராகத் தன் வீட்டிற்குச் சென்று இளவரசனுகிய ஜெயசிங்கனுக்கு ஒரு கடிதம் எழுதி உடனே தன்னைச் சந்திக்கும்படி வேண்டிக்கொண்டான்.

அவ்வாறே இரவு ஏழு மணிக்கு மேல் அவர்கள் இருவரும் முன் சந்தித்த விடத்திலேயே சந்தித்தார்கள். கர்னல் இரவணப்பன், பிச்சப்பன் உள் நாட்டு மந்திரியின் வீட்டிற்குச் சென்றிருந்த விவரத்தைக் கூறி "அவன் உண்மையாகவே இரொட்டிக்கிடங்குச் சதியாலோசனையைப்பற்றி ஸர்தார் சாந்தலிங்கம் பிள்ளை யிடம் யாவும் கூறி விட்டான்" என்றான்.

ஜெயசிங்கன் "பிச்சப்பன் அம்மந்திரியிடம் அதைக் கூறி யிருந்தாலும் மந்திரி அதைப்பற்றி யின்னும் அரசனிடம் கொஞ்சங்கூடக்கூறவில்லை யென்பது நிச்சயம். கூறி யிருந்தால் அரசர் முன்னமே என்னிடம் கூறியிருப்பார்" என்றான்.

கர்னல் இரவணப்பன்:—"எப்படியும் அம்மந்திரி அரச

னிடம் கூறிவிடுவார். அதோடு பெருமோசமாக முடியும். நாம் செய்த ஆலோசனை முழுமையும் அடியோடு படுத்துவிடும்'' என்ருன்.

சதியாலோசனை விஷயம் அரசனுக்கு எட்டிவிடும் என்பதை யறிந்ததே ஜெயசிங்கனுக்குப் பெருங்கலக்க முண்டாய்விட்டது. “கர்னல் இரவணப்பன் பிடிக்கப் பட்டால் தான் தப்பித்துக்கொள்வதற்காக நமது சங் கதியை யரசனிடம் கூறிவிடுவான். நாம் எழுதிக்கொடுத் திருக்கும் பத்திரத்தையே அரசனுக்குக் காட்டிவிடு வான்'' என்று திகிலடைந்துவிட்டான். ஆகையால் நமது ஆலோசனை அடியோடு படுத்துவிடும்என்று கர்னல் கூறி யதும் ஜெயசிங்கன் “சரி அப்படியானல் நான் எழுதிக் கொடுத்த கடிதத்தை யென்னிட மளித்துவிடு'' என்ருன்.

கர்னல்:—“அரசே! தாங்கள், கூறுவது வேடிக்கையாக விருக்கிறது. அப்படி ஒருவார்த்தையில் அது முடிந்துவிடுகிற காரியமா; தங்களுக்காக உண்மை யோடு பாடுபட ஆயத்தமாக விருந்த தங்கள் அடிமை யென்ன கதியாவது?'' என்ருன்.

ஜெயசிங்கன்:—“நீ அக் கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிடு. உனக்கு ஆயிரம் ரூபாய் தருகி றேன். நீ அதை யெடுத்துக்கொண்டு எங்கேனும் அன்னிய நாட்டிற்குச் சென்றிருந்து இக் குழப்ப மனைத்தும் அடங்கியபின்வா'' என்ருன்.

கர்னல் இரவணப்பன்:—“அரசே! இந்த ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு எவ்வளவுகாலம் அன் னிய நாடுகளில் கௌரவமாகச் சீவிப்பது? என் போன்றவனுக்கு நமது நாடே தகுதியானது: ஆகையால் நான் இங்கேயே யிருப்பேன். இதே தீர் மானம்'' என்ருன்.

ஜெயசிங்கன்:—இப்போது நான் அவசரப்படாமல் என் தமையன் இறந்து எனக்குப் பட்டம் கிடைக்குமட் டும் நீ நிதானிக்கலாம். எனக்கு விரோதமாக வேலை செய்யும் பிரபுக்கள் அனைவரும் நீ கூறியபடி இந்த

இரொட்டிக்கிடங்கில் நடந்த சதியாலோசனையில் சிக்கி யிருக்கிறபடியால் அவர்களனைவரும் இப்போ தழிந்துவிடுவார்கள். ஆகையால் நாம் ஆலோசனை செய்த வேலையைச் செய்ய வேண்டியது அனுவசி யமே'' என்றான்.

இச்சங்கதி கர்னல் இரவணப்பனுக்கு மிக்க அதிருப் தியை யுண்டாக்கியது. ஏனெனில் அவன் ஆலோசனை செய்தபடி விவகாரங்கள் நடந்தால் பிறகு ஜெயசிங்கன் பட்டத்திற்கு வந்ததே அவனிடம் நல்ல பரிசடையலாம். இப்போது தன் உதவியில்லாமலே அவன் பட்டத்திற்கு வந்துவிட்டால் தான் அவனிடம் எவ்விதப் பரிசும் எதிர் பார்க்க நியாயமில்லை. ஆகையால் அவன் இளவரசை நோக்கி,

“அரசே! பிச்சப்பன் இராஜரத்னம்பிரபு முதலிய வர்கள் அச்சதியாலோசனையில் சேர்ந்து இருப்பதாகக் கூறுவது கேள்வியால் மட்டுமேயன்றி அதை ருசுப்படுத்த அவனால் முடியாது'' என்றான்.

ஜெயசிங்கன்:—பிச்சப்பன் அதை ருசு செய்யாவிட்டா லும் அதை ருசுப்படுத்த இன்னொரு ஆள் இருக்கி றான்.

கர்னல்:—அந்த ஆள் யார்?

ஜெயசிங்கன்:—என் நீதான்.

கர்னல்:—அதனால் எனக்கென்ன பயன்?

ஜெயசிங்கன்:—“இப்போது உனக்கு நமது நாட்டிலிருக் கவே பிரியமாக விருக்கிறதென்று முன்பு கூறினை யல்லவா? ஒரு விஷயத்தில் நீ இங்கிருந்தாலே காப் பாற்றப்படலாம். இதைவிட்டு எங்கேனும் சென்று சிக்கிக்கொண்டால் நான்கூட உன்னைக் காப்பாற்ற முடியாது. இப்போது பிச்சப்பன் அச்சதியா லோசனையை வெளியிட்டு விட்டிருக்கிறது உண்மை யாயின், அவன் எனக்குக் குறிப்பாகக் கூறியபடி நீயும் இராஜாங்கத்தின் பட்சத்தில் சாக்ஷியாகத் திரும்பி விடு. நீ கூறும் சாக்ஷியத்தால் அப்பிர

புக்கள் அனைவரும் மரணதண்டனை யடைந்து ஒழிந்தால், என்னிடம் நல்ல வெகுமானத்தை யெதிர் பார்க்கலாம். பிறகு நான் கூறியபடி உனக்குப் பட்டமும் செல்வமும் அளிப்பேன்'' என்றான்.

யாவும் கேட்ட கர்னல் இரவணப்பன் "ஆ! இப்போது தாங்கள் கூறியதால் யாவும் தெளிவாக வுணர்ந்தேன். உடனே பிச்சப்பனைக்கண்டு சங்கதி யறிந்து நான் கருதுகிறபடி யிருந்தால் உடனே அவனோடு சேர்ந்து கொண்டு தங்கள் விரோதிகளனைவரையும் கூண்டோடு ஒழித்து விடா விட்டால் என் பெயர் இரவணப்பன் அல்ல'' என்றான்.

ஜெயசிங்கன்:—"சரி. இனி அக்கடிதத்தைக் கொடுத்துவிடு'' என்றான்.

கர்னல் இரவணப்பன் "அரசே! அக்கடிதம் என்னிட மிருப்பதே நலம். தங்கள் வாக்குத்தத்தத்தை மீனப் பூட்ட அது அனுகூலமாக விருக்கும். நான் அதை என் வசத்தில் வைத்துக்கொண் டிருப்பேனென்றும் நான் துரைத்தனத்தார் வசத்தில் என்னை யொப்புக்கொடுக்கும்போது அது அவர்களிடம் சிக்கி விடுமென்றும் கருத வேண்டாம். அக்கடிதத்தை மிக்க பத்திரமாக நம்பிக்கையான என் நண்பர் ஒருவரிடம் அரக்கு முத்திரை யிட்டுக் கொடுத்து வைத்திருக்கிறேன். அதைப்பற்றிக் கவலையே வேண்டாம்'' என்றான்.

ஜெயசிங்கன் இனி யிவனைக்கேட்பதில் பயனில்லை யென்று எண்ணிப் பேசாமலிருந்து விட்டான். சற்று நேரத்திற்குள் இருவரும் பிரிந்து சென்றார்கள்.

* * * * * *

கர்னல் இரகுநாதரும் அவர்மனைவியும் அன்னிய நாட்டிற்குப்போய் விட்டார்கள் என்ற சங்கதியை உலக நாயகன் மூலமாய் அறியுமட்டும் அரசன் சதியாலோசனைச்சங்கதியை யொருவருக்கும் கூறாமல் தன் மனதிலேயே யடக்கிவைத்துக்கொண்டிருந்தான். கர்னல் இரகுநாதரும் அவர் மனைவியும் நாட்டை விட்டுச் சென்றதை

யறிந்ததே அரசன் சகோதரனுகிய ஜெயசிங்கனை யழைத்துத் தான் கேள்விப்பட்ட சங்கதியைக்கூறினுன். ஜெயசிங்கன் அப்போது தான் அச்சங்கதியைக் கேட்டவன் போல் அபிநயம் செய்தான்.

உடனே உள் நாட்டு மந்திரியாகிய ஸர்தார் சாந்தலிங்கம் பிரபுவும், பிரதமஙியாயாதிபதியும் இரண்டொரு மந்திரிகளும் வரவழைக்கப்பட்டு, ஒரு இரகசிய சபை கூட்டப்பட்டது. பிச்சப்பன் அச்சபையின் முன் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டான்.

அவன் உண்மையாகச் சதியாலோசனைக்காரர் என்ன செய்யக்கருதினுர்களோ அதை மட்டும் கூறத்தொடங்கினுன். அச்சதியாலோசனையை விபரீதமானதாகக் காட்டி அதிற்சம்பந்தப்படாத பிரபுக்களையும் சேர்த்து யாவரையும் அடியோடொழித்து விட்டால் தன் விரோதமான கட்சியே யில்லாமற் போய் விடும் என்பது ஜெயசிங்கனுடைய கருத்து. குமுதவல்லிச்சீமாட்டிக்கும் அரசனுக்கும் பிறந்த செல்வராஜ இராஜகுமாரனையும் இதிற் சேர்த்து ஒழித்துவிட வேண்டுமென்பதே ஜெயசிங்கன் ஆலோசனை.

ஆகையால் பிச்சப்பன் விசாரிக்கப்படும்போது ஜெயசிங்கன் அவனை நோக்கிப் பயமுறுத்தி "அடே! எத்தகைய நிபந்தனையின் மேல் உன் உயிர் அளிக்கப்பட்டு நீ மன்னிப்படைவா யென்பது தெரியுமல்லவா? நீ சதியாலோசனைக்காரருடைய எண்ணத்தை எள்ளளவேனும் மறைக்காமல் யாவும் வெளியிட வேண்டும். அவர்கள் அரசரையும் என்னையும் கொலை செய்யவே ஆலோசனை செய்திருந்தால் அதை மறைக்காமல் வெளியிடவேண்டும். அதை மறைத்து மற்றவைகளை மட்டும் கூறுவதால் பயனில்லை. தெரிகிறதா? அவர்கள் எங்களைக் கொலை செய்யவே இரகசிய ஏற்பாடு செய்திருந்தார்கள் என்பதையும் ஒளிக்காமல் கூறினுலே நீ தப்புவாய்" என்றுன்.

ஜெயசிங்கன் கூறியதினின்றும் அவன் கருத்தை

யறிந்து கொண்ட பிரதம நியாயாதிபதியும் பிச்சப்பனை நோக்கி "ஆம்! சதியாலோசனைக்காரருடைய கொலைபாதக எண்ணத்தை நீ மறைத்துக்கூறுவதில் பயனில்லை" என்றார். இன்னும் இரண்டொருவரும் அவ்வாறே கூறினார்கள். இவற்றால் நாம் அவ்வாறு தான் கூறவேண்டுமென்பதைப் பிச்சப்பன் உணர்ந்து கொண்டு "ஆம் அரசரையும் ஜெயசிங்கம் இராஜ குமாரரையும் சிறை செய்து அவர்களிடம் வேண்டிய நிபந்தனைகளை யெழுதி வாங்கிக்கொண்டு கடைசியில் இருவரையும் கொன்று விடவேண்டுமென்றே தீர்மானம் செய்யப்பட்டிருந்தது" என்றான்.

பிரதம நியாயாதிபதி அவன் கூறிய யாவும் உண்மையே யென்று நம்புவதாக எழுதிக்கொண்டார். அரசனுக்கு மட்டும் இது பொய் யென்று தெரியும். எப்படி யெனில் சதியாலோசனை செய்தவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது தன் தாயார் கேட்டுக்கொண் டிருந்ததை உலகநாயகன் அரசனிடம் கூறியிருக்கிறான். ஆனால் அரசன் அதையெப்படி வெளியிடக்கூடும். ஆகையால் நடக்கிறது நடக்கட்டும் என்று பேசாமலிருந்து விட்டான்.

ஒரு சாட்சியத்தைக் கொண்டே பலரைத்தண்டிப்பது நியாயமாகத்தோன்றாது. ஆகையால் இன்னும் சிலரைத் துரைத்தனத்தார் பட்சம் சாக்ஷியாகத்திரும்பும்படி தூண்டி அவர்களை யழைத்து வரும்படி பிச்சப்பன் தூண்டப்பட்டான். அவன் அதற்கு முன்பே உள் நாட்டு மந்திரியால் இந்த விஷயத்தைப் பற்றி எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதால், இரண்டொரு மணி நேரத்திற்குள் கர்னல் இரவணப்பன், இரொட்டிக்கிடங்கி னருகிலுள்ள ஹோட்டல் காரனும் கர்னல் இரகுநாதரிடம் சிநேகம் பாராட்டி யிருந்தவனுமாகிய செந்திலடிமை, ஒரு லாயர், இன்னொரு வர்த்தகன் ஆகிய நால்வரை யழைத்து வந்து விட்டான்.

இவர்கள் நால்வரும் உடனே இரகசிய சபையில் விசாரணை செய்யப்பட்டார்கள். அவர்களெல்லாம் அர

சாங்கச் சாட்சிகளாகத்திரும்பித் தங்களைநம்பிய நண்பர்களைக் காட்டிக்கொடுக்கத் துணிந்து விட்டார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் பிச்சப்பன் தங்களுக்கு எச்சரிக்கை செய்தபடி சதியாலோசனைக்காரர் அரசனையும் இளவரசனையும் கொன்று விட ஆலோசனை செய்திருந்ததாகவே கூறினர்கள்.

அன்று சதியாலோசனை நடந்ததினம் இந்த நால்வரும், பிச்சப்பனுமே "அரசன் கேட்கும் நிபந்தனைகளுக்கெல்லாம் சம்மதித்து அதன்படி செய்வதாகவே எழுதிக்கொடுத்துவிடுவான். ஆனல் இங்கிருந்து வெளிப்பட்டு அரண்மனை சேர்ந்ததே நம்மனைவரையும் உடனே பிடித்து வரச் செய்து சிரசாக்கினை செய்து விடுவான் என்பதில் சற்றும் ஐயமேயில்லை. ஆகையால் நமது பிராணன்கள் தப்பவேண்டுமாயின் அரசனிடம் யாவும் எழுதிவாங்கிக்கொண்டபின் அவனையும் அவன் சகோதரனையும் கொன்றுவிடவேண்டும்" என்று வாதாடினவர்கள். பெரும்பாலும் மற்ற பேர்களும் அதற்குச்சம்மதித்தே யிருப்பார்கள். ஆனல் கர்னல் இரகுநாதர் ஒரே பிடிவாதமாக இரத்தம் சிந்தும் சங்கதியே கூடாதென்று தடுத்துவிட்டதால்தான் அந்தயோசனை தடைப்பட்டது. இப்போது அந்தக்கொடிய துஷ்டர்களே தங்கள் நம்பிக்கையுள்ள கூட்டாளிகளுக்குத் துரோகம் செய்து அவர்களுக்குப் பிராணபத்தை யுண்டாக்கத் துணிந்துவிட்டார்கள்.

இரகசிய விசாரணை முடிந்த பின் பூரண விசாரணை யாவும் நடந்து விவகாரம் முடிகிறவரையில் துரைத்தன சாக்ஷிகளாகிய இவர்களனைவரும் இராஜாங்கத்தார் பாதுகாப்பிலேயே வைக்கப்படவேண்டும். கர்னல் இரவணப்பன் இச்சங்கதியை முன்னமே யறிவான். ஆகையால் விசாரணைக்கு வருவதன் முன்னமே ஜெயசிங்கம் இராஜகுமாரன் தன்னிடம் எழுதிக்கொடுத்திருக்கும் கடிதத்தை யாருடையபாதுகாப்பில் வைத்து வைக்கலாம் என்று ஆலோசித்தான். தான் துரோக சிந்தனையுடையவனுக

லால் சீக்கிரத்தில் அவனுக்கு ஒருவரிடம் நம்பகம் உண்டாகவில்லை. இப்போது தான் துரோகம்செய்த கட்சியாரிடம் செல்லலாகாது. சின்னக் கட்சியாரிடம் செல்லலாமென்றால் இது காறும் எதிர்க் கட்சியிலிருந்து அக்கட்சிக்குத்துரோகம் செய்து விட்டுவந்த இவனை யார் நம்புவார்கள்? மேலும் அக்கட்சியில் இவனுக்கு நண்பர் ஒருவருமில்லை. கடைசியில் இவன் மனதில் ஒரு யோசனையுதித்தது. அதாவது ஸர்தார் சோமநாதன் என்ற ஒரு சினேகிதர் இருந்தார். அவர் இராஜாங்கவிஷயத்தில் தலையிடாதவர் போல் இருப்பவர். எக்கட்சியைப்பற்றியும் வெளிப்படையாய்ப் பேசுவதில்லை. கர்னல் இரவணப்பனிடம் அவர் பிரியத்தோடு பேசுபவர். ஏனெனில் கர்னல் எதையும் மனம் விட்டுப் பேசுபவனாதலால் அவர் அவன் மேல் பிரியங்கொண்டிருந்தார். ஆனால் தன் மனோ பாவத்தை யவர் இவனிடம் கூறுவதில்லை. ஆகையால் கர்னல், தன்னிடம் ஜெயசிங்கன் கொடுத்த கடிதத்தை, ஸர்தார் சோமநாதரிடம் கொடுத்து "நான் ஒரு விவகாரத்தில் பிரவேசிக்கப்போகிறேன், அது முடிந்த பின் இதை வந்து வாங்கிக்கொள்கிறேன்" என்றான். ஆனால் அக்கடிதத்தைப்பற்றிய எந்த விஷயத்தையும் கர்னல் அவரிடம் கூறவில்லை.

இவ்விஷயத்தில் கர்னல் இரவணப்பன் செய்தது பெருந்தவறு. ஏனெனில் ஸர்தார் சோமநாதன் இராஜாங்க விஷயத்தில் பிரவேசிப்பதில்லையென்று கர்னல் கருதியதற்கு மாறாக அவர் பெரிய கட்சியைச் சேர்ந்தவர்களில் மிக்க தீக்ஷணியமானவர். முதலில் அவர் கர்னல் கொடுத்த கடிதத்தைப்பற்றி அவ்வளவாகக் கவனிக்கவில்லை. கர்னல் இரவணப்பன் அவ்வாறு துரோகம் செய்யும் குணமுடையவனென்று அவர் கருதவில்லை.

முதலில் சிலர் பிடிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார்கள். அதன் பிறகு இராஜரத்னம்பிரபு, செல்வராஜ— இராஜகுமாரன்,

இரங்கராஜம் பிரபு முதலிய ஆறுஏழு பிரபுக்களைப்பிடிக்க வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

அப்போது தான் ஸர்தார் சோமநாதருக்குக் கர்னல் இரவணப்பன் துரைத்தனச் சாட்சியாகத்திரும்பித் தன் நண்பர்களை யெல்லாம் காட்டிக்கொடுத்துவிட்டிருக்கிருன் என்ற சங்கதி தெரிந்தது. நமது உலகநாயகனுக்குக் கூட அப்போதுதான் சதியாலோசனை செய்தவர்கள் மேல் அவர்கள் கொலைசெய்யக்கருதியதாக அபாண்டம் கூறப்பட்ட சங்கதிதெரியவந்தது.

இப்போது சோமநாதருக்குக் கலக்கமுண்டாய்விட்டது. ஏனெனில் கர்னல் இரவணப்பன் தன்னிடம் கொடுத்திருக்கும் பத்திரம் இச் சதியாலோசனையைப் பற்றியதாகவே யிருக்குமென்றும் அதைத் தான் வைத்திருப்பதால் தனக்கு ஆபத்துண்டாகலாகு மென்றும் அவர் மனதில்பட்டது. அதன்மேல் அவர் நாம் பிரித்துப்பார்க்கவேண்டுமென்று தீர்மானித்து அதைப் பிரித்துப்பார்த்தார். அதிலுள்ள சமாசாரத்தைப் பார்த்ததும் அவருக்குண்டான வியப்பும், ஜெயசிங்க இராஜகுமாரன் மேலும் கர்னல் இரவணப்பன்மேலும் உண்டான வெறுப்பும் சொல்லத்தரமல்ல. அதன்மேல் அவர் இது இப்போது அக்கிரமமாகத் தண்டிக்கப்படுகிறவர்களைக் காப்பாற்ற நல்ல கருவியாகும் என்று கருதித் தன் அந்தரங்க நண்பராகிய ஒருபிரபுவிடம் அதை யளித்துவிட்டார்.

சிறையாக்கப்பட்ட சகோதரப் பிரபுக்களில் ஒருவர் அன்றே தப்பித்துக்கொண்டு போய்விட்டார். அச்சமயம் தற்செயலாக அன்னிய நாட்டிற்குச் சென்றிருந்த இரண்டொருவர் தப்பித்துக்கொண்டார்கள். பிரபுக்களில் அயோக்கியனுகிய ஒரு கோழை தானும் இராஜாங்கச் சாட்சியாகத் திரும்பிவிட்டான். செல்வராஜு இராஜகுமாரன் பிடிக்கச் சென்றவர்களாலோ, தன் தந்தையாகிய அரசனுலோ எச்சரிக்கை செய்யப்பட்டு நாட்டை விட்டுப் போய்விட்டான்.

72-வது அத்தியாயம்.

இராஜரத்னம் பிரபு சிறைப்படல்—அரசனும் அவன் தம்பியும் கோட்டைச் சிறைச்சாலையில்—ஜெயசிங்கன் செய்யும் படுகோலை—இராஜரத்னம்பிரபு விசாரிக்கப்படல்—மரணதண்டனை.

இராஜரத்னம் பிரபுவைப் பிடிக்க அனுப்பப்பட்ட ஆள் அவர்மேல் அனுதாபமுடையவன். ஆகையால் அவன் கையில் வாரண்டைவைத்துக்கொண்டு பார்ப்போர்க்குச் சந்தேகமுண்டாகத்தக்க விதமாகச் சுமார் ஒருமணி நேரம் அப்பிரபுவின் மாளிகைக்கெதிரில் கீழு மேலும் உலவிக்கொண்டிருந்தான். பிரபு அவனைக்கண்டும் கலவரத்தாலோ, உயிரின்மேல் வெறுப்படைந்தோ பின் பக்கமுள்ளவழியாய்த் தப்பித்துக்கொண்டு போய்விடாமல், கடைசியில் அவன் தன் ஆட்களோடு அவரைப் பிடிக்க மாளிகைக்குள் நுழைந்தபோது தாம் அறையிலுட்கார்ந்து ஏதோ புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தார்.

தன்னைப் பிடிக்கவந்ததை யறிந்ததே பிரபு சரி என்று தன்னை யொப்புக்கொடுத்துவிட்டுத் தன் மனைவியை யழைத்துச் சங்கதியைக் கூறினார். அவர் மனைவி புருடனைத் தன் உயிரினும் உயர்வாகக் கருதும் கற்பரசியாதலால் தன் கணவன் மனம் அதிக வியாகூலமடையலாகாதென்று தான் தைரியங்காட்டி நடந்துகொண்டாள். துரோகம் நடந்திருக்கும் சங்கதி இவருக்கும் மற்ற பிரபுக்களுக்கும் தெரியாதாதலாலும், தாம் சதியாலோசனை நடந்தவிடத்திற்கே சென்றிராததாலும், தாம் அதில் சம்பந்தப்பட்டிருப்பது கர்னல் இரவணப்பனுக்கு மட்டுமே தெரியுமாதலாலும் நம்மேல் ஒரு குற்றத்தையும் ருசுப்படுத்த முடியாதென்று கருதித் தைரியத்தோடிருந்தார். ஆனால் அரசன் முதலியவர்களடங்கிய இரகசிய சபையில்

அவர் விசாரிக்கப்பட்டபோது, கர்னல் இரவணப்பனே நுரைத்தன சாட்சியாகத்திரும்பி நடவாத அபாண்டங் களை யெல்லாம் கூறத் துணிந்திருக்கிறுன் என்பதை யுணர்ந்ததும் பேரிடி விழுந்தவர்போல் ஆவிசோர்ந்து விட்டார். அதனல் அவர் அச்சமயம் நிரபராதி கூறுவது போல் ஆத்திரத்தோடு நிராகரித்துப் பேசாமல் மனச் சோர்வோடு கூறினர். நெடுநேரம் விசாரணை நடந்தபின் அவர் இராஜனையும் அவன் சகோதரனையும் கொல்ல ஆலோசனை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கோட் டைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்.

அவரை யென்ன தந்திரமாக விசாரித்தும் தான் நிர பராதி யென்றும், நியாயப்படி தேச க்ஷேமத்தின் பொருட்டுச் சில நல்ல சீர்திருத்தங்களை யுண்டாக்கமட்டும் கருதியதாகவும் கூறினரேயன்றி மற்றப்படி அதில் சேர்ந் தவர்கள் யார் என்பதுகூடத் தனக்குத் தெரியாதென்று கூறிவிட்டார்.

இதற்கிடையில் வேறு சிலரும் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள். கடைசியில் இராஜ ரத்னம்பிரபு, இரங்கராஜுப் பிரபு முதலிய நான்கைந்து பிரதானமான பிரபுக்கள் விசாரணை செய்யப்படும் நாள் வந்தது. அத்தினத்திற்கு முன்னாள் ஜெயசிங்கன் நடக் கும் விசாரணையைப்பற்றி அரசனுகிய தன் தமையனிடம் பேசவேண்டி யிருந்தது. ஏனெனில், அப்பிரபுக்களெல் லாம் மிக்க செல்வாக்குடையவர்கள். அவர்களை யொழி த்து விட்டால் பிறகு தனக்கு விரோதிகள் ஒருவருமில்லை. அதாவது தான் அஞ்சத்தக்க விரோதிகள் இரார் கள் என்பது அவன் கருத்து.

ஜெயசிங்கன் அக்கருத்தோடு அரசனிடம் வந்து பேசிக்கொண்டிருந்த போது அரசன் வேடிக்கையாக எங்கேனும் போய் வரலாம் வா என்றான். ஜெயசிங்கன் "இல்லை யில்லை. இன்று நான் கோட்டைச்சிறைச்சாலைக் குச்சென்று சிறை வைக்கப்பட்டிருக்கும் ஆட்கள் எப்படி யிருக்கிறார்களென்று பார்க்க விரும்புகிறேன்" என்றான்.

அரசன்:—"ஓகோ கோ! ஏது உன் மனம் இப்படித் திரும்பி விட்டது. அவர்கள் இடுக்கணைக்கண்டு சந்தோஷமடைய நினைக்கிறாய் போலும். அப்படியாயின் நானும் வருகிறேன்" என்றான்.

ஜெயசிங்கன்:—"சே சே! அரசனாகிய நீ அங்கு வருவது தகுதியாகப்புலப்படாதே" என்றான்.

அரசன்:—"அரசன் போவதும் தகுதியல்லவெனின், பின்னால் அரசனாகப்போகும் இளவரசன் போவதும்தகாததே யாகும்" என்றான்.

கடைசியில் இருவரும் புறப்பட்டுப் படகேறி ஆற்றைக்கடந்து மறு கரையிலிருக்கும் கோட்டைக்குள் பிரவேசித்தார்கள். அக்கோட்டைக்குள் இராஜாங்கக் குற்றவாளிகளை யடைத்து வைக்கும் பயங்கரமான சிறைச்சாலை யொருபுறமிருக்க, ஒருபுறம் இராஜாங்கத்திற்குச் சொந்தமானவைகளும் புராதன கால முதல் அன்னிய நாடுகளைச்செயித்தபோது அங்கிருந்து கொண்டுவரப்பட்டனவுமாகிய விலை யுயர்ந்த அதிசயமான ஆபரணாதிகளும் மற்ற வஸ்துக்களும் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் இடமும் இருக்கிறது.

அரசன் அங்கு சென்று ஆபரணங்களைப் பார்க்கத் தொடங்கினான். ஜெயசிங்கன் சற்று நேரம் அரசனோடு கூடவிருந்து பிறகு, எனக்கு இவற்றைப்பார்த்துக்கொண்டிருக்கப்பிடிக்கவில்லை. நான் போய் மற்ற விடங்களைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டுச் சிறைச்சாலையிருக்கும் இடத்தை நோக்கிச்சென்றான். அங்கிருந்தகாவலன் இளவரசனைக் கண்டதும் திடுக்கிட்டெழுந்து நின்று வந்தன மளித்தான். இளவரசன் குற்றவாளிகளெல்லாம் சரியான காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்களா என்று விசாரிப்பவன் போல் அவனிடம் சம்பாஷிக்கத்தொடங்கி ஒவ்வொருவரைப் பற்றியும் அவர்கள் எவ்வாறு மனோநிலைமையிலிருக்கிறார்கள் என விசாரித்தான்.

காவலன் விடையளிக்கும்போது "இராஜரத்னம்

பிரபு காலை ஒன்பது மணிக்கு விசாரணைக்காக நீதிச் சபைக்குக் கொண்டுபோகப்பட் டிருக்கிறார்'' என்றான்.

ஜெயசிங்கன் ''நான் இரண்டொரு குற்றவாளிகளைக் கண்டு புத்தி கூறி அவர்கள் உண்மையை யொப்புக்கொள் ளும்படி செய்ய முயலலாமென்று கருதுகிறேன். ஒவ் வொருவர் அறையையும் காட்டு'' என்றான். காவலன் அவ்வாறே காட்டுவதாகக் கூறி ஜெயசிங்கனை யழைத் துக்கொண்டு சற்றுதூரம் சென்றபோது ஜெயசிங்கன் ''நீ வரவேண்டாம். எனக்கு இந்த இடங்களெல்லாம் நன்றாய்த் தெரியும். அவரவர்கள் இருக்கும் அறைகளை மட்டும் கூறிவிடு'' என்றான். காவலன் அவ்வாறே கூறி விட்டுத்திரும்பினான்.

ஜெயசிங்கன் உடனே துரிதமாக நடந்து இரங்க ராஜூப்பிரபு இருக்கும் அறைக்குச்சென்றான். அந்த அறைகளெல்லாம் வெளியில் பூட்டாமலே இருந்தன வாதலின் கதவைத்திறந்து கொண்டு அவன் உட்சென் றான்.

இரங்கராஜூப் பிரபுவுக்குச் சுமார் முப்பத்திநான்கு வயதிருக்கும். அவர் சுயநலங் கருதாது எப்போதும் தன் தாய் நட்டாருடை க்ஷேமாபிவிர்த்திக்காகவே பாடு படுபவர். அவருக்குத் தேக சுகம் குறைவாயிருந்ததால் ஜெயசிங்கன் சென்றபோது மஞ்சத்தில் படுத்துக்கொண் டிருந்தார். மஞ்சத்திற்குப் பக்கத்தில் ஒரு மேஜைமேல் ஒரு பெட்டி திறந்து வைக்கப்பட் டிருந்தது. அதில் பிரபு தேக சுத்தி செய்துகொள்ள வேண்டியதற்கு அவ சியமான, சௌகாரம், க்ஷவரக்கத்திகள், சீப்பு, முகம் பார்க்கும் கண்ணாடி, வாசனை எண்ணெய், உடைகள் முத லியவை யிருந்தன.

ஜெயசிங்கன் வந்ததை யறிந்ததே இரங்கராஜூப் பிரபு புத்தகத்தைத் திறந்தபடி பக்கத்திலிருந்த மேஜை மேல் வைத்து விட்டு உட்கார்ந்து இளவரசனுக்கு வந்தன மளித்தார்.

ஜெயசிங்கன்:—பிரபுவே! தங்கள் சீட்டு வந்து சேர்ந்தது.

அதில் கோரிக்கொண் டிருந்தபடி நான் தங்களைக் காணவந்தேன்.

இரங்கராஜ-ப்பிரபு:—தற்செயலாக என்னிடம் ஒரு கடிதம் சிக்கியது. அது என்னிடமிருப்பதைவிடத் தங்களிடம் இருப்பதே நலம் என்று தோன்றுகிறது.

ஜெய:—அக்கடிதம்? அது தங்களிடம் எப்படி வந்தது?

இரங்க:—"அது எப்படி என்னிடம் சிக்கியதென்பதைப் பற்றி இப்போது அவசியமில்லை. அது இச்சமயம் என்னிடமிருக்கிறது." என்று கூறிக்கொண்டே தலைப்புறம் திரும்பித் தலையணையின் கீழிருந்த கடிதத்தை யெடுத்து ஜெயசிங்கனுக்குக் காட்டினார். ஆனால் அவன் அதைப் பறித்துக்கொள்ளாதபடி கெட்டியாகப் பிடித்து எட்டவே வைத்துக்கொண்டு கரத்திலிருப்பதை யவனுக்குக் காட்டினார்.

ஜெயசிங்கன் அக்கடிதத்தைக் கண்டதும் அது தான் கர்னல் இரவணப்பனுக்கு எழுதிக்கொடுத்த கடிதம் என்று அறிந்து கொண்டான். உடனே அவனுக்குக் கோபமும் கலக்கமும் உண்டாயின.

"ஆ! அந்தக் கர்னல் இரவணப்பன் சண்டாளன். அவன் எந்தக்கட்சியில் சேர்ந்தாலும் அதற்குத் துரோகம் செய்யும் அயோக்கியன்" என்று மிக்க வெறுப்போடு கூறினான்.

இரங்கநாதம் பிரபு அவனை நோக்கி "இராஜகுமாரரே! இக்கடிதம் தங்களுக்குத் தெரிகிறதல்லவா?" என்று கூறிவிட்டு அவன் முகத்தை யுற்று நோக்கிக்கொண்டிருந்தார்.

ஜெயசிங்கன்:—"ஆம் தெரிகிறது. இது தங்களிடமிருப்பதால் தங்களுக்கென்ன நன்மை யுண்டாகும்?" என்றான்.

இரங்க:—"என்ன பயனா? இப்போது அக்கிரமமும் அபாண்டமுமான குற்றம் சாட்டப்பட்டு விசாரணையிலிருப்போர் அனைவரும் விடுதலை பெறுவதற்கு இது ஆயுதமாகும். இறந்தவர்களை யுயிர்ப்

பிப்பது அசாத்திய காரியமாயினும், இனி யிருக்கும் மற்ற பேரும் அத்தகைய கொலைத்தண்டனைக் காளாகாதபடி தடுக்க இது உதவி செய்யும். இளவரசே! நான் சுயநலங்கருதுகிறவன் என்று மதிக்க வேண்டாம். இப்போது தாங்கள் எனக்கு மட்டும் பூரணமன்னிப்பும் சுயாதீனமும் இன்னும் பெருஞ் செல்வமும் அளிப்பதாக வாக்களித்தால் நான் இதை யளித்து விடுவேனென்று தாங்கள் எண்ண வேண்டாம். இப்போது சிக்கிக்கொண் டிருக்கும் அனைவரும் மன்னிப்பும் விடுதலையும் பெற்றாலன்றி நான் இதை யளிக்கமாட்டேன். இதைக்கொண்டு என் வஞ்சத்தையேனும் தீர்த்துக்கொள்வேன் என்பது சத்தியம்'' என்று உறுதியாகத் தமக்குள் ஒரு தீர்மானங் கொண்டுள்ளவர் போல் மொழிந்தார்.

பிரபுவின் மொழிகளைக்கேட்ட ஜெயசிங்கன் உள்ளத்தில் மிக்க கலவரங்கொண்டு, "ஏது இரங்கராஜப் பிரபு! தமது குற்றத்தினால் தாம் அடையக்கூடிய தண்டனைக்குப் பயந்து தம் உயிரைக்காப்பாற்றிக் கொள்வதற்காக, தங்கள் நண்பர்களுக்காகப் பாடுபடுவர் போல் அபிநயம்செய்வதாகத் தெரிகிறது.'' என்றான்.

இரங்:—"இளவரசே! நான் மரணத்திற்கு எள்ளளவும் அஞ்சுகிறவனல்ல. ஆனால் தெய்வசங்கல்பமாக, வீணாக இழக்கும் உயிரைக்காப்பாற்றிக்கொள்ளத் தக்க ஆயுதம் கிடைத்திருக்கும்போது அதன் மூலமாக உயிரைக்காப்பாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமே. மேலும் அசத்தியவான்களுடைய பேச்சில் நம்பிக்கை வைத்து, கௌரவமான மனிதர் மேல் இல்லாத அபாண்டமான குற்றத்தைச்சாட்டி அவர்கள் உயிரை வாங்கத்துணிந்திருக்கும் போது, சிக்கிக்கொண்ட நிரபராதிகள் தங்கள் உயிரைக்காப்பாற்றிக்கொள்ளச் செய்யும் எவ்வித முயற்சியும் நியாயமேயாகும்'' என்றார்.

ஜெயசிங்கன் அவரோடு மேலுக்கு விடை கூறிக்

கொண்டே சிந்திக்கலானன். இப்போது அவன் பாடு மிக்க இக்கட்டில் இருக்கிறது. தானே இப்பிரபுக்கள் எல்லார் மேலும் கடுங்குற்றம் ருசுவாகும்படிச்செய்ய முதன்மையான சிரத்தையெடுத்துக்கொண்டு இப்போது திடீலென்று அவர்களை மன்னிக்கும்படி கூறினல் தன் தமையனுக்கும் மற்றபேருக்கும் மிக்க வியப்பும்சந்தேகமும் உண்டாகும். ஆனல் அக்கடிதத்தை இரங்கநாதம் பிரபுவிடமே யிருக்கும்படி விட்டுவிட்டால் பெரு மோசமாகும். அக்கடிதம் பகிரங்கத்திற்கு வந்து விட்டால், அந்தோ! அவனுக்குப் பெரிய ஆபத்தாக முடியும். தான் இராஜத்துரோகம் செய்ததாக நன்ருய் ருசுவாகிவிடும். மேலும் அசேதகனுகிய கர்னல் இரவணப்பனைத் தன் காரியஸ்தனுக வைத்துக்கொண் டிருப்பதாதவும் பகிரங்கமாய் யாவர்க்கும் தெரிந்து விடும். அதை யறிந்ததே முன்னமே தன்மேல் வெறுப்புக் கொண்டிருக்கும் பொது ஜனங்கள் மனம் பொங்கி இதுவே சமயம் என்று தன்னை யடியோடழித்து விடுவார்கள். என்ன செய்வான்? இதை இவனிடமிருந்து என்ன தந்திரத்தால் கைப்பற்றலாம் என்று சிந்தித்துக்கொண்டே யிருக்கையில் பிரபு வாசித்துக்கொண் டிருந்த புத்தகத்தின் மேல் அவன் பார்வை சென்றது.

அப்புத்தகம் பிரபு வாசித்துக்கொண் டிருந்த விடத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்தது என்று முன்னமே கூறினேம். திறந்திருந்த அப்பக்கத்தின் தலைப்பில் "தற்கொலை புரிந்து கொள்வதும் சில சந்தர்ப்பங்களில் நியாயமே" என்றதலைப்பெயர் குறிக்கப்பட்டிருந்தது. ஜெயசிங்கன் அதைக்கண்டு "பிரபுவே! தாங்கள் சந்தர்ப்பத்திற்குத்தக்க நல்ல புத்தகம் வைத்துக்கொண் டிருக்கிறீர்கள்" என்ருன்.

இரங்கராஜப்பிரபு "இளவரசே! இப் புத்தகம் தற்செயலாக எனக்களிக்கப்பட்ட புத்தகங்களில் ஒன்ருக வந்து சேர்ந்தது. ஆனல் அப்படி நிரபராதிகள் அக்கிரமமாக மரணதண்டனை யடைய நேர்ந்து நானும் என்

சிரசை யளிக்கும் காலம் வந்தால் அதற்குப்பயந்து நான் தற்கொலை புரிந்து கொள்வேனென்று கனவிலும் தாங்கள் கருதவேண்டாம். இப்போது காலதாமதமாகிறது. தங்களுடைய தீர்மான மென்னமோ, சீக்கிரத்தில் கூறுங்கள்'' என்றார்.

ஜெயசிங்கன்:—"தாங்கள் இதை யென்னிடம் கொடுத்து விடுங்கள். தாங்கள் கோரிய யாவும் செய்ய என்னால் கூடியவரையில் முயற்சி செய்கிறேன்'' என்றான்.

பிரபு:—"அப்படியல்ல. இது பிராணுபத்தான சமயம். இப்போது நிச்சயமின்றி வாய்ப்பேச்சை நம்புவது மோசம். தாங்கள் யாவருக்கும் மன்னிப்பு வாங்கி யளித்துவிடுங்கள். உடனே இதைத் தங்களிடம் கொடுப்பதாய்க் கடவுளறியச் சத்தியம் செய்கிறேன். தங்களை நம்பவில்லையென்று கருதவேண்டாம். எங்கள் ஆபத்து அப்படிப்பட்டதாக விருக்கிறது'' என்று கூறிக்கொண்டே அக்கடிதத்தைத் தலையணையின்கீழ் வைக்கத்திரும்பினர். அதற்காக அவர் சில விஞடிகள் அப்படித் திரும்பிக் குனிந்த வண்ணமாக இருக்க நேர்ந்தது.

ஜெயசிங்கன் அப்போது பெட்டியிலிருந்த க்ஷவரக் கத்திகளைக் கண்டான். உடனே அவன் மனதில் ஒரு விபரீதமான யோசனை யுதித்தது. அப்புறம் நடந்த சங்கதி ஒரு விநாடியில் முடிந்துவிட்டது. அதாவது அவன் அக்கத்திகளில் ஒன்றையெடுத்துப் பரிதாபமான அப்பிரபுவின் கழுத்தை யறுத்துவிட்டான். தேகசுகமில்லாதிருந்த அப்பிரபு சற்றும் எவ்வித ஆபத்தையும் எதிர்பாராமல் திரும்பிக் குனிந்த நிலையிலிருந்தபடியால் அவர் தடுத்துத் தன்னைக்காத்துக்கொள்ள முடியவில்லை.

ஜெயசிங்கன் ஆத்திரத்தோடும் பலத்தோடும் அப்பிரபுவின் குரல்வளையில் கத்தியைவைத்து அழுத்தி ஒரே மூச்சில், சுவாசக்குழல், பெரிய இரத்த நரம்புகள் யாவும் அடியோடு துண்டிக்கப்படும்வண்ணம் அறுத்துவிட்டான்.

இரங்கநாதம்பிரபு தாழ்ந்த சத்தமாய் ஒரே கூச்சலிட்டு உடனே சவமானுர். இரத்தம் வெள்ளம்போல் பெருகியது. கொலைபாதகனுடைய கரங்களில் இரத்தம் பட்டாலும் அவன் உடைகளில் படவில்லை. அவன் அப்பிரபுவைப் படுக்க வைத்துத் துரிதமாக அவர் வலக்கரத்தை கழுத்துக்கருகில் வைத்து அதன்மேல் இரத்தம்படச் செய்து கத்தி அக்கரத்திலிருந்து நழுவியதுபோல் தோன்றச் செய்வதற்காக அதை அக்கரத்தினருகில் வைத்துவிட்டுத் தன் கரத்தை நன்ருகத்துடைத்துக்கொண்டு தலையணைக்கீழிருந்த அக்கடிதத்தை யெடுத்துக்கொண்டு கதவை மூடி வெளியில் தாளிட்டுக்கொண்டு புறப்பட்டான்.

ஜெயசிங்கன் வெளியிலிருந்த காவலனேடு இரண்டு விநடிகள் பேசிவிட்டுக் குற்றவாளிகளைச் சாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி கூறி அவனிடம் ஒரு சவரனைப் பரிசாக அளித்துவிட்டுத் தன் தமையனுகிய அரசனிருந்த விடத்திற்குச் சென்ருன். அரசன் அதுவரையங்கிருந்த நகைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். தன் சகோதரன் வந்துவிட்டதே "சரி இனிப் புறப்படலாம்" என்ருன்.

உடனே இருவரும் கோட்டையிலிருந்து வெளிப்பட்டு ஆற்ருேரத்திற்குச் சென்று படகில் ஏறினுர்கள். அச்சமயம் கோட்டையிலிருந்து ஒரு காவலன் ஓடிவந்து "அய்யோ! இரங்கநாதம்பிரபு தற்கொலை புரிந்துகொண்டார். அவர் தம்மிடமிருந்த க்ஷவரக்கத்தியால் கழுத்தையறுத்துக்கொண்டார்" என்ருன். அதைக் கேட்டதே அரசன் மிக்க வியப்பும் கலக்கமுமடைந்து திடுக்கிட்டான்.

தானும் தன் சகோதரனும் வந்து பார்த்துவிட்டுப் போகும் அச்சமயத்தில் இச்சம்பவம் நேர்ந்தது ஒருவிதச் சந்தேகமான வதந்திக்கு இடமுண்டாகுமே யென்று அவன் மனதிற்குப் புலப்பட்டது. ஜெயசிங்கனும் அச்சங்கதியைக் கேட்டதும் மிக்க வியப்போடு திடுக்கிட்டவன்போல் அபிநயித்தான்.

அரசன் "நாம் வந்த சமயத்தில் இது நடந்தது என் மனதிற்கு நன்ருயில்லை" என்ருன். ஜெயசிங்கன் "ஆம் நம்மேல் துவேஷமும் கெட்ட எண்ணமும் கொண்டிருப் போர்க்கு நம்மேல் அபாண்டங்கூற இது இடங்கொடுக் கும்" என்ருன். அரசன் காவலனை நோக்கி "சிறைச் சாலை அதிகாரியிடம் கூறி அதற்காகச் செய்யவேண்டிய விஷயங்களைச் செய்யும்படி கூறு" என்று கட்டளையிட்ட தும் இருவரும் படகேறி யரண்மனைக்குத் திரும்பினர்கள்.

சிறைச்சாலை யதிகாரி சவமிருக்கும் இடத்தைப் பார்வையிட்டுத் தற்கொலை புரிந்துகொண்ட விஷயம் ருசு வாவதற்குத் தக்கபடி சவம் இருந்த நிலைமை, ஆயுதம் இருந்த இடம், அங்கிருந்த புத்தகம் திறந்துவைக்கப்பட் டிருந்தது, அந்தப் பக்கத்தில் "தற்கொலை புரிந்துகொள் வதும் நியாயமே" என்ற் விஷயம் கூறப்பட்டிருப்பதால், அதை வாசித்ததாலேயே அப்பிரபு தற்கொலை செய்து கொள்ளத் துணிந்திருப்பார் என்பது முதலிய யாவும் விவரமாகக் குறித்துவைத்தார்.

*　*　*　*　*

இதற்கிடையில் நீதிச் சபையில் இராஜரத்னம்பிரபு விசாரிக்கப்படுகிருர். வேணுமென்றே சின்னக் கட்சியில் அனுதாபமுடையோர்களே ஜூரிரர்களாக ஏற்படுத்தப் பட்டிருக்கிருர்கள். கர்னல் இரவணப்பனே முதல் சாக்ஷியாக விசாரிக்கப்பட்டான். அவன் இராஜரத்னம் பிரபுவிடம் சதியாலோசனைக்காரரால் அரசனையும் அவர் சகோதரனையும் கொலை செய்யவேண்டுமென்று செய்யப் பட்ட தீர்மானத்தைக் கூறியதாகவும், பிரபு தானும் தமது நண்பர்களும் அவற்றிற்குப் பூரணமாக ஒப்புக் கொள்வதாகக் கூறியதோடு அரசனிடம் வாங்கவேண்டிய நிபந்தனைகள் இன்னின்னவை யென்று தாமே குறித்துக் கொண்டு வருவதாகக் கூறியதாகவும், சதியாலோசனைக் காரர்களின் கருத்துகளைத் தானே பிரபுவிடம் வந்து கூறிப் பிரபு கூறும் மொழிகளைக் கேட்டுக்கொண்டுபோய் ஆலோசனைக்காரர்களுக்குக் கூறி வந்ததாகவும் புகன்ருன்.

அதற்குப் பிறகு, பிச்சப்பனும், செந்திலடிமையும் இன்னும் இருவரும் விசாரிக்கப்பட்டார்கள். அவர்களும் கர்னல் இரவணப்பன் கூறியதற்குப் பொருத்தமாகவே யாவும் கூறினார்கள். கடைசியில் நீர் குற்றத்தை யொப்புக்கொள்கிறீரா என்று நியாதிபதி பிரபுவைக் கேட்டார். அப்போது பிரபு,

"நியாயாதிபதிகளே! ஜூரர்களே! நான் எப்போதும் என் தாய் நாட்டின் க்ஷேமத்திற்குப் பாடுபடுகிறவனே யன்றி அரசருக்குத் துரோகம் செய்யவேண்டும் என்கிற எண்ணம் எனக்கு ஒருபோதுமே கிடையாது. இப்போது ஜனங்களின் க்ஷேமாபிவிர்த்திக்கு இன்றியமையாத சிலவற்றைச் செய்யவேண்டுமென்று அரசருக்குக் கூறவேண்டுமென்றுமட்டும் நான் எண்ணங்கொண்டிருந்தது உண்மையே. அது இரகசியமல்ல. அரசருக்கே தெரியும். எப்படியெனில், அதைப்பற்றி நேரே பேசக் கருதி அரண்மனைக்குச் சென்றேன். அரசரையும் கண்டேன். ஆனால் அரசர் என்னை யவமரியாதையாக நடத்தியனுப்பி விட்டார். என் வேண்டுகோளை யேற்றுக் கொள்ளவே மறுத்து விட்டார். இது எவ்வளவு நீதியானதென்பதை நீங்களே சிந்திக்கலாகும்.

இப்போது எத்தகைய கொலை பாதகத்திற்கும் அசத்தியத்திற்கும் அஞ்சாத துரோகிகள் இங்கு என்மேல் கூறியவை யாவும் அபாண்டமான மொழிகளேயென்று நான் கடவுள் முன் கூறுகிறேன். இவர்கள் இரொட்டிக்கிடங்கில் நடந்த சதியாலோசனையில் சேர்ந்திருந்ததாகத் தாங்களே யொப்புக்கொள்கிறார்கள். இப்போது இக்கோழைகள் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளவெண்ணித் தங்கள் நண்பர்களைக்காட்டிக்கொடுக்கத் துணிந்தார்கள். ஆயினும் உண்மையை மட்டும் கூறாமல் அபாண்டங்களைக்கூறும்படி யிவர்களை யார் தங்கள் சுயநலங்கருதித் தூண்டினார்களோ, அல்லது இவர்களே இவற்றை யெல்லாம் கூறினால் நமக்குச்சுலபமாக மன்னிப்புக் கிடைக்குமென்றெண்ணி இவ்வாறு கூறத்துணிந்

தனரோ அறியேன். இத்தகைய துஷ்டர்களின் பொய் மொழிகளை நம்பிப் பிறரை — நிரபராதிகளைத் தண்டிக்க நியாயத்தை நிலை நிறுத்த அமர்ந்திருக்கும் நீங்கள் துணிய மாட்டீர்களென்று பூரணமாக நம்புகிறேன். எல்லாருக்கும், நீதவான்களுக்கும், அரசர்களுக்கும் மேலான நியாயாதிபதியும் அரசர்க்கரசனும் ஒருவன் இருக்கிறான். அவன் தண்டனைக்குத் தப்ப ஒருவராலும் முடியாது'' என்று கோபத்தோடு கூறினார்.

நீதிச்சபையில் இவ்விஷயம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் இரங்கராஜுப்பிரபு தற்கொலை புரிந்து கொண்டார் என்ற சங்கதி அங்கு எட்டியது. கட்சி பேதத்தால் விரோதமுடைய சிலர் மட்டும் இதைக்கேட்டுச் சந்தோஷமடைந்தார்கள். மற்ற அனைவரும் மிக்க வியப்பும் துயரமும் பரிதாபமுமடைந்தார்கள். மற்ற தகவல்களியாவும் கேட்டபோது அனேகர்க்குப் பெருத்த சந்தேகமுண்டாய் விட்டது.

எவ்வாறெனின், அவரை நன்கறிந்தவர்கள் அவர் தற்கொலை புரிந்து கொள்ளத்தக்கவர் என்பதை யடியோடு நம்பவில்லை. அவர் உண்மையில் இந்த விஷயத்தில் பிரவேசிக்கவில்லை யென்றும், அரசனையும் அவன் சகோதரனையும் கொலைசெய்யக்கருதினார்கள் என்பது அடியோடு பொய் யென்றும் அவர்கள் அறிவார்கள். அப்படியிருக்க அவர் சிறைப்பட்ட மூன்று நாட்களுக்குள் பிராணத்தியாகம் செய்துகொள்ளத்தக்க அவ்வளவுமனம்முறியும் நிலைமைக்கு வந்து விடத்தக்க அத்தகைய கோழைத்தனம் அவரிடமில்லை யென்று அவர்கள் அறிவார்கள்.

இன்னொரு விஷயத்தால் அது தற்கொலையல்லவென்று அறிவாளிகளுக்கெல்லாம் புலப்பட்டது. அதாவது அவர் கழுத்து அறுபட்டிருக்கும் அளவை நோக்க அதில் பாதியறுப்பட்டபோதே மனிதனுடைய சுயாதீனம் போய் விடும். அதற்கு மேல் அறுக்க வல்லமையிராது போம். ஆகையால் முழு அளவும் அவரே அறுத்துக்கொண்டார் என்பது நடக்கக்கூடிய காரியமல்ல. இத

ணல் அனேகர்க்குச் சந்தேகம் உண்டாயிற்று. ஆனல் இரங்கராஜுப் பிரபுவின் விஷயமாக நடந்த மரண விசாரணையில் அவர் தற்கொலை புரிந்து கொண்டதாகவே தீர்மானிக்கப்பட்டது. அவர் வாசித்துக்கொண்டிருந்த அப்புத்தகமே பிரதான ருசுவாகநின்றது.

இராஜரத்னம் பிரபு மேற்கண்டபடி கூறி முடிந்ததும் நியாயாதிபதி விஷயத்தை ஜூரர்களுக்கு எடுத்துரைத்தார். முன்னடியே அவரை யொழித்து விடத்தீர்மானித்திருக்கும் நியாயாதிபதி, துரைத்தன லாயர், ஜூரர்கள் யாவரும் கூடிச்சட்டென்று விவகாரத்தை முடித்துவிட்டார்கள். அதாவது ஜூரர்கள் இரண்டொரு நிமிடங்கள் ஆலோசனை செய்வதுபோல் அபிநயித்து 'குற்றவாளி' என்ற பயங்கர வார்த்தையைக் கூறிவிட்டார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் இராஜரத்னம் பிரபுவின் மனைவியாகிய உத்தமியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளேனும் கூருமலிருக்க முடியவில்லை. அந்தக் கற்பரசி தன் துயரத்தை வெளியிட்டால் தன் கணவன் தைரியங் குன்றுவதோடு, தன்னைப்பற்றிய வியாகூலமும் சேர்ந்து அவர் வியாகூலம் அதிகமாகுமென்று தன் துயரை யடக்கிக்கொண்டும் அவருக்குத் தைரியத்தை யூட்டிக்கொண்டும் கடைசிவரையில் தன் கணவரை விட்டுப்பிரியாமலே யிருந்தாள். விசாரணை காலத்தில் அச்சீமாட்டி அருகிலிருந்து தன் கணவரின் நிரபராதத்தன்மையை நிரூபிப்பதற்காக சாக்ஷிகள் கூறும் வாக்கு மூலத்தின் குறிப்பை யெழுதிக்கொண்டிருப்பதைக்கண்ட அனைவரும் மனங்கரைந்து கண்ணீர் விட்டார்கள்.

ஜூரர்கள் குற்றவாளி யென்று கூறியதே நியாயாதிபதி மரணதண்டனை விதித்து விட்டார். மூன்ருவது நாள் இராஜரத்தினம் பிரபு பகிரங்கமாகச் சிரச்சேதம் செய்யப்பட்டார். குமுதவல்லிச்சீமாட்டியின் மைந்தனுகிய செல்வராஜு இராஜகுமாரனுகிய அரசன் புதல்வன் கடைசியில் தன் தந்தைக்கு எல்லாச்சங்கதிகளையும் எழுதியொப்புக்கொண்டு, இரகசியத்திலேயே மன்னிப்புப் பெற்றுன்.

73-வது அத்தியாயம்.

கர்னல் இரவணப்பன் ஸர்தார் சாந்தலிங்கம் பிள்ளையிடம் கோபித்தகடிதம்—ஜெனரல் உக்கிரசேனரைப்பற்றிய சங்கதிகள்—அரசனது மூடச்செய்கைகள்—அரசன் பீதி—அரசாங்கமாறுதல்—கர்னல் இரகுநாதர் மறுபடி ஆபத்தில் சிக்கிக்கொள்ளல்.

இதன் பிறகு இன்னும் மீதி இருந்த சிலரும் அக்கதிக்காளானதே விசாரணை முடிந்தது. கடைசியில் அரசாங்கசாக்ஷிகளாகிய பிச்சப்பன், கர்னல் இரவணப்பன் முதலியவர்கள் விடுதலை யடைந்தார்கள். கர்னல் இரவணப்பன் உடனே தான் ஜெயசிங்கனளித்த கடிதத்தைக் கொடுத்து வைத்திருந்த ஸர்தார் சாந்தலிங்கம் பிள்ளையின் மாளிகைக்குசென்றான்.

கர்னல் அவர் முன்னின்று அவர் முகக்குறியைக் கண்டதே அவன் மனதில் கலக்கமுண்டாயிற்று. தான் கொடுத்த கடிதத்தையளிக்கும்படி அவரைக்கேட்டதே அவர் வெளிப்படையான வெறுப்போடும் கோபத்தோடும், அவனை யுற்று நோக்கி,

“ஓ அயோக்கியனே! உன்னுடைய கோழைத்தனத்தையும் நம்பின உத்தம நண்பர்களைத் துரோகம் செய்வதோடு, எள்ளளவும் கடவுளுக்குக்கூட அஞ்சாது அவர்கள் மேல் அபாண்டமான குற்றத்தைக்கூறி அவர்களுக்கு மரணதண்டனை கிடைக்கச்செய்யும் பரமசண்டாளத்துவத்தையும் நன்றாய் வெளியிடும் அக்கடிதம் இப்போது இல்லை. உடனே இந்த விடத்தை விட்டு வெளிச்சென்று என்றைக்கும் என்முன் உன் ஆபாசவதனத்தைக்காட்டாதொழிதி. இன்றேல் என் பணியாளரை விடுத்து உன்னையுடனே பிடர் பிடித்து வெளியிற்றள்ளும்படி கட்டளையிடுவேன்” என்று கோபத்தனல் வீசும்பார்வையோடு கூறினார்.

அந்தோ! கள்ளனைக்கருந்தேள் கொட்டில் யாரிடம் கூறுவான். நாணத்தாலும் மனமுறிவாலும் வாய்பேசா வண்ணம் தடுக்கப்பட்டவனாய்த் தலை குனிந்து கல்லடி யுண்ட குக்கன் போல் அம்மாளிகையை விட்டுத்துரித மாக வெளிப்பட்டான்.

*　*　*　*　*

*　*　*　*　*

மேற்கண்ட சம்பவங்கள் நடந்து இரண்டு வருடங்கள் கழிந்தன. இதற்கிடையில் அன்னியநாட்டிற்குச்சென்ற கர்னல் இரகுநாதரும் அவர்மனைவியும், தமது உயர் பதவியை வகிக்கச்சென்ற ஜனரல் உக்கிரசேனரும் என்னவானார்கள்? என்பதையும், நமது உத்தம நண்பனாகிய ஸர்தார் உலகநாயகனும் அவன் கற்பரசியாகிய பத்தினியும் நமது கதாநாயகியுமாகிய அமராவதியும், அவள் அத்தையும் உலகநாயகன் தாயாருமாகிய இராஜாம்பாளும் என்ன நிலைமையி லிருக்கிறார்களென்பதையும் கவனிக்கவேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமாக விருக்கிறது.

கர்னல் இரகுநாதரைப்பற்றியும் அவர்மனைவியைப் பற்றியும் உலகநாயகனுக்கு அப்போதைக்கப்போது க்ஷேமசமாசாரம் வந்து கொண்டே யிருக்கிறது ஜனரல் உக்கிரசேனரிடமிருந்துநேரே சமாசாரம்வந்துகொஞ்சக் காலமாயினும் குறிப்பான சங்கதிகள் மட்டும் எட்டியிருந்தன. இவர் இலவணபுரியை விட்டுப்புறப்பட்ட ஒருவருடங்கழிந்தபோது அவர் தமது உயர்பதவியை இராஜிநாமாக் கொடுத்து விட்டு எங்கோ சென்று விட்டதாக வதந்தியுண்டாயிற்று. அச்சமயத்தில் அவரிடமிருந்து உலகநாயகனுக்கு ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்தில் அவர் தம்வேலையை யிராஜிநாமாக்கொடுத்துவிட்டு முன்பு தாம் உத்தியோகம் செய்திருந்த மச்சபுரி இராச்சியத்திற்குச்செல்வதாகவும், அச்சங்கதியை யொருவர்க்கும் கூறவேண்டாமென்றும் எழுதியிருந்தார். அதற்குப்பின் அவரிடமிருந்து ஒருவருடகாலமாகக் கடிதமே வரவில்லை.

ஆனல் மச்சபுரி இராச்சியம் சிறு இராச்சியமாயினும் அதிலிருந்து ஒரு வீரத்தன்மை பொருந்திய சேனை கிளம்பி மேற்கு நாட்டின் தென் பாகத்திலுள்ள பல நகரங்களைப்பிடித்துக்கொண்டதாகவும், அச்சேனையை நடத்தும் சேனதிபதி அபூர்வ சாமார்த்திய வானென்றும் பல பெரிய யுத்தங்கள் நடந்ததாகவும் அச்சமயங்களில் அச் சேனதிபதி யாவரும் பிரமிக்கத் தக்க அபூர்வசாமார்த்தியங்களைக்காட்டி ஒவ்வொரு யுத்தத்திலும் ஜெயமும் கீர்த்தியும் பெற்றதாகவும் சமாசாரங்கள் அடிக்கடி வந்து கொண்டிருந்தன. அச்சேனைத்தலைவனுடைய பெயர் வெளிவராவிடினும் உலகநாயகன் மட்டும் அந்த ஆசாமி நமது ஜனரல் உக்கிரசேனராகவே யிருக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டான். இவ்விஷயம் நன்கு விளங்குவதற்காக இடையில் நடந்த சில விஷயங்களை யீண்டு கூறவேண்டுவது அவசியம்.

இரொட்டிக்கிடங்குச் சதியாலோசனை விஷயம் வெளிப்பட்டு அனேகர் மரணதண்டனை யடைந்தும் நாட்டைவிட் டோடியும்போய் விட்டார்கள். இதனல் ஜெயசிங்கன் விரோதிகளெல்லாம் ஒழிந்தனர். இனித் தன் தமையனிறந்தால் பட்டம் தனக்கே கிடைக்கும் என்ற நம்பகம் அவனுக்குப் பூரணமாக வுண்டாய்விட்டது. கலகத்தில் சேர்ந்த பலரைப் பிடித்துத் தண்டனை யடையச் செய்யத் தான் மிக்க சிரத்தை யெடுத்துக் கொண்டதாகக் காட்டிக்கொண்டு தன் தமையனை அரசனிடம் மிக்கசெல்வாக்குப்பெற்றுன். அரசன் இவன் பேச்சின்படி பெரும்பாலான விஷயங்களில் நடக்க ஆரம்பித்து விட்டான். முன் புதுக்கடைத் திருவிழாவில் ஜனரல் உக்கிரசேனர் வந்திருந்தபோது இவன் அவரைப் பற்றி அரசனிடம் எவ்வாறு பேசினனென்பது நண்பர்க்கு நினைவிருக்கலாகும். அதனல் ஜனரல் விஷயத்தில் இவனுக்கு பீதியும் வெறுப்பும் அதிகமாக வுண்டு என்பது நன்கு விளங்கும்.

இதனல் கலகசம்பந்தமான விஷயங்கள் யாவும்

முடிந்ததே ஜனரல் உக்கிரசேனரை மேற்கு நாட்டின் இராஜப்பிரதிநிதி ஸ்தானத்திலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று அரசனை வற்புறுத்தத்தொடங்கினான். அரசனுக்கோ, ஜனரல் உக்கிரசேனர் மேற்குநாட்டை அரசன் ஆளுகையினின்று பிரித்து விட நான் கருதுவதில்லையென்று சத்தியவாக்களித்திருந்தபோதிலும், அவன் வஞ்சகமனதிற்கு நம்பிக்கை யில்லை. எச்சமயத்தில் என்ன செய்வாரோ என்ற பீதியே யவனுக்குள் இருந்தது. தன் சகோதரன் கூறுகிறபடியே அவரை யப் பதவியினின்றும் நீக்கி விடலாமென்றாலோ எங்கே இங்கே வந்து பெரிய கட்சியாரோடு சேர்ந்து கொண்டு தனக்குப் பெருந்தீங்கு விளைவித்து விடுவாரோ வென்ற பீதி யதிகமாக விருந்தது. ஜனரல் உக்கிரசேனருக்கு அரசன் செய்த மரியாதைகளும் மேலுக்குக் காட்டிய விசுவாசமும் யாவும் அவரிட முள்ள பெரும் பயத்தாலேயே யன்றி வேறில்லை. அரசனுக்கு அவர்மேல் மிக்க வெறுப்பே யன்றி அன்பு எள்ளளவும் இல்லை.

இதனால் அரசன் இரண்டிற்கும் மையமான ஒரு தந்திர ஏற்பாடு செய்தான். அதாவது, மேற்கு நாட்டிற்கு ஒரு மந்திராலோசனைச்சபையை ஏற்படுத்தினான். அதில் அமர்த்தப்பட்ட அவயவிகளெல்லாம் அரசனைச்சேர்ந்த கட்சியார். இவர்கள் மந்திராலோசனை சங்கத்தார் என்று அமர்த்தப்பட்டாலும் இராஜப்பிரதிநிதி இவர்கள் அங்கிகாரமின்றி இராஜாங்க முறையில் எதையும் செய்யக்கூடாது. இப்படிச்செய்வதால் ஜனரலை யப்பதவியிலிருந்து நீக்கவேண்டிய அவசிய மில்லாமலே அவர் சுயேச்சையாக எதையும் செய்யாதபடி செய்து விடலாகும் என்பதே அரசன் கருத்து.

மூடனாகிய அரசன் ஜனரல் உக்கிரசேனருடைய வீரத்தன்மையையும் எதற்கு மஞ்சாத துணிகரத்தையும் சிந்திக்காமலே இப்படிச்செய்துவிட்டான். அரசனாலமர்த்தப்பட்ட மந்திராலோசனை சபையார் மேற்கு நாடு சென்று இராஜப்பிரதிநிதியாகிய ஜனரல் உக்கிரசேன

ரைக்கண்டு அரசன் கொடுத்த உத்தரவை யவரிடம் அளித்தார்கள்.

அரசனுடைய ஏற்பாட்டைக் கண்ட ஜனரல் உடனே அவன் கருத்தை யறிந்து புன்னகை புரிந்து வந்தவர்களை நோக்கி அரசன் தன் மந்திரியால் தூண்டப்பட்டு இந்நாட்டின் க்ஷேமாபிவிர்த்திக்கு இடையூறு செய்தான். அதோடு என் சுபாவகுணத்தை யுணராது நடந்துகொண்டான். நான் இவ்வாறு கூறினேனென்று அரசனுக்கு அறிவியுங்கள். அதோடு இனி யொருகண மேனும் இந்நாட்டின் தலைமை யதிகாரத்தை வகித்திருப்பது அகௌரவமென்று கருதுகிறேனென்றும் அரசனைப்போல் பிறர் பின்னின்று சூத்திரக்கயிற்றால் ஆட்டினால் அவர்கள் கருத்துப்படி யாடும் தோற்பாவை நானல்லவென்றும், இச்காரணங்களால் என் பதவியை இராஜிநாமா கொடுத்துவிட்டு இந்த நாட்டின் சம்பந்தமான துரைத்தன முழுமையும் இதோ உங்களிடம் ஒப்புவித்து விட்டேனென்றும் தெரிவித்துவிடுங்கள் என்று கூறி, அவ்வாறே இராஜ்ஜிய பாரத்தை யவர்களிடம் ஒப்பித்து விட்டுத் தமது கூடவிருந்த ஸர்தார் பிரேமநாதன் ஸர்தார் இலக்ஷ்மணன் இருவரையு மழைத்துக்கொண்டு, தாங்கள் செல்லுமிடம் இன்னதென்று ஒருவருமறியா வண்ணம் எங்கோ போய்விட்டார்.

இலவணபுரியிலுள்ள அரசனுக்கு அச்சங்கதி தெரிந்ததே அவன் பேரிடிவிழுந்தவனானான். அவர் போனவிடம் தெரியாததாலே அரசனுக்குப் பின்னும் அதிக திகிலுண்டாகிவிட்டது. அவர் ஒருவரு மறியாவண்ணம் தன் தேசத்தில் வந்து சேர்ந்து இரகசியமாகவே பெரிய கட்சியாரைத்தூண்டி எச்சமயத்தில் திடீலென்று கிளம்பித் தனக்கு ஆபத்துண்டாக்கி விடுவாரோ என்று திகிலடைந்தான். ஒருமனிதன் காலின் கீழ் வெடிகுண்டு வைக்கப்பட் டிருக்கிறதென்பதை யறிந்து அதை விட்டு அப்புறம் நகர்ந்து தப்பித்துக்கொள்ளச் சக்தியற்றவனாக விருந்தால் அக்குண்டு எந்த வினாடியில் வெடிக்

குமோ வென்று அவனுக்கு எவ்வளவு பிராணபீதியுண்டாகிவிடும்? அரசன் மன நிலைமை யவ்வாறே யிருந்தது.

ஜெயசிங்கன் இரகசியமாக நாடெங்கும் வேவுகாரரை யனுப்பி ஜனரல் உக்கிரசேனர் மாறுவேடமணிந்து வந்திருக்கிறூரா வென்பதைக்கண்டு பிடித்தால் அவர்களுக்குப் பெரிய பரிசளிப்பதாய்க் கூறி யிருந்தான். ஆனல் வெளியில் உலகநாயகன் முதலியவர்களுக்கு மேல் கண்ட சங்கதிகள் ஒன்றுமே தெரியாது; ஜனரல் தம் பதவியை விட்டுவிட்டகாரணமே அவர்களுக்குத்தெரியாது.

இனி ஜனரல் உக்கிரசேனர் என்னவானுர் என்று கவனிப்போம்: அவர் மச்சபுரி இராஜ்ஜியத்திற்குச்சென்றதும் சேனதிபதி பதவியையடைந்து அந்த நாட்டிற்குத்தெற்கிலிருந்த பெரும்பாகமாகிய பூமியைச்செயித்துவிட்டார். அங்கு கடற்கொள்ளை யடிப்போரும், வழிப்பறி கொள்ளையடிப்போருமே ஏகமாகக் குடியேறி யிருந்தார்கள். அவர்களால் நமது இலவணபுரி யரசன் வசத்திலிருந்த மேற்குக்குடியேற்ற நாட்டிற்கும் அடிக்கடி பெரும் பீதி யுண்டாகிக்கொண் டிருந்தது.

ஜனரல் உக்கிரசேனர் அந்நாடுகளின் மேல் படையெடுத்து நகரத்தின் பின் நகரமாகப் பிடித்துக்கொண்டு கடைசியில் விஸ்தீரணமான தேசத்தைக் கைப்பற்றிக் கொண்டார். கொள்ளை யடிக்கும் கப்பல்களில் ஐம்பது கப்பல்களைப் பிடித்துக் கொண்டார். சுருக்கமாகக்கூறுகிறேம்: மச்சபுரி இராஜ்ஜியம் ஒரு பெரிய செல்வம் பொருந்திய இராஜ்ஜியமாகி விட்டது. அதன் எல்லைக்குள் ஏராளமான நிலக்கரி, இரும்பு, பொன், வெள்ளி முதலிய சுரங்கங்கள் இருந்தன. பூமியும் மிக்க செழிப்பான பூமி.

இதுகாறும் கடற்கொள்ளைக்காரர்களுக்கும், சாதாரணக்கள்ளர் துஷ்டர்கள் முதலியவர்களுக்கும், கொடுங்கோல் துரைத்தனத்திற்கும் இரவும் பகலும் திகிற்பட்டுக்

கொண்டிருந்த அந்நாட்டார், ஜனரல் உக்கிரசேனரால் தாபிக்கப்பட்ட நீதியான துரைத்தன முறைமையைக் கண்டு பரமானந்தம் கொண்டு யாவரும் ஏகோபித்துத் தாங்களே எங்களுக்கு அரசராக விருக்கவேண்டு மென்று பலவந்தப்படுத்தினார்கள். ஆயினும் ஜனரல் உக்கிரசேனர் அதை யொரு குடியரசாக்கினார். அப்போதும் அவர்கள் அவர் சம்பந்தம் இருக்கவேண்டுமென்று யாவரும் ஒரே மனதாக ஏகோபித்து அந்த இராஜ்ஜியத்திற்கு, அவர் நாமம் மறவாமலிருக்க, சேனபுர இராஜ்ஜியம் என்று நாமம் சூட்டியதோடு அக்குடி யரசு நாட்டிற்கு அவர் ஆயுள் பரியந்தம் அவரே தலைவராக விருக்கவேண்டு மென்றும், அவருக்குப்பின் யார் தலைவர் என்பதை அவரே நியமிக்கவேண்டு மென்றும் ஏற்பாடு செய்தார்கள்.

*   *   *   *   *   *
*   *   *   *   *

ஜனரல் உக்கிரசேனர் மேற்கு நாட்டிலுள்ள தன் பதவியை விட்டுவிட்டுச்சென்ற சுமார் ஆறுமாதங்கள் கழிந்தபின் இலவணபுரியரசனாகிய சுத்தசிங்கன் சுமார் ஒருவாரம் கொடிய சீதள நோயால் பீடிக்கப்பட்டு மரணமடைந்தான். அவன் இறக்குந்தறுவாயில் அவனுக்குக் குமுதவல்லிச்சீமாட்டியிடம் பிறந்த புத்திரனாகிய செல்வராஜன் நாட்டிலில்லை. அவன் நாட்டை விட்டு அன்னிய நாட்டிற்குச்சென்று வசிக்கும் பிரபுக்கள் முதலியவர்களிடம் சென்று அவர்களோடு சேர்ந்துகொண்டு அவர்க ளுதவியால் பட்டத்தை யடையச் சமயம் எப்போது வருமோ வென்று ஆலோசனை செய்துகொண்டிருந்தான்.

நமது உலகநாயகன் மட்டும் தன் தந்தையின் கட்டளைப்படி அவருடைய மரணசமயத்தில் அவரைக்கண்டு தனியே யவரிடம் கால்மணி நேரம் சம்பாஷித்தான். ஆனால் அப்போது என்ன நடந்ததென்பதை நாம் இப்போது கூறச்சமயமாக விருக்கவில்லை. ஒன்றுமட்டு

மியம்புவாம். அதாவது அரசன் தன் பிரியமைந்தனிடம் அரக்கு முத்திரை யிட்ட ஒரு கடித உறையை யளித்து, "நான் இறந்த பின் நீ ஜனரல் உக்கிரசேனரைக்கண்டு அவரிடம் இதைக் கொடு" என்றான்.

அரசன் இறந்ததே எவ்விதத்தடையுமின்றி ஜெயசிங்கன் சிங்காதனம் ஏறினன். உடனே அவன் ஜனங்கள் பீதிகொண்டிருந்தபடி பழைய மதக்கொள்கைகளையே கைப்பற்றத் தொடங்கினன். அந்தோ! சுயநல மொன்றையே கருதும் இழிகுணமுடைய மனிதர் பலர் மனதில் அவன் மேல் எவ்வளவோ வெறுப்பிருந்தாலும் மேலுக்குத் தாங்கள் நன்மைபெறவெண்ணி அரசனுக்குத்தக்க மந்திராலோசனைக்காரராக ஏற்படுவது இயற்கையே.

தன் காதலனுகிய அரசன் மாண்டதே மதனம்பாள் சீமாட்டி இனி யரண்மனை யெல்லைக்குள் வசிப்பது தகுதி யல்லவென்று கருதி முன்னமே தனக்கென வாங்கி யளிக்கப்பட்ட மாளிகையில் சென்று வசிக்கத்தொடங்கினுள். ஆனல் தன் கௌரவத்திற்காகக் கைம்பெண் உடையணிந்து காலங்கழிக்கலானுள்.

ஜெயசிங்கன் மனதில் அவள் மேல் வெறுப்புடையவனே. ஆயினும் அவள் மூலமாகப் பாஞ்சாலநாட்டரசனிடம் நமது சம்பந்தத்தை மிக்க அனுகூலமான நிலைமையில் வைத்துக்கொண் டிருக்கலாமென் றெண்ணி அவளிடம் சினேகபாவமாகவே நடந்துகொண் டிருந்தான்.

மேற்கண்டபடி சதியாலோசனை விஷயங்களியாவும் முடிந்து இரண்டுவருடங்கள் கழிந்தபோது ஒருநாள் ஜெயசிங்கனுகிய புது அரசன் ஒரு தர்பார் நடத்தினன். அது முடிந்தபின் யாவரும் சென்று சபை கலைந்தது. ஆனல் அரசன் மட்டும் வழக்கம்போல் முக்கியமான தனது மந்திரிமார் முதலியவர்களோடு பின்னும் சற்று நேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தான்.

அச்சமயம் அரசன் தன் சபையிலுள்ளவர்களை நோக்கி "அமைச்சர்களே! பிரபுக்களே! உங்களைப்

போன்ற அன்புடைய நண்பர்களை என் இராஜ்ஜிய பாரத்தை நிர்வகிக்க உதவிகளாகப் பெற்றிருப்பதற்காக நான் மிக்க சந்தோஷ மடைகிறேன். மேலும் இத்தகைய சமயத்தில்தான் ஒரு அரசனுக்கு விசுவாசமும் நம்பிக்கையுமுள்ள அமைச்சர்கள் வேண்டியது அவசியம். ஆ! இதோ வருபவர் விசேஷசமாசாரம் கொண்டு வந்திருப்பார் என்று நம்புகிறேன்'' என்றான்.

அச்சமயம் அங்கு வந்தவர் உள் நாட்டு மந்திரி. அவர் அரசனுக்குக் குனிந்து வந்தனம் செய்து, ''மகாராஜா! இப்போது நான் திருப்தியான சமாசாரம் என் அரசர் செவிகட்குக் கொணர்ந்திருக்கிறேன். மலைநாட்டில் தங்களுக்கு விரோதமாகக்கிளம்பிய ஸர்தார் அர்ச்சுனசிங் பிரபுவும் அவர்பேச்சினால் மயங்கி அவரோடு சேர்ந்து கொண்ட பரிதாபமான மனிதர்களும் அடியோடு தோல்வியடைந்தார்கள்.'' என்றார்.

அரசன் ''அவர்களைப் பரிதாபமான மனிதர் என்று கூறவேண்டாம். அர்ச்சுனசிங் பிரபுவும், மலைநாட்டிலுள்ள சில துஷ்டர்களும் அக்கிரமஸ்தர்களும், நமது நாட்டிலிருந்து தண்டனைக்குத் தப்பித்துக்கொண்டு ஒடிப்போய் அன்னிய நாட்டில் வசித்துக்கொண்டிருக்கும் பிரபுக்கள் முதலியவர்களோடு சேர்ந்து கலகம்செய்ய ஆலோசனை செய்துகொண்டிருக்கும் விஷயம் நாம் அறிந்ததுதானே. அப்பிரபு மலைநாடு முழுமையும் நமக்கு விரோதமாகக் கிளப்பிவிடலாமென்று கருதுகிறார்'' என்றான்.

இன்னொரு மந்திரி:—''அரசே! இச்சம்பவம் நேர்ந்தது ஒரு விஷயத்திற்கு நல்லதே. ஏனெனில் இதனால் மலைநாட்டிலுள்ளோர் தங்கள் இராஜபக்தியை வெளியிடுவதற்கு ஒருவழி யுண்டாயிற்று. இன்னும் அத்தகைய சதியாலோசனையைக் கருதும் அக்கிரமஸ்தருக்கும் இது நல்ல எச்சரிக்கையாகும்'' என்றான்.

அரசன் ''ஆம் ஆம். செல்வராஜனும் அவர்களோடு சேர்ந்து பட்டத்தை யபகரிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் அப்படிச் செய்தால் அர்ச்

சனவிங் பிரபு முதலியவர்களைப்போல் தோல்வியால் தலை கவிழ்ந்து செல்லவேண்டியதே'' என்றான்.

உள்நாட்டு மந்திரி "அதுமட்டுமல்ல, மரணமுமடைய வேண்டும்'' என்றான்.

அரசன் வியப்போடு "அப்படியாயின் அர்ச்சுனசிங் பிரபு யுத்தகளத்தில் மடிந்துவிட்டாரோ?'' என்றான்.

மந்திரி:—"அரசே! அவர் யுத்தத்தில் மடிந்து வீரசொர்க்கம் அடையத் தகுதியுடையவரல்ல. அவரும் அவருடைய பிரதான உதவித் தளகர்த்தரும் நமது சேனைகளிடம் சிக்கிக்கொண்டார்கள். ஒருமணி நேரத்திற்கு முன்புதான் ஒரு வேவுகாரன் அச்சமாசாரங் கொண்டுவந்தான். அந்த உதவித் தளகர்த்தன் தாங்கள் அறிந்த பெரிய கட்சியைச் சேர்ந்தவர்களில் மிக்க குரூரமான ஒருவனே. அவன் கர்னல் இரகுநாதன்'' என்றான்.

அரசன்:—"ஆ! இரொட்டிக்கிடங்குச் சதியாலோசனையில் தலைமை வகித்த அவன், முன்னமே தப்பித்துக் கொண்டுபோய்விட்டான். இப்போது இருவர் வேலையையும் சீக்கிரம் முடித்துவிடவேண்டும்'' என்றான்.

மந்திரியாகிய ஸர்தார் சாந்தலிங்கர் "அரசே! தாங்கள் சாதாரணமாக மிக்க தயையுடையவர்களே யாயினும் இவ்விஷயத்தில் தேச க்ஷேமத்தைக் கருதி அபாத்திரருக்குத் தயை காட்டமாட்டீர்களென்று நம்பியே அவர்கள் இருவரையும் உடனே சிரச்சேதம் செய்யும் கட்டளைகள் பிறப்பித்துச் சமுகத்திற்குக் கையொப்பத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன்'' என்று கூறிக்கொண்டு கட்டளைகளை யரசனிட மளித்தான்.

அரசன் உடனே யவற்றிற்குக் கையொப்பம் வைத்து முத்திரை யிட்டு மந்திரியிடம் கொடுக்க மந்திரி யதை ஆலசியமின்றி மலை நாட்டிற்கு அனுப்புவதற்காக விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

74-வது அத்தியாயம்

மச்சநாட்டைப்பற்றிய அதிசய சமாசாரம் — ஜெனரல் உக்கிரசேனரும் அரசனும்—கர்னல் இரகுநாதருக்கு மரணதண்டனை — அரசன் கையொப்பம் வைத்த இரண்டு கடிதங்கள் — ஜெனரல் உக்கிரசேனர் மலைநாட்டிற்குச் செல்லல்.

இரண்டொரு நிமிடங்கள்கழித்து அரண்மனைப் பிரதம காரியஸ்தர் அரசனிடம் வந்தார். அரசர் என்ன சமாசாரம் என்றதே அவர்,

"அரசே! நான் விசேஷ சமாசாரங் கொண்டுவந்திருக்கிறேன். மேற்கு நாட்டிலிருந்து அப்போதைக்கப்போது தக்க விவரமின்றி வந்துகொண்டிருந்த சமாசாரங்களெல்லாம் இப்பொழுது தெளிவாகவும் நிச்சயமாகவும் விளங்கிவிட்டன.

மச்சநாட்டில் ஒரு அபூர்வ சாமார்த்தியமுடைய சேனாதிபதி தோன்றி அதன் தென்பாகத்தில் இருந்த கடற்கொள்ளைக்காரர், கொலைபாதகர்கள் முதலிய துஷ்டர்களையெல்லாம் கருவறுத்து விசாலமான பூமியை — தங்களரசாக்ஷிக்கு உட்படாதிருந்ததை — வசப்படுத்திக்கொண்டார் என்பது உண்மையே. பெரியதும் செல்வம் பொருந்தியதும், பல பெரிய நகரங்களை யுடையதுமான மச்சநாடு இப்போது குடியரசு நாடாகிவிட்டது. அந்த ஜனங்கள் அனைவரும் ஏகோபித்து ஒரே மனதாக அச்சேனாதிபதியையே அந்தக் குடியரசின் முதல்தலைவராக ஏற்பாடு செய்தார்கள். இப்போது அத்தலைவர் மகாராஜாவின் துரைத்தனத்தோடு வர்த்தக விஷயமான சில உடன்படிக்கைகளைச் செய்துகொள்ள விரும்புகிறார்" என்றதே,

அரசன்:—"ஆ! இது மிக்க சந்தோஷ சங்கதியே. அத்தலைவர் செய்தது பேருதவி. அங்குள்ள கள்ளர்

கள் முதலிய துஷ்டர்கள் நமது இராஜ்ஜியத்தின் எல்லையோரத்தில் மிக்க தீங்குகளை விளைவித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பெரிய சேனையை நடத்தித் துஷ்டர்களை யடக்கி ஒரு பெரிய இராஜாங்கத்தைத்தாபித்து அதன் தலைவனாக விருப்பவர் யாராயினும் ஒரு அரசனுக்குச் சமதையானவரே. சமமரியாதைக் குரியவரேயாகும். இப்போது நம்மோடு உடன்படிக்கை யேற்பாடுகளைச் செய்ய அவர் தமது மந்திரிகளை யனுப்பி யிருக்கிறார். அச்சங்கதி தானே நீர் இப்போது நம்மிடம் கூறவந்தது?'' என்றான்.

காரியஸ்தர்:—இல்லை மகாராஜா! அத்தலைவரே வந்திருக்கிறார். அவர் நம் நகரத்திற்குவந்து ஒருமணி நேரமேயாயிற்று. இரண்டு நிமிடங்களில் சபைக்கு வருவார் என்று அவருடைய இரண்டு காரியதரிசிகள் இப்போதுதான் வந்து என்னிடம் மொழிந்தார்கள். அவர்கள் நமதுநாட்டார்கள்; கௌரவமான பெயர் பெற்றவர்கள்.

அரசன்:—''அத்தலைவர் பெயர் என்ன?'' என்றார்.

காரியஸ்தர் பதிலளிப்பதற்குள் வாயில் காப்போன் ''கனம்பொருந்திய ஜனரல் உக்கிரசேனர்'' என்று உரத்துக்கூவினன். உடனே மந்திரி ''ஆ! இதோ அத்தலைவரே வந்துவிட்டார்'' என்றார்.

மறுவினடி ஜனரல் உக்கிரசேனர் அரசன்முன் தோன்றினர். அவரைக் கண்டதே அரசன் மனதில் பழைய விஷயங்கள் பல தோன்றின. தன் மனதிலிருந்த வெறுப்பு பீதி யாவு மடக்கிக்கொண்டு ''இவரோடு விரோத முண்டாக்கிக்கொண்டால் நமக்குக் கெடுதியே யுண்டாகுமென்றுணர்ந்து முகமலர்ச்சியோடு அவரை நல் வரவேற்றான்.

இருவரும் சற்றுநேரம் சம்பாஷித்தபோது, அரசன் மேற்கு நாட்டில் நடந்த விஷயங்களைப்பற்றிய விவரம் கூறும்படி கேட்டான். ஜனரல் உக்கிரசேனர், தான் தன்

186486

பதவியை இராஜிநாமா கொடுத்ததற்குக் காரணத்தையாவது அந்த விஷயத்தைப்பற்றியாவது ஒன்றும் கூறவில்லை. தான் மச்சபுர இராஜ்ஜியத்தில் மறுபடி சேனுதிபதியாக அமர்ந்ததையும், அதன்பிறகு ஒருநல்ல சேனையைச் சேர்த்துப் பயிற்சிசெய்து, அந்த நாட்டின் தென்பாகத்திலிருந்த கடற்கொள்ளைக்காரர்களை யெல்லாம் அடக்கிவிட்டு அவர்களுடைய கப்பல்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்டதையும், பலவிடங்களில் நடந்த பெரிய யுத்தங்களைப்பற்றியும், செல்வம் பொருந்திய நகரங்களைக் கைப்பற்றியதைப்பற்றியும், மற்ற விஷயங்களைப்பற்றியும் கூறினார். ஆனால் நடந்த யுத்தங்களில் தன் துணையாகவிருந்த ஸர்தார் இலக்ஷ்மணன், ஸர்தார் பிரேமநாதன் இவர்கள் காட்டிய சாமார்த்தியங்களைப்பற்றிப் புகழ்ந்து கூறினுரேயன்றித் தன்னைப்பற்றி யொன்றுங் கூறவில்லை.

யாவுங்கேட்ட அரசன் இப்போது புதிதாய்த்தாபிக்கப்பட்ட குடியரசைத் தான் அங்கீகாரம் செய்துகொள்வதாகவும், அதன் தலைவருடைய பிரியப்படி வர்த்தக சம்பந்தமான உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளும்படி தன் மந்திரிகளுக்குக் கூறுவதாகவும் இயம்பியபின் தன் இராச்சிய விவகாரங்களைப்பற்றிப் பேசத் தொடங்கி,

“தலைவரே! நமது மலை நாட்டிலுள்ள ஒரு செல்வப் பிரபுவாகிய அர்ச்சுனசிங் பிரபு, இலவணபுரியிலிருந்து தண்டனைக்குத் தப்பியோடி அன்னிய நாட்டில் வசிக்கும் சிலரோடு சேர்ந்துகொண்டு, செல்வராஜ இராஜகுமாரனைச் சிம்மாதனத்திலேற்ற வேண்டுமென்ற சாக்கை வைத்துக்கொண்டு கலகம் விளைவித்து எல்லை யோரத்தில் சண்டை தொடுக்கத் தொடங்கினர்.

ஆனல் அவர்கள் தோற்கடிக்கப்பட்டு அர்ச்சுனசிங் பிரபுவும் அவர் பிரதான படைத்தலைவனும் நமது சேனைகளால் சிறையாக்கப்பட்டார்கள். ஆ! அந்தப் பிரதான படைத்தலைவன் தாங்களறிந்தவனே. ஒரு காலத்தில் தாங்கள் அவனோடு சினேகபாவமாக விருந்தீர்கள். அவன் பெயர் கர்னல் இரகுநாதன்” என்றான்.

ஜனரல் உக்கிரசேனர் அப்பெயரைக் கேட்டதும் மனதில் வியாகூலமுற்றாலும் அதையடியோடு மறைத்துக் கொண்டு மிக்க அலட்சியமாகக் கேட்பவர் போல்,

"ஹோ! முன்பு நான் இங்கிருந்தபோது இரொட்டிடங்கிலோ அதன் அருகிலோ அப்பெயருடைய மனிதன் ஒருவனிருந்தான்." என்றார்.

ஜெயசிங்கஇராஜன் "இப்போது ஜனரல் இருக்கும் உயர்பதவியால் கர்னல் இரகுநாதனையும் அவனைப்பற்றியவர்களையும் மிக்க அலட்சியமாகவே கருதுகிறது சுபாவமே" என்று தன் அற்பகுணம் போல் மதித்துக் கொண்டு, "ஆம் ஆம் அதே இரகுநாதனே. அவனும் நம் நாட்டிலிருந்து தப்பித்தோடி விட்டவர்களில் ஒருவனே. அவனும் அர்ச்சுனசிங் பிரபுவும் ஆகிய இந்த இராஜத்துரோகிகள் சிக்கிக்கொண்ட சமாசாரம் இரண்டு மணி நேரத்திற்கு முன்பே நமக்கு எட்டியது" என்றான்.

ஜனரல் உக்கிரசேனர் அசட்டையாகவே, "சரி அந்தத்துரோகிகளுக்குத் தக்க தண்டனை யளிக்கும்படி யுடனே கட்டளை பிறப்பித்து விட்டிருப்பீர்களென்று நம்புகிறேன்" என்றார்.

அரசன்:—அவர்களிருவரையும் உடனே சிரச்சேதம் செய்யும்படி உத்தரவு பிறப்பித்து நமது உள் நாட்டு மந்திரியிடம் சுமார் அரைமணிக்கு முன்பு தான் அளித்தோம். அவர் முன்னமே அவற்றைத் துரிதமாகச் செல்லும் ஆட்கள் மூலமாக அனுப்பி விட்டிருப்பார்" என்றான்.

ஜனரல்:—"இனி நான் வந்த விஷயத்தைப்பற்றித் தங்களபிப்பிராயத்தை வெளியிடக் கோருகிறேன்" என்றார்.

அரசன் "அதைப்பற்றி நாம் தனியாய்ப் பேசுவதே நலம் என்று கருதுகிறேன். தயவுசெய்து வாருங்கள்" என்று உக்கிரசேனரைத் தன் இரகசிய அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கு சென்ற பின் அரசன், "கனம் தலைவரவர்கள் கோரியபடி தங்களுக்குத் திருப்தி

யான விதமாகவே உடன் படிக்கைகளை ஏற்பாடு செய்ய யாதொரு தடையுமில்லை. ஆயினும் அதைச்சேர்ந்த நிபந்தனைகளில், தங்கள் இராச்சியத்திற்கும் மேற்கு நாட்டிலிருக்கும் நமது இராஜாங்கத்திற்கும் எப்போதும் சமாதானமே நிலைத்திருக்கவேண்டு மென்று ஒரு நிபந்தனை மட்டும் சேர்த்துக்கொள்ளக் கோருகிறேன்'' என்றான்.

அரசன் பீதியால் இவ்வாறு கூறுகின்றானென்று ஜனரல் அறிந்துகொண்டு "அரசே! இரண்டு இராச்சியங்களுக்கும் சண்டை நேரிடலாகும் என்று கருத ஒரு காரணமுமில்லாதிருக்கையில் இத்தகைய நிபந்தனை அனாவசியமாகவே தோன்றும். மேலும் மேற்கு நாட்டிலுள்ள தங்கள் இராச்சியப் போர்வீரர்களுக்காக எனது இராஜாங்கம் எள்ளளவு பீதியேனும் கொள்ளக் காரணமேயில்லை'' என்றார்.

இம்மொழிகளைக்கேட்ட அரசன் நாணங்கொண்டு "தங்களுக்குக் கோபமுண்டாக்க நான் கருதவில்லை. அதற்குமாறாக நான் தங்களை யெத்தகைய நம்பகத்தோடு கருதுகிறேன் என்பதற்குப் பிரத்தியட்ச அத்தாட்சியாக இதோ'' என்று கூறி எழுந்து சென்று அங்கிருந்த ஒரு பெட்டியைத் திறந்து இரண்டு கடிதங்களை யெடுத்து வந்து ஜனரலின் முன் அவற்றில் தன் கை யொப்பம் வைத்து அவற்றை யவரிடமளித்து,

"நண்பரே! இப்பத்திரங்களில் எனது கையொப்பம், இராஜாங்க முத்திரை, உள் நாட்டு மந்திரியின் கையொப்பம் யாவும் பூரணமாக விருக்கின்றன. இவற்றில் தங்களுக்குப்பிரியமானதை யெழுதிக்கொண்டாலும் அது நாம் எழுதிக்கொடுத்ததே யாகும். தங்களுக்கு எது பிரியமோ அதை யெழுதிக்கொள்ளுங்கள். தங்கள் கௌரவம் பொருந்தியதும், பெருந்தன்மையுடையதும், சத்திய நெறி தவறாததுமான குணத்தை நாம் அறிவோம். ஆதலால் நாம் தங்கள் விஷயத்தில் எத்தகைய கௌரவமும் நம்பிக்கையும் வைத்திருக்கிறோம் என்பதை வெளியிட, நமக்குத்தீங்காவது அவமானமாவது நேரிடத்தக்க வழி

யில் இப்பத்திரங்களை யுபயோகிக்க மாட்டீர்கள் என்ற பூரண நம்பிக்கையோடு இவற்றைத்தங்களிடம் இரகசியமாக அளிக்கிறோம்" என்றான்.

ஜனரல் உக்கிரசேனர் "அரசே! தாங்கள் காட்டிய அபாரமான இக்கௌரவத்திற்கும் நம்பிக்கைக்கும் தகுந்த விதமாக நடந்துகொள்ள நான் தவறமாட்டேனென்று பூரணமாக நம்புங்கள். தாங்கள் காட்டிய இந்த அன்பிற்குப்பின் நான் ஒருபோதும் தங்கள் இராச்சியத்தின் மேல் படை யெடுக்கமாட்டேன் என்று சத்திய வாக்களிக்கிறேன். இதற்கு முன்பே எனக்கு அந்த எண்ணமில்லை. என் இராஜ்ஜியம் இப்போதுதான் தாபிக்கப் பட்டது. இப்போது நான் அதன் க்ஷேமாபிவிர்த்தியிலேயே என் எண்ண முழுமையும் செலவழிக்கவேண்டியது அத்தியாவசியமாக விருக்கிறது. ஆகையால் என் நோக்கம் பூரணமான சமாதானத்தோடு நடக்கவேண்டுமென்பதே. நம்மிரு இராச்சியங்களுக்கும் எப்போதும் சமாதானமான நட்பே நிலைபெற்றிருக்கும்" என்று கூறிவிட்டு அரசனளித்த பத்திரங்களைப் பத்திரமாக வைத்துக் கொண்டார்.

ஜனரல் உக்கிரசேனரோடு செய்த ஏற்பாட்டைப் பற்றி அரசன் மிக்க சந்தோஷமடைந்தான். ஜனரல் அங்கிருந்து புறப்பட்டு நேராய்த் தமது மாளிகைக்குச் சென்றார்.

அச்சமயம் மாளிகையிலிருந்த உலகநாயகன், அமராவதி, இராஜாம்பாள் முதலியவர்கள் துயர்க்கடலில் ஆழ்ந்திருந்தார்கள். மலைநாட்டில் அர்ச்சுனசிங்கம் பிரபுவால் உண்டாக்கப்பட்ட கலகத்தில் கர்னல் இரகுநாதரும் சம்பந்தப்பட்டிருந்ததும் இருவரும் தோல்வி யடைந்து துரைத்தனச் சைனியத்தினிடம் சிக்கிக்கொண்டதும், இருவரையும் சிரசாக்கினை செய்யும்படி அரசன் கட்டளை பிறப்பித்த சங்கதியும் நகரெங்கும் துரிதமாகப் பரவிவிட்டது.

கர்னல் இரகுநாதர் அன்னிய நாட்டிலிருக்கிறாரென்றே உலகநாயகன் முதலியவர்கள் எண்ணிக்கொண்

டிருக்கிறார்கள். அவர் தாம் இரகசியமாக மலைநாட்டிற்குச் சென்று தம் நண்பரில் ஒருவரைப் பார்த்துவிட்டு வருவதாகத் தமது மனைவிக்குக்கூறிவிட்டு அர்ச்சுனசிங்கம் பிரபுவோடுபோய்க் கூடிக்கொண்டு அரசனுக்கு விரோதமாக யுத்தம் தொடங்கினார். தான் சென்ற சங்கதி யிரகசியமாக விருக்கவேண்டுமென்று மனைவிக்குக் கூறினார். எல்லா விஷயங்களிலும் தன் கணவரைப் பூரணமாக நம்பும் அவ்வுத்தமி அவர் வார்த்தைகளை நம்பிக்கொண்டு அவர் தன்னைவிட்டுச் சென்றிருக்கும் சங்கதியைத் தன் புத்திரிக்குக் கூடத் தெரிவிக்காமலிருந்தாள். இப்போது திடீலென்று அவர் மரணபத்தில் சிக்கிக்கொண்டிருப்பதைக்கேட்ட அவர் புத்திரி, தங்கை, மருகன் மூவரும் பேரிடி விழுந்தவர்கள்போ லானார்கள். அவர்கள் அத்தகைய துயரத்திலிருக்கும்போது ஜனரல் உக்கிரசேனர் வந்தார்.

ஜனரலைக்கண்டதே அவர்கள் ஒருவித ஆறுதலடைந்தார்கள். அவர்கள் வாக்கால் கூறியவற்றைக் கேட்டபின், ஜனரல் எடுத்ததே அவர்களுக்கு நம்பிக்கை கூறினால் ஆழ்ந்ததுயரம் திடீலென்று பூரண சந்தோஷமாக மாறுவதால் கெடுதியுண்டாகுமென்றெண்ணி, சாதாரணமாக "யாவற்றிற்கும் கடவுளிருக்கிறார், தைரியத்தை விடலாகாது. கடவுளை நம்பினால் அவர் கைவிடார்." என்பது முதலான சமாதான வார்த்தைகளைக் கூறிச் சற்றுநேரங் கழிந்தபின் அவருடைய உயிர் காப்பாற்றப்படுமென்று நம்பிக்கையோடு கூறினார்.

தமக்குள் ஒரு காரியத்தைச் சாதிக்கும் வல்லமை பூரணமாக விருந்தால்தான் ஜனரல் அதைப்பற்றிச் சாதாரணமாக ஆகட்டும் என்று கூறுவார். இந்த உண்மை உலகநாயகன் முதலியவர்களறிவார்கள். ஆகையால் ஜனரல் உக்கிரசேனர் கர்னல் இரகுநாதருடைய உயிரைக் காப்பாற்றத் தமக்கு ஒருவழி கிடைத்திருக்கிறதென்றும் அன்று இரவே அக்காரியார்த்தமாகத் தாம் மலை நாட்டிற்கு இரகசியமாகச் செல்வதாகவும் கூறியதைக் கேட்

டதும் அவர்கள் ஆனந்தக் கடலில் முழுகினவர்களாய் அவரை வாழ்த்தித் துதித்தார்கள்.

அன்று மாலை ஐந்து மணிக்கு ஜனரல், ஸர்தார் இலக்ஷ்மணனை யழைத்து இரகசியமாக "நீ யுடனே மதனம்பாள் சீமாட்டியின் மாளிகைக்குச்சென்று, நாம் இங்கு வந்திருப்பதைக் கூறியபின், கர்னல் குமரவேல் ஞானப்பிரகாசம் குருவை யெப்படியாவது கண்டு பேசவேண்டுமென்ற எண்ணங்கொண்டு மேற்கு தேசத்திற்கு வந்து மாறுவேடமணிந்து எப்படியோ அக்குரு வசிக்குமிடத்தைக்கண்டு பிடித்து அவனிடம் ஒரு நாள் முழுமையும் பேசிக்கொண் டிருந்தானென்பதையும், மறுநாள் குரு திடீலென்று பாரிசவாயுவால் தாக்கப்பட்டு மடிந்த சங்கதியையும், அவன் வந்திருந்த சங்கதி யறிந்து அவனை யுடனே சிறைசெய்ய உத்தரவு பிறப்பித்தபோது அதற்கு முன்பே அவன் ஓடிவிட் டிருந்தானென்றும், நாம் இந்த நாட்டிற்கு வந்தபோது தற்செயலாக அவனைத் துறைமுக நகரத்தில் கண்ட சமாசாரத்தையும் அச்சீமாட்டிக்குக் கூறி, இப்போது அவன் அச்சீமாட்டியிடம் வந்து, தனக்கு அக்குருவின் மூலமாக ஏதேனும் இரகசியம் தெரிந்து விட்டதாய்க்கூறி அச்சீமாட்டிக்குப் பயமுறுத்தி அவளிடம் பணம் பறிக்கமுபல்வானுயின் நல்ல வார்த்தைகளாலேயே தந்திரமாய்ப்பேசி இரண்டு மூன்று நாட்கள் வரை அவனுக்கு அவன் கேட்கிறபடி ஆசை காட்டி நம்பிக்கை கூறிக்கொண் டிருக்கும்படிக்கும், அதற்குள் நான் மலைநாட்டிலிருந்து திரும்பி வந்து அவனைக் கவனித்துக் கொள்வேன் என்றும் கூறு." என்றார்.

ஸர்தார் இலக்ஷ்மணன் அவ்வாறே யுடனே மதனம்பாள் சீமாட்டியின் மாளிகைக்குச்சென்று ஜனரல் கூறிய சங்கதியாவும் விளம்பி விட்டுத் திரும்பினான். அதே இரவு சுமார் எட்டு மணிக்கு ஜனரல் உக்கிரசேனர் ஸர்தார் இலக்ஷ்மணன் ஸர்தார் பிரேமநாதன் இருவரோடும் புறப்புட்டு மலைநாட்டை நோக்கிச் சென்றார்.

அரசனுடைய சிரச்சேதக் கட்டளை பகல் சுமார்

இரண்டுமணிக்கே தக்க ஆள் வசம் மலைநாட்டிற்குக் கொண்டுபோகப்பட் டிருக்குமென்று ஜனரல் அறிவார். ஆகையால் நல்ல பலமான குதிரைகள் மேல் அவரும் அவர் உத்தியோகஸ்தர்களும் ஏறிச்சென்றார்கள்.

தாம் மலைநாட்டிற்குச் செல்லும் சங்கதி யரசனுக்குத் தெரிந்தால் என்ன வேலையாகச் செல்கிறார் என்பதை யூகித்துக்கொண்டு அவர்காரியம் சித்திபெருவண்ணம் ஏதேனும் செய்வான். ஆகையால் தான் வந்த பிரயாண அலுப்பால் சொல்ப அசௌக்கிய மடைந்திருப்பதால் அறையை விட்டு வெளிவருவதில்லை யென்றே தான் திரும்பி வருமட்டும் கூறிக்கொண்டிருக்கும்படி உலகநாயகன் முதலியவர்களுக்குக் கூறிச் சென்றார். உலகநாயகன் அவர்கூடச் செல்லாததற்கும் அதுவே காரணம்.

75-வது அத்தியாயம்.

கர்னல் குமரவேலும் மதனும்பாளும்—பயங்கரமான பழைய இரகசியம்—கர்னலின் துஷ்டச் செய்கை—மதனும்பாளின் தந்திரமான வஞ்சம்—துஷ்டன் தன் நடக்கைக்குத் தக்க தண்டனை யடைதல்.

இச்சம்பவம் நடந்த இரண்டாவது நாள் மாலை மதனும்பாள் சீமாட்டி தன் அறையில் உட்கார்ந்து சிந்தித்துக்கொண் டிருந்தாள். ஸர்தார் இலக்ஷ்மணன் வந்து கூறிய விஷயத்தால் அவள் மிக்க கலக்க மடையவில்லை. ஏனெனில் ஞானப்பிரகாசம் இறந்து போனது அவளுக்கொரு சந்தோஷமான சமாசாரம். அதோடு ஜனரல் உக்கிரசேனர் சொல்லி யனுப்பிய சங்கதியால் அவளுக்குத் தைரிய முண்டாயிருந்தது. ஆயினும் குற்றமுள்ள நெஞ்சாதலால் கலக்கமே.

மதனும்பாள் சீமாட்டி இத்தகைய நிலைமையிலிருக்கும் போது, ஒரு வேலையாள் வந்து, "சீமாட்டியே!

யாரோ ஒருவர் வந்து தங்களை யவசியமாகக் கண்டுபேச வேண்டு மென்கிறார். பெயரைக் கூறுவது அனவசிய மென்கிறார்'' என்றான்.

மதனம்பாள் அது யாரென்று அறிந்து கொண்டாள். அவனைக்கண்டே தீரவேண்டும். வேறு வழியில்லை. ஆதலால் "சரி அவரையுள்ளே யனுப்பு'' என்றாள். இரண்டொரு நிமிடங்களில் கர்னல் குமரவேல் சீமாட்டியின் முன் வந்து நின்றான். கடந்த இரண்டு வருடங்களில் அவன் தேகம் மிக்க மாறுதலடைந்து, அவன் உருவம் ஒரு பேய் உருவம்போ லிருந்தது.

சீமாட்டி யவன் உருவத்தைக் கண்டு மிக்க வியப்படைந்து உற்றுநோக்கினாள். கர்னல் குமரவேல் "சீமாட்டியே! தாங்கள் என்னை யாரென்றறியவில்லை, அல்லது என் உருவத்திலுண்டான மாறுதலைக்கண்டு பிரமிப்படைகிறீர்கள்'' என்றான். சீமாட்டி "நீர் யாரென்றறிந்து கொண்டேன். என்னிடத்தில் என்ன அலுவலாக வந்தீர்?'' என்றாள்.

கர்னல் குமரவேல்:—"நான் சிறைச்சாலையிலிருந்து விடுதலை யடைந்து இரண்டு வருடங்களாகின்றன. அச்சமயம் எனக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை என் நண்பர்களில் ஒருவரான ஒரு சீமாட்டி யளித்தார்கள். அவர்கள் பெயரை யிப்போது கூறுவிட்டாலும் பின்னால் கூறவேண்டி நேரிடும். அதன் பிறகு நான் ஒரு ஆளைத் தேடிக்கொண்டு சென்றேன். அவன் தங்களுக்குத் தெரிந்தவனே. அவன் பெயர் ஞானப்பிரகாசம் குரு'' என்று கூறிவிட்டு அவள் மனதின் கலக்கத்தை யறிய அவள் முகத்தை யுற்று நோக்கினான்.

மதனம்பாள் எவ்விதக்கலக்கமு மடையாதவள் போல் இருந்தாள். கர்னல் குமரவேல் மேலும் கூறத்தொடங்கி,

"நான் முன்பு அக்குருவைத் தேடிக்கொண்டு பாஞ்சால நாட்டிற்குச் சென்றேன். அங்கு தங்கள் சூழ்ச்சியால் நானும் அக்குருவும் பரிதிபுரப்பாதாளச்சிறையில்

அடைக்கப்பட்டோம். நான் முன் கூறிய சீமாட்டியின் முயற்சியால் அச்சிறைச்சாலையிலிருந்து கடைசியில் நாங்கள் தப்பித்துக்கொண்டோம். நான் மிக்க கஷ்டப்பட்டு ஞானப்பிரகாசம் குருவை யிந்த நகரத்திற்கு அழைத்து வந்தேன்; ஆனால் கெட்ட காலத்தால் ஒருவரையொருவர் பிரிய நேர்ந்தது. அக்குரு ஜனரல் உக்கிரசேனரால் மேற்கு நாட்டிற்குக் கொண்டு போகப்பட்டார்.

அதன் பிறகு நான் அச்சீமாட்டியின் உதவியால் அவனைத்தேடிக்கொண்டு மேற்கு நாட்டிற்குச் சென்று அவனுடைய இருப்பிடத்தைக்கண்டறிந்தேன். அதற்கே எனக்கு மிக்க நாள் சென்றதோடு பொருட்செலவும் நேர்ந்தது. ஜனரல் உக்கிரசேனர் அவனை மிக்க பந்தோபஸ்தான பார்வையில் வைத்திருந்தாரானதால் நான் அவனிடம் போய்ப்பேச முடியவில்லை. இப்படி யிருக்கையில் அவர் திடீலென்று மேற்கு நாட்டின் இராஜப் பிரதிநிதியாகிய உத்தியோகத்தை யிராஜி நாமா கொடுத்து விட்டுப் போய் விட்டார். ஞானப்பிரகாசம் குருவைத் தம்மோடு கூடவே கொண்டு போய் விட்டார்.

அவர்கள் எங்கே சென்றார்களென்று என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. பிறகு மச்ச நாட்டுத் துரைத்தனத்தார் தென் நாடுகளின்மேல் படை யெடுத்துச் சென்று நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டதையும் அச்சேனாதிபதியின் அற்புத சாமார்த்தியங்களையும் கேட்டதே என் புத்திக்கு உண்மை புலப்பட்டது. அதாவது அத்தகைய அதிசய சாமார்த்திய முடைய ஆள் ஜனரல் உக்கிரசேனராகவே யிருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. அச்சமயம் என்னிடமிருந்த பணம் அனைத்தும் செலவழிந்துபோய் நான் கையில் காசில்லாத நிலைமையி லிருந்தேன். வியாதி யொருபக்கம். அங்கிருந்த சிலர் தருமத்திற்கு உதவி செய்திராவிட்டால் மடிந்துபோயே யிருப்பேன். அவர்கள் உதவியால் கப்பலேறி மச்சநாட்டிற்குச் சென்று அதன்பிரதான நகரவோரத்தில் பதுங்கி யிருந்து கடைசியில் ஞானப்பிரகாச குரு இருக்கு மிடத்

தைக் கண்டுபிடித்தேன். அவன் நகரவோரத்தில் ஒரு அழகான சிறிய வீட்டிலிருந்தான். கடைசியில் அவனைச் சந்தித்தேன். அவன் இருந்த நிலைமை யவனுக்குத் திருப்தியாக இருக்கவில்லை. அவன்மேல் சதா காவல் வைக்கப்பட்டிருந்தது. யுத்தம் நடக்கும்போதும் அவன் கூடவே கொண்டுபோகப்பட்டதால் அடிக்கடி பகல் இரவென்றும் வெயில் மழை யென்றுமில்லாமல் இடம் மாறுதல், ஆகாரவசதியின்மை முதலிய பல கஷ்டங்களை யனுபவிக்க நேர்ந்ததால் அவனுக்கு ஜனரல் உக்கிரசேனர் மேலும் தன் நிலைமையிலும் மிக்க வெறுப்பு தோன்றியிருந்தது. அப்படி யிருந்தும் அவன் மேலுக்குப் பூரண திருப்தியுள்ளவன்போலவே காட்டிக்கொண் டிருந்தான். அப்படி யிருந்தால் கடைசியில் தன்மேல் காவலில்லாமல் விட்டுவிடுவார்கள், பிறகு சமயம் பார்த்து ஓடிப்போய் விடலாமென்பது அவன் எண்ணம்.

கடைசியில் அவன் அவ்வாறே காவலில்லாமல் விடப்பட்டான். அதனால் நான் கஷ்டமின்றி அவனைச் சந்தித்துப்பேச நேர்ந்தது. நான் அவனுக்கு உதவிசெய்து அவனை நம்நாட்டிற்கு அழைத்து வருவதாக வாக்குறுதி கூறினேன். அதைக் கேட்டதே அவன் மிக்க ஆனந்தமடைந்தான். அவன் மோசக்காரன். ஆகையால் இங்கு வந்தபின் தனக்குத் தெரிந்த இரகசியத்தால் தான்மட்டுமே பலனடையக் கருதுவானுதலால் அங்கேயே அந்த இரகசியம் முழுமையும் என்னிடம் கூறிவிடவேண்டுமென்று அவனைப் பலவந்தப்படுத்தினேன்.

அதன்மேல் அவன் யாவும் கூறிவிட்டான். பிறகு இருவரும் சமயம்பார்த்துக் கப்பலேறிவந்துவிட விருந்தோம். அதற்குள் அக்குரு திடீலென்று ஒருநாள் பாரிச வாயுவால் மடிந்துபோனுன். அங்குள்ள சில தோட்டக்காரரின் உதவியால் நான் கப்பலேறி நம்நாட்டுத் துறைமுகத்தில் வந்து இறங்கினேன். என்னிடம் ஒரு காசுமில்லை. கால்நடையாகவே அங்கிருந்து நடந்து வந்தேன். வழியில் யாசகம்செய்து ஆகாரம் சம்பாதித்துக்கொண்

டேன். வழியில் அரசன் இறந்துபோன சங்கதியைக் கேள்விப்பட்டேன். இப்போது குமுதவல்லிச் சீமாட்டி அரசனிடம் செல்வாக்குப் பெறவேண்டிய வேலையில்லை. ஆகையால் முதலாவதாகத் தங்களையே காணவந்தேன்'' என்றான்.

மதனம்பாள்:—"என்னைக் காண வரவேண்டியதேன் ?'' என்றாள்.

கர்னல் குமரவேல்:—"தாங்கள் அவ்வாறு கேட்பதாயின் கூறுகிறேன். தங்கள் மரியாதை கௌரவம் செல்வாக்கு யாவும் என் கரத்திலிருக்கின்றன.

சுமார் இருபது வருடங்களுக்கு முன் தாங்கள் தங்கள் தந்தையிடம் இருந்தபோது கப்பற்சேதமடைந்த ஒரு வாலிபன், இந்த நாட்டான், தங்கள் வீட்டில் வந்து சேர்ந்தான். அவன் மிக்க வனப்புடையவனாக விருந்தான். உங்கள் இருவர்க்கும் நட்புண்டாகிக் கடைசியில் காதலர்களாகி விட்டீர்கள். தாங்கள் கருவுற்றீர்கள். அதன் பிறகு தங்கள் தங்கை பருதிபுரத்திலிருக்கும் சுற்றத்தாரிடம் அனுப்பப்பட்டுத் தாங்கள் சந்நியாசி மடத்திற்கு அனுப்பப்பட்டீர்கள். காலம் செல்லச் செல்லத் தங்கள் நிலைமை மறைக்கக்கூடியதாக இல்லை'' என்று கூறிவிட்டு மதனம்பாளின் முகத்தை யுற்று நோக்கினான்.

அச்சீமாட்டியோ தன் மனோ நிலைமை எவ்வாறாயிருந்தாலும் வெளிக்கு ஒன்றும் காட்டாமல் தைரியத்தோடு பேசாமலிருந்தாள்.

கர்னல் கூறத்தொடங்கி:—ஆம் தங்கள் கர்ப்பத்தின் நிலைமை மறைக்கக்கூடாததாய் விட்டது. ஒருநாள் இரவு தாங்கள் கள்ளத்தனமாக மடத்திலிருந்து வெளிப்பட்டுக் கள்ளத்தனமாகவே வீட்டிற்குள்ளும் நுழைந்து தங்கள் காதலனிருக்கும் அறைக்குட் சென்றீர்கள். அங்கு தங்கள் காதலரோடு கலந்து பேசி இருவரும் எங்கேனும் ஓடிவிடுவோம் என்றீர்கள். தங்கள் காதலர் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர் தம்மிடம் காசில்லாததையும் வேறு எவ்வித

வருமானமுமில்லாததையும் கூறி, அப்படிச் சென்ருல் இருவருக்கும் மிக்க கஷ்டங்கள் நேரிடுமென்றும் அதோடு தங்கள் தந்தைக்கு அதனுல் அவமானமும் மிக்க வியாகூலமு முண்டாகுமென்றும், அவருக்குத் தாம் அவ்வாறு செய்வது பெரிய நன்றியற்ற செய்கையாகுமென்றும் கூறி மறுத்துவிட்டார். அப்போது இருவருக்குமுண்டான மனத்துயரம் சொல்லத்தரமல்ல. கடைசியில் இருவரும் சென்று தங்கள் தந்தையின் பாதங்களில் விழுந்து நடந்த சங்கதிகளைக் கூறி அவரை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு நேரிடக்கூடிய அவமானத்தைத் தடுப்பதற்காக உடனே இருவரும் மணம் செய்துகொள்ள அனுமதி யளிக்குமாறு பிரார்த்திக்கலாமாவென்று ஆலோசனை செய்தீர்கள்.

இருவரும் இத்தகைய மிக்க குழப்பமான ஆலோசனையிலிருக்கும்போது தங்களுக்குத் திடீலென்று ஒரு சிந்தனை யுதித்தது. அச்சமயம் தாங்கள் தங்களுக்கு அவமானம் நேருவதாயின் பிராணத்தியாகம் செய்து கொள்வதென்றெண்ணிக் கொடிய பாஷாணம் கொஞ்சம் கைவசத்தில் வைத்துக்கொண்டிருந்தீர்கள். சட்டென்றெழுந்து தங்கள் காதலரின் அறையை விட்டு மெதுவாகச் சந்தடிசெய்யாமல் தங்கள் தந்தை யிருக்கும் அறைக்குச் சென்றீர்கள். அப்போது தந்தை நல்ல நித்திரை செய்துகொண்டிருந்தார். அவர் வாய் திறந்தபடி யிருந்தது. பாஷாண புட்டியை யெடுத்து அவர் வாயில் விட்டுவிட்டீர். உடனே அவர் சவமானுர். தாங்கள் திரும்பித் தங்கள் காதலரிடம்சென்று "இப்போது நாம் இருவரும் மணம் புரிந்துகொள்ளவேண்டுமென்று அனுமதி பெற எனக்குத் தந்தை யொருவரில்லை. அவருடைய செல்வம் முழுமையும் இப்போது நம்முடையதே" என்று கூறினீர்கள். தங்கள் காதலரின் குணத்தைப்பற்றித் தாங்கள் தவருக அபிப்பிராயங்கொண் டிருந்தீர்கள்.

நடந்த சங்கதியைக் கேட்ட தங்கள் காதலர் தங்கள்

மேல் எவ்வளவு அளவுகடந்த அன்பு கொண்டாரோ அதற்குப் பதின்மடங்கு அதிகமான வெறுப்பு இப்போது கொண்டார். "பெற்ற தந்தையைக் கொலை புரிந்தவளை நான் ஒருபோதும் மணம் செய்து கொள்ளவே மாட்டேன்" என்று ஒரே பிடிவாதமாகக் கூறிவிட்டார்.

அப்போது தங்கள் மனதில் உண்டான திகிலுக்கும் துயரத்திற்கும் ஓர் அளவில்லை. ஒரே விநாடியில் ஒரு பாதகச் செய்கையால் தந்தையையும் காதலரையும் ஏககாலத்தில் இழந்து விட்டீர். உடனே தாங்கள் தங்கள் காதலர் பாதங்களில் விழுந்து தங்களை மன்னிக்கவும் காப்பாற்றும் படிக்கும், தங்கள் குற்றத்தை வெளியிட்டுத் தங்களுக்குப் பிராணபத்தை யுண்டாக்காதபடிக்கும் வேண்டிக்கொண்டீர்கள்.

அவர் தாம் தங்கள் மேல் வைத்திருந்த காதலுக்காகவும் பிறக்கப்போகும் குழந்தைக்காகவும் தங்கள் பாதகச் செயலை வெளியிடுவதில்லையென்று வாக்களித்ததோடு தாம் உடனே போய்விட்டால் தங்கள் தந்தையின் மரணத்தைப்பற்றிச் சந்தேக முண்டாகுமாதலால் அவருடைய மயானக்கிரியை நடைபெறுமட்டும் இருந்து பிறகு செல்வதாகவும் வாக்களித்தார். அவ்வாக்குத்தத்தப்படியே தங்கள் தந்தையின் சவம் அடக்கம் செய்யப்பட்டபின்பே நாட்டை விட்டுச் சென்றார்.

தாங்கள் சொல்லொணு மனவேதனையோடு அந்த இரவே ஒருவருக்கும் தெரியாமல் மடத்திற்குள் நுழைந்து கொண்டீர்கள். ஆனால் மனத்திகிலால் வியாதியுற்றீர். மறுநாட்காலை தங்கள் தந்தையினறைக்குட் சென்ற வேலைக்காரி தங்கள் தந்தை சவமாய்க்கிடப்பதைக்கண்டு கூவினாள். ஆயினும் நடந்த சங்கதி வெளியாகவில்லை. அவர் திடீலென்று பாரிசவாயுவால் மடிந்ததாகக் கூறப்பட்டது. தாங்கள் ஐந்தாறு நாட்கள் தேக சுகமின்றியிருக்கையில் மடத்திலேயே பிரசவித்து விட்டீர்கள். குழந்தை பிறக்கு முன்னமே மடிந்திருந்தது. அதை இரகசியமாகவே மடத்துத் தோட்டத்தில் அடக்கம் செய்து

விட்டீர்கள். அச்சமயம் நாம் இறந்து போவோமென்று தங்களுக்குத் தோன்றியதால் தாங்கள் அப்போது அம் மடத்திற்குக் குருவாகவிருந்த ஞானப்பிரகாசம் குரு விடம் பாபமன்னிப்பிற்காக எல்லா இரகசியங்களையும் கூறி, தாங்கள் இறந்துபோகு மட்டாவது அச்சங்கதிகளை வெளியிட வேண்டாமென்று வேண்டிக்கொண்டீர்கள். அவர் அவ்வாறே கூறுமலிருந்தார். பிறகு தாங்கள் பருதி புரம் சென்று அங்கு ஒரு இராஜ குடும்பத்தில் வேலைக் கமர்ந்தீர்கள். அதன் பிறகு தாங்கள் அந்தஸ்திற்கு வந்த காலம் முதல் ஞானப்பிரகாசம் குருவுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தீர்கள். இதற்கு மேல் நான் கூறவேண்டிய தொன்றுமில்லை'' என்றுன்.

மதனம்பாள் சீமாட்டி தனக்குள் சிந்தித்து, கர்னலை நோக்கி "இறந்து போன அக்குரு கூறியதாக நீ கூறு வதை யொருவரும் நம்பமாட்டார்கள். நீ என்னை மிரட் டிப் பணம்பறிக்க வந்ததாயின் தவருன யோசனை செய் தோம் என்று உணர்ந்து பேசாமல் எழுந்துபோய் விடும்'' என்றுள்.

கர்னல் குமரவேல்:—தாங்கள் அப்படி யலட்சியமாகக் கருதவேண்டாம். குமுதவல்லிச் சீமாட்டியிடம் நான் இந்த பயங்கர இரகசியத்தைக்கூறினல், அச் சீமாட்டி தங்கள்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்வதற் காகவே எல்லாக் காரியங்களையும் செய்வாள். கொஞ் சம் பொருள் செலவு செய்தால் தங்கள் சரித்திரத் தைப்பற்றிய விஷயங்களுக்கெல்லாம் தக்க ருசு சம் பாதிப்பது கஷ்டமல்ல. அக்காலத்தில் இருந்தவர் களைக்கண்டு விசாரித்தால் தக்க ருசுவுகள் ஏற்படா மற்போகாது'' என்றுன்.

மதனம்பாள்:—இருக்கட்டும், இந்த இரகசியம் யாவும் உண்மையாகவே யிருந்தாலும் இப்போது இவற்றை யெல்லாம் நீ என்னிடம் கூறுவதன் கருத்துத்தான் என்ன?

கர்னல்:—இந்த இரகசியம் விலை மதிக்கவொண்ணுதது;

குறைந்தது இருபதினுயிரம் பவுன் தங்களுக்கு ஒரு பெரிதல்ல.

சீமாட்டி:—அப்பா! அவ்வளவு தொகையா? நான் இதற்குச் சம்மதிப்பதாயினும் அவ்வளவு பணம் எங்கிருந்து கிடைக்கும்? சிலநாட்கள் கழிந்தபின்பே அதற்கு ஏற்பாடு செய்யக்கூடும்.

கர்னல்:—தங்களிடம் திரண்ட செல்வம் இருப்பதாக யாவரும் அறிவார்கள். நான் ஒருநாள்கூட ஆலசியம் செய்யமுடியாது. தாங்கள் திடீலென்று பாஞ்சால நாட்டிற்குப் போய்விடுவீர்கள். அங்கு நான் வந்தால் ஒரு சிறு கடிதத்தால் நான் மறுபடி அந்தப் பாதாளச் சிறையிலடைக்கப்படுவேன். இரண்டாம் முறை யதிலிருந்து எவனும் தப்ப முடியாது.

சீமாட்டி:—சரி, நான் அப்படியே கொடுத்தாலும் நீ பிறகு குமுதவல்லியிடம்போய் இதைக் கூறமாட்டாயென்பது என்ன நிச்சயம்?

கர்னல்:—சீமாட்டியே, நான் கேட்கும் தொகையை யளித்துவிட்டால் பிறகு என்னுல் தங்களுக்கு ஒரு கலக்கமும் நேராதென்பது சத்தியம் என்று மட்டும் கூறுகிறேன். அதற்குமேல் நான் ஒன்றும் கூற முடியாது.

சீமாட்டி.—சரி நாளை யிதே வேளைக்குவா. நீ கேட்ட தொகையைச் சரிப்படுத்தி வைக்கிறேன்.

கர்னல்:—சீமாட்டியே! தாங்கள் சட்டென்று இதைவிட்டுக் கிளம்பிவிடத்தக்க சந்தர்ப்பமளிக்க எனக்குப் பிரியமில்லை. தாங்கள் கருதினுல் ஒருமணி நேரத்தில் அத்தொகையை வரவழைக்கலாம்.

சீமாட்டி:—நீ மிக்க பிடிவாதமாக விருக்கிருய். இப்போது மணி கொஞ்சம்குறையப் பத்தாகிறது. நான் வெளியில் சீட்டனுப்பி என் நண்பரை நித்திரையினின்றெழுப்பி அத்தொகையைச் சேகரம் செய்யக் குறைந்தது இரண்டுமணி நேரமாவது செல்லும். அதுகாறும் நீ யிங்கேயே யிருந்தால் பார்க்கும்

வேலைக்காரர் முதலியவர்களுக்கு விபரீத சந்தேகம் உண்டாகும். நீ போய்ச் சரியாகப் பனிரண்டு மணிக்கு வா.

கர்னல், சரி நமது காரியம் இனிக் கைகூடியதே யென்று கருதிக்கொண்டு, "சரி, அப்படியே யாகட்டும். நான் இங்கிருப்பது சந்தேகத்திற்கிடமென்றால் அர்த்த இரவில் வந்தால் சந்தேகமல்லவோ?" என்றான்.

சீமாட்டி:—"உன் அவநம்பகத்தால் நான் இத்தகைய சூது செய்யவேண்டியதாயிற்று. நீ ஒருவரு மறியாமல் உள்ளே வரலாகும்; இதோ இரகசிய வழியின் திறவு கோல். இது தோட்டத்தின் வெளியில் வடபுற மிருக்கும் கதவைத்திறக்கும். பிறகு தோட்டத்தைக் கடந்து மாளிகைக்குள்வரும் கதவையும் இதுவே திறக்கும். நீர் சரியாகப் பனிரண்டுமணிக்கு வாரும். நான் மாளிகைக்கும் தோட்டத்திற்குச் செல்லும் வாயிற்படிக்கும் இடையிலுள்ள வழியில் உமக்காகக் காத்துக்கொண்டிருப்பேன். பிறகு நமது விவகாரம் ஒரு நிமிடத்தில் முடிந்துவிடும்" என்றாள்.

கர்னல் அவ்வாறே சம்மதித்துச் சாவியை வாங்கிக் கொண்டு, "சீமாட்டியே! இந்த இரண்டுமணி நேரமும் நான் தங்கள் மாளிகையினெதிரிலேயேதா னிருப்பேன். தாங்கள் இரகசியமாக வெளியில் செல்வதுபோல் எனக்குச் சந்தேக முண்டாயிற்றோ, உடனே நான் நேராக இங்குவந்து தங்கள் வேலைக்காரர்களின் முன்பே எல்லாச் சங்கதிகளையும் வெளியிட்டு விடுவேன்" என்றான்.

சீமாட்டி:—"நீ அத்தகைய சந்தேகங் கொள்ளவேண்டிய காரணமே யில்லை. ஒரு சங்கதி; உனக்கு அளிக்க வேண்டிய தொகையை வரவழைப்பதற்காக என் வேலைக்காரரில் ஒருவர் இருவரை வெளியில் அனுப்ப நேரிடும். அதைக்கண்டு நீ நான் போய்விட யோசிப்பதாகச் சந்தேகங் கொள்ளலாகாது" என்றாள்.

கர்னல்:—"நான் அப்படி வீண் சந்தேகங்கொள்ளமாட்

டேன்'' என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்ருன்.

கர்னல் குமரவேலிடம் பேசிக்கொண்டிருக்கும் போது மதனம்பாள் சீமாட்டி தனக்குள் ஒரு ஆலோசனை செய்துகொண்டே மேற்கண்ட ஏற்பாட்டைச் செய்தாள். கர்னல் மாளிகையின் எதிரில் வீதிக்கு மறுபுறம் நின்று மாளிகையின்மேல் கண்வைத்தபடி யிருந்தான்.

சீமாட்டி எப்படியும் இருபதினுயிரம் பவுன் கொடுத்துவிடுவாள் என்று அவனுக்குள் நிச்சயமாய் விட்டது. அத்தைரியத்தின்மேல் அவன் மனக்கோட்டை கட்டத் தொடங்கினன்.

இருபதினுயிரம் பவுன் நம்மைப்போதுமான செல்வந்தனக்கிவிடும். இப்போது நாம் மாசடைந்த உடையணிந்திருந்தாலும் சேபியில் ஆயிரக்கணக்கான பவுன்களிருக்கையில் தைரியமாய்க் காமதேனு ஹோட்டலுக்குச் செல்லலாம் என்று சிந்தித்துக்கொண்டே யிருந்தான். சுமார் இருபது நிமிடங்கழித்து மாளிகையின் வெளிக் கதவு திறக்கப்பட்டதும் ஒரு வேலைக்காரன் வெளியில் வருவதைக் கண்டான். அவன் கர்னல் குமரவேல் இருந்த விடத்திற்குச் சமீபமாகச் சென்றபோதிலும் கர்னலைக் கவனிக்காதவன்போலவே கிழக்கு நோக்கிச் சென்ருன். பின்னும் கால்மணி நேரங்கழித்து இன்னெருரு ஆள் மளிகையிலிருந்து வெளிவந்து மேற்கு நோக்கிச் சென்ருன்.

கர்னல் ''ஆ! பணத்திற்காக இரண்டுபேர் சென்றிருக்கிருர்கள். எப்படியும் கொண்டுவருவார்கள். ஆ! இந்த இரகசியம் எவ்வளவோ பொன்பெறும். இவ்வளவோடு நான் பேசாமலிருந்துவிட்டால் என்னைவிட மூடன் யாருமில்லை. ஜேபியில் நிறைந்த பணத்தோடு சென்ருல் ஹோட்டலில் நேர்த்தியான அறையும் முதல்தரமான சாராயமும் உணவும் கிடைக்கும். காலையில் உயர்தரமான உடைகளை வாங்கி யணிந்துகொண்டு, அழகிய குதிரைமேல் ஏறிக்கொண்டு நேராய்க் குமுதவல்லிச் சீமாட்டி

யின் மாளிகைக்குச் சென்று அவளுக்கு இந்த இரகசியத்தை விற்கவேண்டும். அச்சீமாட்டி மதனம்பாள் சீமாட்டி யளித்ததற்கு அதிகமாகவே கொடுப்பாள்'' என்று இவ்வாறு மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தான். ஒருமணி நேரத்திற்குள் இரண்டு வேலைக்காரர்களும் திரும்பிவந்து மாளிகைக்குள் நுழைந்தார்கள்.

பிறகு அரைமணி நேரத்திற்குள் மாளிகையின் கீழ்க்கட்டிலுள்ள விளக்குகளனைத்தும் அணைக்கப்பட்டன. கர்னல் "சரி யாவரும் சயனித்துக்கொள்ளப் போகிறார்கள். இன்னும் அரைமணி நேரத்தில் நாம் பணக்காரனாய்விடுவோம்'' என்று நினைத்துக்கொண்டான். பின்னும் சில நிமிடங்கள் கழித்து மேல் மாடியிலிருந்த தீபங்களெல்லாம் ஒவ்வொன்றாக மறைந்துவிட்டன.

கர்னல் குமரவேல், "சரி மணி பனிரண்டாகிறது. இனி நாம் போகவேண்டியதே'' என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டு ஆனந்தத்தோடு புறப்பட்டு இரகசிய வழிக்கதவைத்திறந்து தோட்டத்திற்குள் பிரவேசித்தான். அங்கு நிழலாக விருந்தாலும் மாளிகைக்குச் செல்லும் செப்பனிட்ட பாதை வெள்ளையாகத் தெரிந்தபடியால் அவ்வழியேசென்று அதன் கோடியிலுள்ள கதவையும் தன்னிடமுள்ள சாவியாற்றிறந்தான். தான் அங்கிருந்து கட்டிடத்திற்குச் செல்லும் வழியில் மரங்கள் இருந்ததால் இருட்டாயிருந்தது. ஆயினும் நட்சத்திரங்களின் சொல்ப பிரகாசத்தால் சற்று தூரத்திலுள்ள மாளிகை நன்கு புலப்பட்டதால் இரண்டடி சென்றான். அச்சமயம் டுமீல் என்று ஒரு துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது. மறு விநாடி கர்னல் குமரவேல் ஆவென்று கூவித் துள்ளிப் பொத்தென்று சவமாக வீழ்ந்தான். இக்கோரச்சம்பவம் என்னசந்தர்ப்பத்தால் நேர்ந்தது?

76-வது அத்தியாயம்.

மதனம்பாள் கர்னல் குமரவேலை யொழித்த தந்திரவிவரம்—பரதபுரியில் ஜெனரல் உக்கிரசேனர்—கர்னல் இரகுநாதர், அர்ச்சுனஸிங் பிரபு, இவர்களின் மன்னிப்பு உத்தரவு — ஜெனரல் சிறைச்சாலைக்குச் செல்லல்.

கர்னல் குமரவேல் மதனம்பாளிடம் பேசிவிட்டுச் சென்ற இரண்டு நிமிடங்கள் கழித்து அச்சீமாட்டி தன் வேலைக்காரர்களை யெல்லாம் அழைத்தாள். யாவரும் எதிரில் வந்து நின்றதும் சீமாட்டி மிக்க கலவரமும் திகிலுமடைந்த முகத்தோடு அவர்களை நோக்கி,

"நான் உங்களை யழைத்த காரணம் என்ன தெரியுமோ? பெயர் கூறாமல் இப்போது என்னிடம் பேசவந்திருந்து சென்றவன் யார் தெரியுமா? கடந்த மூன்று வருடங்களாகத் துஷ்டச் செயல்களுக்காகச் சிறை வைக்கப்பட்டுத் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய் மறுபடி பிடிக்கப்பட்டுத் தண்டனை யடைந்தானே அந்தக் கர்னல் குமரவேல் என்பவனே. இவன் தான் பட்ட கஷ்டங்களைப்பற்றிப் பெரிய கதைகூறி என்னிடம் பொருளுதவி கேட்டான். நான் கொஞ்சம் பணம் கொடுத்தேன். அவன் சற்றும் திருப்தியடையாமல் என்னை யொரு மாதிரியாக உற்றுப்பார்த்தான். அவன் பார்வையே ஒருவித பயங்கரமாய், ஆகட்டும் என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வேன் என்று கூறுவதுபோ லிருந்தது. ஆ! ஒரு சங்கதி இப்போதுநினைவிற்கு வந்தது. இவன் இப்போது மிக்க துஷ்டர்களாகிய ஒரு கள்ளக்கூட்டத்தாரோடு சேர்ந்துகொண்டிருக்கிறனென்று கடந்த வாரந்தான் கேள்விப்பட்டேன்" என்றாள்.

இக்கடைசி மொழிகளைக் கேட்டதே வேலைக்காரருக்கெல்லாம் மிக்க மனக்கலக்கமுண்டாகி "அம்மா! தாங்

கள் ஒரு கெடுதியுமடையாமல் தப்பித்துக்கொண்டது மிக்க நல்லகாலமே'' என்றார்கள். சீமாட்டி "ஆமாம். இப்போது நினைத்தால் எனக்குத் திகில் உண்டாகிறது. அவன் எப்படியோ தந்திரமாக என்னிடம் ஒருமணி நேரம் பேசிக்கொண்டிருந்தபோது திடீலென்று என் மேற் பாய்ந்து என்ன கெடுதி வேண்டுமாயினும் செய்து விட்டிருக்கலாம்'' என்று கூறியதும் ஏதோ தற்செயலாக எதிரிலுள்ள மேஜையைப் பார்ப்பவள்போல் பார்த்து "ஆ! பின்பக்க இரகசிய வழிச் சாவி யிதன்மேலிருந்ததைக் காணோம்'' என்றாள்.

உடனே வேலைக்காரர்களெல்லாம் பீதியோடு ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தார்கள். மாளிகையில் களவு நடக்கப்போவது நிச்சயம் என்று அவர்கள் மனதிற்பட்டு விட்டது. அச்சமையம் வேலைக்காரரின் தலைவனாகிய மேஸ்திரி மிக்க பலசாலி, தைரியமும் துணிவுமுடையவன். அவன் சீமாட்டியை நோக்கி "எஜமானியவர்களே! அவன் தங்களிடம் பணவுதவி பெறவே வந்தானென்று கருதுகிறீர்களா அல்லது வேறு காரியமாக வந்தானென்று கருதுகிறீர்களா?'' என்றான்.

சீமாட்டி "அய்யோ! எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. நான் கவனிக்கவில்லை. என் அக்கேள்வியைக் கேட்கிறாய்?'' என்றாள்.

மேஸ்திரி:—"சீமாட்டியே! இத்தகைய கொள்ளைக்காரர்கள் ஏதாவது சாக்குக்காட்டி செல்வவந்தர்களின் மனைகளில் நுழைந்து சாமான்களிருக்குமிடம் கட்டிடத்தின் விவரம், வழிகள் முதலியவை, இத்தகைய தகவல்களை யறிந்துகொண்டுபோய் இரவில் புகுந்து களவாடுவதுண்டு'' என்றான்.

சீமாட்டி:—"அய்யோ! கடவுளே! அப்படி இரவு நம் வீட்டிற் களவு நடப்பதாயின் என்ன செய்வது?'' என்றாள்.

உடனே வேலைக்காரர் அனைவரும் ஆளுக்கொரு யோசனை கூறத்தொடங்கினார்கள். ஒருவன் "உடனே

போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று பத்துப் பனிரண்டு போலீஸ்காரர்களைக் காவலுக்கு அழைத்து வரலாம்" என்றான். மற்றொருவன் "நேராய் அரண்மனைக்குச் சென்று போர்வீரர்களை யழைத்து வரலாம்" என்றான். இவ்வாறே அவனவன் தன்தன் பிரியம்போல் மனதிற்குத் தோன்றியதைக்கூறினான்.

கடைசியில் மேஸ்திரி "இவை யாவும் கோழைகளின் பேச்சு. இங்கிருக்கிற ஆட்களே போதும். என் வரையில் முதலில் உள்ளே நுழையும் கள்ளனுடைய மூளையைக்கட்டாயம் சிதறடித்து விடுகிறேன்" என்றான்.

சீமாட்டி அப்போதுதான் தைரிய மடைந்தவள் போல் "ஆம், நீங்களே போதும். இப்போது நடந்திருக்கும் விஷயங்களை நோக்க இரவிற்கே களவு நடக்குமென்று என் புத்திக்குப் புலப்படுகிறது. ஆகையால் உங்களில் இரண்டு பேர் ஒருவன் சென்ற சற்று நேரங் கழித்து ஒருவனாக வெளியில் சென்று, ஒருவன் கிழக்குப் பக்கமும் ஒருவன் மேற்குப் பக்கமும் ஏதோ காரியார்த்தமாகச் செல்பவர் போல் செல்லுங்கள். நமது மாளிகையருகில் யாராவது நின்று பார்த்துக்கொண் டிருக்கிறார்களாவென்று கவனியுங்கள். அப்படி யாரேனுமிருந்தால் நீங்கள் அவர்களைக்கவனியாதது போலவே போய்விடுங்கள். இன்றேல் அவர்கள் எச்சரிக்கை யடைந்து இன்று வராமல் இன்னொரு நாளைக்கு வருவார்கள். அப்போது நாம் எச்சரிக்கையா யிருக்க முடியாது.

வெளியில் செல்லும் இருவரும் உண்மையாய் ஏதோ வேலைக்காகச் சென்றவர்கள் போல் கடைவீதிவரையிற் சென்று ஒரு மணி நேரம் கழித்தே வாருங்கள். அது வரையில் யாரேனும் நமது மாளிகை மேல் கண் வைத்திருப்பதாகத் தெரிந்தால் பிறகு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம்" என்றாள்.

இவ்வாறு அச்சீமாட்டி மெதுவாய்த் தன் கருத்தின்படி தன் வேலைக்காரர்கள் நடக்குமாறு ஏற்பாடு செய்து

விட்டாள். அந்த இரண்டு ஆட்களையும் வெளியில் அனுப்புவதால் இரண்டு விஷயங்களிலும் அவள் காரிய சித்திக்கு அனுகூலமாகும் என்று அவள் அறிவாள். அதாவது, முதலாவது, கர்னல் குமரவேல் வெளியில் காத்துக்கொண் டிருக்கிறுனென்று அவள் அறிவாள். இப்போது இந்த ஆட்கள் வெளியில் செல்வதால் உண்மையாகவே அவர்கள் பணங்கொண்டுவரப் போகிறுர்களென்று அவன் நம்பிக்கொள்வான். இரண்டாவது, செல்லும் இரண்டு ஆட்களில் ஒருவனுவது கர்னல் அங்கு பதுங்கி யிருப்பதைக் காண்பார்கள். இதனுல் தான் கோரியபடி அவன் இரவிற்குத் தன் ஆட்களோடு வீட்டிற்குள் நுழைந்து களவாடப் போகிறுன் என்று அவர்கள் நம்பிக்கொண்டு பின்னுல் தன் எண்ணம் நிறைவேறுமாறு நடந்து கொள்வார்கள் என்பதே அவள் சூழ்ச்சி.

அவள் எதிர்பார்த்தபடி ஒருமணி நேரங்கழித்துத் திரும்பி வந்த ஆட்கள் இருவரும், கர்னல் குமரவேலைப் போன்ற ஒருவன் வெளியிலிருந்து மாளிகையைப் பார்த்துக்கொண்டே யிருப்பதாகக்கூறினுர்கள். அதன் மேல் எல்லா வழிகளிலும் காவல் வைக்கப்பட்டது. பின் பக்கமுள்ள இரகசிய வழியில் மேஸ்திரியே காவல் நின்றுன். ஒவ்வொருவர் கரத்திலும் கெட்டித்த கைத் துப்பாக்கியை வைத்துக்கொண்டு அங்கங்கு காவல் நின்றுர்கள். கர்னல் குமரவேல் கதவைத்திறந்து கொண்டு இரண்டடி வைத்ததே, மேஸ்திரியே அவனைச் சுட்டுத் தள்ளினுன்.

* * * * * *

* * * * *

நேயர்களே! இப்போது இலவணபுரி இராஜ்ஜியத்தைச் சேர்ந்த மலைநாட்டின் தலை நகரமாகிய பரதபுரியில் நடக்கும் விசேஷ சம்பவங்களைப்பற்றிக் கவனிக்க வேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமானதாக விருக்கிறது.

மலை நாட்டின் இராஜப் பிரதிநிதியாக அமர்ந்திருக்கும் பிரபுவும்; காரிய தரிசியாகிய பிரபுவும் சின்னக் கட்சி

யைச்சேர்ந்தவர்கள். இருவர்களும் சுயநலத்தையே கருத்திற்கொண்டு அதற்குத்தக்கபடி தந்திரமாகவும் இழிவாகவும் நடப்பதில் சற்றும் பின்னிடையாதவர்கள். மேலே கண்ட சம்பவங்கள் நடந்த மூன்றுவது நாள் இந்த இரண்டு ஆசாமிகளும் பரதபுரியிலுள்ள இராஜமாளிகையின் ஒரு கூடத்தில் உட்கார்ந்துகொண் டிருக்கிறுர்கள். அவர்கள் எதிரிலுள்ள மேஜைமேல் ஒயின் வகைகளும், பலவகைப்பட்ட தின் பண்டங்களும் பழவகைகளும் வைக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கம் பல பத்திரங்கள் வைக்கப்பட்டிருந்தன.

இந்த இருவரில் இராஜப்பிரதிநிதி அர்ச்சுனஸிங் பிரபுவின் விரோதியாதலால் அப்பிரபு இப்போது பிராணபத்தில் சிக்கிக்கொண்டது அவருக்கு மிக்க சந்தோஷம். அதனுல் தான் அப்பிரபுவும் கர்னல் இரகுநாதரும் சிக்கியதே அவர்களை யொழித்து விடவேண்டு மென்று உடனே அரசனுக்கு அவர்கள் பிடிக்கப்பட்ட சங்கதியை அறிவித்தான். இப்போது இவர்களிருவரும் ஆவலோடு அரசன் கட்டளையை யெதிர் பார்த்துக்கொண் டிருக்கிறுர்கள். அப்போது இரவு எட்டு மணியிருக்கும்.

காரியதரிசி:—போன ஆள் அரசன் கட்டளையை வாங்கிக்கொண்டு வரவேண்டிய காலம் நெருங்கிவிட்டது அல்லவா ?

இராஜப்பிரதிநிதி:—ஆச்சு ஒவ்வொரு மணி நேரமும் அவனை யெதிர் பார்க்கலாகும்.

காரியதரிசி:—அக்கட்டளை யெப்போது வரினும் உடனே அதை நிறைவேற்றி விடுவீர்களல்லவா ?

பிரதிநிதி:—தடையின்றி. அர்த்த இராத்திரியாயினும் உடனே கண்டகோடரி கூர்மையாகத்தீட்டப்பட்டு அவர்கள் சிரங்கள் தரையில் உருளவேண்டியதே. ஆ! அர்ச்சுனஸிங் பிரபுவே! உன் மரணம் நெருங்கி விட்டது.

காரியதரிசி:—ஆ! வேகமாக ஒரு குதிரை வருகிறது. ஆள் தான் வருகிறுன்.

பிரதிநிதி:—ஆம். உத்தரவு கொண்டு வரும் ஆளாகவே யிருக்கவேண்டும்.

உடனே காரியதரிசி எழுந்து சென்று சாளரத்தில் நின்று பார்த்து "ஆ! ஒரு ஆள் குதிரை மேல் வந்து வாயிற்படியில் குதிரையை நிறுத்தி இறங்குகிறான். இவன் அதி துரிதமாகவந்திருக்கிறான். ஆனால் நாமனுப்பிய ஆளல்ல. இராஜ சபையைச் சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தன் போலிருக்கிறது" என்றான். பிரதிநிதி "அப்படித்தானிருக்கிறது. அரசன் கட்டளை துரிதமாக நம்மிடம் வந்து சேரவேண்டுமென்று அங்கிருந்து ஒரு ஆளை யனுப்பினார்கள்" என்றான்.

இரண்டொரு நிமிடங்களுக்குள் ஒரு காவலன் வந்து இராஜப்பிரதிநிதியை நோக்கி, "பிரபுவே! இலவணபுரியிலிருந்து ஒரு பெரிய மனிதர் தங்களைக்காண வந்திருக்கிறார்" என்றான். பிரபு அவரை யுடனே யுள்ளே விடு என்றதே மறுநிமிடம் அவர் உள்ளே வந்தார். அவர் மிகத்துரிதமாகச் சவாரி செய்து வந்ததால் அவர் உடைமுழுமையும் தூசு படிந்திருந்த போதிலும் அவர் மிக்க கம்பீரமான தோற்றமுடையவராகத்தோன்றினர். பிரபுக்கள் இருவர்க்கும் அவர் மரியாதையாகவே வந்தனமளித்தாரெனினும், எள்ளளவேனும் அந்தஸ்தில் அவர்களைவிடத் தாழ்ந்தவர் போல் அவர் நடந்துகொள்ளவில்லை.

பிரதிநிதி, "இராஜ சபையைச்சேர்ந்த உத்தியோகஸ்தரென்று கருதுகிறேன்" என்றார். வந்தவர் "அல்ல பிரபுவே. நான் இலவணபுரியி லிருப்பவனே. ஆனால் இராஜ சபையைச்சேர்ந்தவனல்ல." என்றான்.

பிரதிநிதி:—"தாங்கள் குற்றவாளிகளின் மரணதண்டனையைக் கொண்டுவந்திருக்கிறீர்களல்லவா?" என்று தமது ஆவலை யடக்க முடியாமற் கேட்டார்.

வந்தவர் "நான் மரணக்கட்டளை கொண்டுவந்திருக்கவில்லை. அரசனுடைய வேறொரு உத்தரவைக் கொண்டு வந்திருக்கிறேன். இதோ அந்த உத்தரவு" என்று தாம்

கொண்டுவந்த கட்டளையை இராஜப்பிரதிநிதியிட மளித்தார். அவர் அதை மிக்க ஆவலோடு வாங்கி வாசிக்கும்போது காரியதரிசியாகிய பிரபுவும் அதை வாசித்தார். அதில் அடங்கிய சங்கதியைக் கண்டதும் அவர்கள் இருவரும் மனங்குன்றி விட்டார்கள். பிரதிநிதி "இது மிக்க வியப்பாக விருக்கிறது" என்றார்.

காரியதரிசி "நம்பக்கூடாத விதமாக விருக்கிறது. என்ன! இவர்கள் நாட்டை விட்டுப் போய்விட வேண்டும் என்ற நிபந்தனையோடு பூரண மன்னிப்பளிக்கப்பட்டிருக்கிறதே" என்றார்.

நேயர்களே! தங்களைப்போன்ற இரண்டு பேர் கோரமான மரணத்திலிருந்து தப்பியதைக் கேட்டதே அந்த இருவருக்கும் தோன்றிய மனக்கலக்கத்திற்கும் துயரத்திற்கும் கோபம் வெறுப்பிற்கும் ஒரு அளவில்லை.

கடைசியில் பிரதிநிதி அக்கட்டளையைக் கொண்டுவந்தவரை நோக்கி "தங்கள் நாமதேயம் என்னவென் றறியலாகுமோ?" என்றார். அதற்கு வந்தவர் அடியேன் நாமதேயம் நீங்கள் பன்முறைகளிற் கேள்விப்பட்டதாகவே யிருக்கும். அது ஜனரல் உக்கிரசேனன் என்பதே" என்றார்.

அம்மொழியைக் கேட்டதே இருவரும் திடுக்கிட்டு எழுந்து அவருக்குத் தாழ்மையாக வந்தன மளித்தார்கள். பிரதிநிதி "கனம் பொருந்திய ஜனரலவர்கள் கொஞ்சக் காலத்திற்கு முன் மேற்கு நாட்டில் நமது அரசரின் பிரதிநிதியாக விருந்த பதவியிலிருந்து நீங்கி விட்டதாகக் கேள்விப்பட்டேன்" என்றார்.

ஜனரல் உக்கிரசேனர் "ஆம். நாம் இப்போது அரசருடைய ஊழியத்திலில்லை. மேற்கு நாட்டில் இப்போது புதிதாகத் தாபிக்கப்பட்ட ஒரு குடியரசு நாட்டின் தலைவராக நாம் இப்போது இலவணபுரியரசரால் வரவேற்கப்பட்டிருக்கிறோம்" என்றார்.

அம்மொழிகளைக்கேட்டதே அப்பிரபுக்களிருவரும் மறுபடி எழுந்து ஜனரலுக்கு வந்தனமளித்தார்கள்.

அதன் பிறகு இராஜப்பிரதிநிதி "ஜனரல் அவர்களே! இப்போது இரவு நெடுநேரமாய்விட்டபடியால் பொழுது விடிந்ததும் முதல் வேலையாகச்சடங்கோடு, சிறைப்பட்டிருப்பவர்களுக்கு இச்சங்கதி யறிவிக்கப்படும்'' என்றார்.

ஜனரல்:—"பிரபுவே! தங்கள் தொழிலின் ஒழுங்கைப் பற்றி நான் கூறவேண்டியவனல்ல. ஆனால் இச்சந்தர்ப்பத்தில் நான் தங்கள் பதவியிலிருப்பேனேல், என்போன்ற மனிதர் மரணம் நெருங்கி விட்டதேயென்று திகிற்பட்டுக்கொண் டிருக்கையில் இந்த விநாடியே கஷ்டத்தோடாயினும் சென்று அவர்களுக்குச் 'சந்தோஷத்தை யுண்டாக்கும் செய்தியை யறிவித்து விட்டே போசனம் செய்வேன். ஆயினும் தங்கள் விருப்பப்படிக்கே செய்யுங்கள். அதுகாறும் இப்பத்திரம் என்னிடமே யிருக்கட்டும்'' என்று கூறி அதை வாங்கிக்கொண்டு "காலை எந்நேரத்திற்குத் தங்களுக்கு வசதியாக விருக்குமோ அதை யறிவித்தால் அப்போது வருகிறேன்'' என்றார்.

இராஜப்பிரதிநிதி காலை ஒன்பது மணிக்குச் செல்லலாம் என்றதே, ஜனரல் அவ்வேளைக்கு வருவதாய்க்கூறி விட்டு விடைபெற்றுக்கொண்டு சென்றார்.

ஜனரல் அங்கிருந்து நேராக அந்நகரிலுள்ள பிரதான ஹோட்டலுக்குச் சென்றார். அவர் இலவணபுரியிலிருந்து புறப்படும் போது ஸர்தார் இலட்சுமணனையும் பிரேமநாதனையும் கூட அழைத்துவந்தா ரென்றோமல்லவா. பரதபுரி இன்னும் நெடுந்தூரத்திலிருக்கும்போதே ஜனரல் அவர்களைப் பின் விட்டு அதிவேகமாகச் சென்றார், ஏனெனில் அரசன் அனுப்பிய மரண உத்தரவைக் கொண்டு போன ஆள் தாம் புறப்படுவதற்குச் சுமார் நான் கைந்து மணி நேரம் முன்னதாகப் புறப்பட்டிருக்கிறான். தாம் மன்னிப்பு உத்தரவைக்கொண்டு போகு முன்பே அவ்வுத்தரவு இராஜப்பிரதிநிதி யிடம்சேர்ந்தால் அவர் உடனே அதன்படி குற்றவாளிகளிருவரையும்

சிரச்சேதம் செய்து விடுவார். பிறகு தாம் செல்லும் காரியம் வியர்த்தமாய் விடும். ஆகையால் அக்கட்டளை சேர்வதன் முன்னமே தாம் போய்ச் சேர்ந்து விட்டார். பின்னால் வந்தவர்கள் இன்னும் வந்து சேரவில்லை.

ஜனரல் ஹோட்டலுக்குச் சென்றதும் கொஞ்சம் காபி மட்டுமே யருந்திவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சிறைச்சாலை யிருக்குமிடத்தை நோக்கிச்சென்றார். கர்னல் இரகுநாதர் அர்ச்சுனசிங் பிரபு இருவருக்கும் உடனே அவர்கள் மன்னிக்கப்பட்ட சமாசாரத்தை யறிவிக்க வேண்டு மென்று மிக்க ஆவல் கொண்டிருந்தார். அவர் சிறைச்சாலையின் வெளிவாயில்முன் சென்று அங்கு நின்றிருந்த காவலனிடம் உள்ளே செல்லவேண்டுமென்று அறிவித்தார்.

அதற்கவன் "வேளை மிஞ்சிவிட்டது. இதற்கு மேல் ஒருவரையும் உள்ளே விட உத்தரவில்லை" என்றான். ஜனரல் சாந்தமாகவே "நீ தயவு செய்து சிறைச்சாலை யதிகாரியிடம் சென்று ஜனரல் உக்கிரசேனர் வந்திருக்கிறார். உள்ளே வர விரும்புகிறார் என்று கூறு." என்றார்.

அப்பெயரைக்கேட்டதே அவன் திடுக்கிட்டுப் பிரமித்துத் தாழ்ந்து வந்தனமளித்தான். அருகிலிருந்த மற்ற வீரர்கள் உலகப்பிரசித்தி பெற்ற அவரைத்தரிசிக்க ஆவல் கொண்டு ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு முன் வந்தார்கள். ஜனரல் உடனே இரண்டு சவரன்களை யெடுத்து அவர்களிடமளித்து "போய்ச் சந்தோஷங் கொண்டாடுங்கள்" என்றார்.

போர்வீரர்களாகிய காவலர்கள் பணத்தை வாங்கிக் கொண்டதும் சந்தோஷமாகப் போய் விட்டார்கள். ஜனரல் உக்கிரசேனர் தம்மைத் தடுப்பாரின்றித் தாராளமாக உள்ளே சென்று காவலறையினெதிரில் நின்று அங்கிருந்த காவலனை நோக்கி "இன்று முறைப்படி காவல் உத்தியோகஸ்தர் யார்?" என்றார்.

காவலன் கூறிய பெயரைக்கேட்டதே ஜனரலுக்கு அவன் தனக்குத்தெரிந்தவனே யென்று புலப்பட்டது.

காவலன் உள்ளே சென்று தன் உத்தியோகஸ்தனைக் கண்டு ஒருவர் தங்களைக்காண வந்திருக்கிறார் என்று கூறியதும் அந்த உத்தியோகஸ்தன் வெளி வந்து ஜனரலைக் கண்டதும் மிக்க வியப்படைந்த போதிலும் மரியாதையோடு "ஆ! ஜனரல் உக்கிரசேனர்!" என்றான்.

ஜனரல் உடனே அவன் கரத்தைப்பற்றிக் குலுக்கி "ஆ நண்பனே! இச்சமயம் உன்னைக் கண்டது மிக்க சந்தோஷத்தை யளிக்கிறது" என்றார். முன்பு ஜனரல் உக்கிரசேனர் இலவணபுரிச் சிறையினின்று விடுபட்டதும் மிக்க செல்வமடைந்தபோது, ஜனங்கள் தவறாகக்கருதுகிறபடி தனக்கு அரசன் உபகாரச் சம்பளம் அளிக்கவில்லை யென்றும், தன் பெரிய தந்தையின் ஆஸ்தி முழுமையும் தனக்குக்கிடைத்ததென்றும் யாவர்க்கும் அறிவிக்கும்படி கோரியது இந்தச் சினேகிதனையே.

ஜனரல் தான் மன்னிப்பு உத்தரவு கொண்டு வந்ததை யவனிடம் கூறவில்லை. ஏனெனில் அக்கௌரவம் இராஜப்பிரதிநிதிக்கே யிருக்கவேண்டியது தான் முறைமை யென்றுணர்ந்து அதை வெளியிடாமல் தாம் கர்னல் இரகுநாதரையும், அர்ச்சுனசிங் பிரபுவையும் உடனே கண்டு பேசவேண்டும் என்று கூறினர்.

அரசன் தன் கையொப்பம் முத்திரை, உள் நாட்டு மந்திரியின் கையொப்பம் யாவும் வைத்திருக்கப்பட்ட இரண்டு பத்திரங்களை யவரிடம் அளித்தானல்லவா? ஜெனரல் உக்கிரசேனர் அவற்றில் ஒன்றில் குற்றவாளிகள் இருவரும் உடனே நாட்டை விட்டுப்போய் விடவேண்டு மென்ற நிபந்தனையின் மேல் அவர்களிருவரையும் மன்னித்து விட்டதாக எழுதிக்கொண்டார். அர்ச்சுனசிங் பிரபுவையும் ஏன் சேர்த்துக்கொண்டார் எனில், ஒருவரை மட்டும் அரசன் மன்னித்ததாக விருந்தால் மிக்க அதிசயமாகத் தோன்றும். அது வன்னியில் ஒருவருக்குச் சந்தோஷ சங்கதி கொண்டு போய் அவருடைய நண்பராக அவர் கூடவே மரணதண்டனை விதிக்

கப்பட்டவரைக்காப்பாற்றுது விட பெருந்தன்மையான அவர் மனதிற்குச் சம்மதமாக இருக்கவில்லை.

அவர்கள் இருவரையும் ஜனரல் காணவேண்டு மென்றபோது, கர்னல் இரகுநாதர் ஜனரலுக்கு நண்பரா னதால் அவரோடு அர்ச்சுனசிங் பிரபுவையும் பார்த்துத் தேறுதல் கூறவே அவர் கருதுகிறுர் என்று அவ்வுத்தி யோகஸ்தன் நினைத்துக் கொண்டான். அவன் ஜனரலை நோக்கி,

"ஜனரல்! சிறைச்சாலை யதிகாரி நகருக்குள் விருந் திற்குச் சென்றிருக்கிறுர். இப்போது நான் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவது சட்டத்திற்கு நேர்விரோ தமாகும். தங்களுக்கு மறுத்துக்கூறவோ எனக்கு நாவெழவில்லை. என்ன செய்வேன்" என்று பரிதபித் தான்.

ஜனரல் "நண்பரே! சைனியசட்டத்தின்படி யாவ ரையும் நடக்கச்செய்யும் நான் உன்னை நெறி தவறி நடக் கும்படி கூறமாட்டேன். ஆனல் இச்சந்தர்ப்பம் அவ் வளவு முக்கியமானதாக விருக்கிறது" என்றுர்.

உத்தியோகஸ்தன் அப்படியானல் இவ்விஷயம் மிக்க இரகசியமாகவே வைக்கப்படவேண்டு மென்று கேட்டுக்கொண்டபின், ஜனரல் அவர்கள் இருவரையும் காணும்படி செய்தான். முதலில் சாவி எடுத்துக்கொண்டு போய்க் கர்னல் இரகுநாதர் அறையைத் திறந்து ஜனரலை யுள்ளே விட்டு வெளியில் நின்றுன்.

77-வது அத்தியாயம்.

ஜெனரல் உக்கிரசேனர் கர்னல் இரகுநாதரையும் அர்ச்சுனஸிங் பிரபுவையும் காணல்— காவல் உத்தியோகஸ்தரும் இரகுநாதரும்—இரவில் சிறைச்சாலையில் நடக்கும் திடுக்கிடும் சம்பவங்கள்— கொலை மேடை—ஜெனரல் உக்கிரசேனரின் தைரிய சாமார்த்தியம்—ஆபத்திலிருந்த இருவரும் காப்பாற்றப்படல்.

ஜெனரல் உக்கிரசேனர் நெடுந்தூரத்தில் இருப்பதாகக் கர்னல் இரகுநாதர் எண்ணிக்கொண்டிருக்கிறார் ஆகையால் இவரைக் கண்டதும் அவருக்குண்டான வியப்பும் சந்தோடமும் கொஞ்சமல்ல. இருவரும் சொல்லொணு அன்போடு ஆலிங்கனம் செய்து கொண்டபின் ஜனரல் தாம் மன்னிப்புப்பத்திரம் கொண்டு வந்திருக்கும் சங்கதியைக் கூறினர். அதைக்கேட்டதே அவர் பேரானந்தத்தில் மூழ்கி ஜனரலைப் பன்முறை தழுவிக்கொண்டு கண்ணீர் விட்டார். ஜனரல் நாளை இராஜப்பிரதிநிதி பகிரங்கமாக மன்னிப்பைப்பற்றிக் கூறுமட்டும் அச்சங்கதியை இரகசியமாகவே வைத்திருக்கவேண்டுமென்று கூறினர். அவர் விவரம் கூறுவதற்கு அவகாசமில்லை.

ஜனரல் அதன் பிறகு அர்ச்சுனசிங் பிரபு விருக்கும் அறைக்குச் சென்று அவருக்கும் சந்தோஷ சங்கதியைக் கூறினர். ஜனரலின் கீர்த்தியை முன்னமே கேள்விப்பட்டிருக்கும் அர்ச்சுனசிங் பிரபு அவரைக் கண்டதாலேயே மிக்க சந்தோஷமடைந்தார். அதோடு தம்மைக்காணுத அவர் தமக்குச் செய்யும் உதவியை யுணர்ந்து மனங் கரைந்து கண்ணீர் பெருக்கி அவர் முன் முழங்காலிட்டு அவருக்குத் தன் நன்றி யறிதலை யறிவித்தார். பிறகு அவரை நோக்கி "ஆ! இராஜப்பிரதிநிதி என் கொடிய

விரோதி—மன்னிப்பு உத்தரவைக் கண்டது அவருக்கு விஷம் விழுங்குவது போலிருக்கும்'' என்ருர். ஜனரல் "ஆயினும் அவர் அதன்படி நடந்தே தீரவேண்டும்'' என்ருர்.

ஜனரல் அவருக்குத் தேறுதல் கூறி இச்சங்கதி இரகசியமாக இருக்கவேண்டு மென்பதைப்பற்றி அவருக்கும் அறிவித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு உத்தியோகஸ் தஞகிய மேஜரோடு காவலறைக்குச் சென்ருர். மேஜர் அவரை நோக்கி மிக்க அன்போடு "தாங்கள் தயைபுரிந்து என் மனத்திருப்திக்காக என்னேடு சிற்றுண்டி யேனு மருந்திச்செல்ல வேண்டும். ஒருமணி நேரம் என் கூட இருக்கப்பிரார்த்திக்கிறேன்'' என்ருன்.

ஜனரல் "இத்தகைய அன்பான உபசாரத்தை யேற்றுக்கொள்ள ஒருவன் எப்படித் தான் மறுக்கலாகும்'' என்ருர். உண்மையில் அத்தகைய சந்தர்ப்பம் நேர்வது அவர் நோக்கத்திற்கு மிக்க அனுகூலமாக விருந்தது. எவ்வாறெனின், அவர் இராஜப்பிரதிநிதி யிடமும் அவருடைய காரியதரிசி யிடமும் தாம் கொண்டுவந்த மன்னிப்புப் பத்திரத்தை யளித்ததும் ஒன்றையும் கவனிக்காது அசட்டையாக விருப்பவர்போல் வெளிக்கு அபிநயம் செய்தாரே யன்றி, உண்மையில் அவர்கள் முகம் குறி முதலிய வற்றையே உன்னிப்பாய்க் கவனித்துக் கொண் டிருந்தார்.

மன்னிப்புப் பத்திரத்தைக் கண்டதே அவர்கள் முகம் வாட்டமடைந்ததையும் அவர்கள் ஒருவரை யொருவர் நோக்கிக்கொண்டதையும் கண்டு, அந்தக் கட்டளை யவர்கள் நோக்கத்திற்கு முற்றும் விரோதமான தென்று அறிந்து கொண்டார். இதுமட்டுமல்ல. அவர்களிருவரும் சுயநலத்தையே நோக்கமாகக் கொண்டவர்களென்றும், தங்கள் சுயநல நோக்கம் கைகூடவேண்டின் எத்தகைய அநீதியையும் செய்ய அஞ்சாத அயோக்கியர்களென்றும் தமக்கிருக்கும் உலக அனுபவத்தால் அறிந்து கொண்டார். ஆகையால் அரசனுடைய உத்தரவு காலைக்

குள் வந்தால் இவர்கள் துணிகரமாய் அக்கட்டளையை நிறைவேற்றி விடுவார்களென்று அவர் மனதிற்குப்புலப் பட்டது. ஆகையால் தாம் இச்சமயம் சிறைச்சாலையி னருகிலிருப்பதே சிறையிலிருப்பவர்களைக் காப்பாற்று வதற்கு அனுகூலமாகும் என்று கருதினர்.

மேஜர், ஜனரல் உக்கிரசேனரை யங்கிருக்கும் தனது இரகசிய அறைக்கு அழைத்துச் சென்று, சிற்றுண்டி களும் பழவகைகளும், உயர்தரமான திராக்ஷரசச் சாராய மும் வரவழைத்து அவரை யுபசரித்தார். பிறகு இரு வரும் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் ஜனரல் உக்கிர சேனர் மேற்கு நாட்டில் நடந்த அதிசய சம்பவங்களை யெல்லாம் கூறினர். அப்போதுதான் மேஜருக்குத் தன் விருந்தாளியா யிருப்பவர் ஒரு சுயாதீன நாட்டின் அர சருக்குச் சமதையானவரென்று தெரிந்தது.

இருவரும் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் இரவு மணி பதினொன்றாய் விட்டது. மேஜர் "இன்று இராக்காவல் என்னுடையதாகையால் நான் காவல றையை விட்டு நெடுநேரமிருப்பது குற்றமாகும். இந்த அகாலத்தில் தாங்கள் ஹோட்டலுக்குச் சென்றாலும் நன்றாயிராது. ஆகையால் தாங்கள் இங்கேயே இரவு தங்கி யிருந்தால் காலை நான் வேலையினின்றும் விடுதலை யடை கிறபடியால் தங்களை யழைத்துச் சென்று என் வீட்டில் ஏழைக்குத் தக்க விருந்தளித்தால் என் மனதிற்கு எவ் வளவோ ஆனந்தம் உண்டாகும்" என்றான்.

ஜனரல் உக்கிரசேனருடைய நோக்கத்திற்கு இந்த ஏற் பாடு இன்னும் அனுகூலமாக விருந்தது. ஆகையால் அவர் வந்தனத்தோடு அந்த ஏற்பாட்டிற்குச் சம்மதித் தார்.

ஜனரல் இருக்கும் அறை மேல் தளத்திலிருந்தது. படிக்கட்டின் வழியாக ஏறி அதற்குச் செல்லவேண்டும். அந்த அறையில் ஒரு சாளரம் இருந்தது. அச்சாளரம் கீழே யுள்ள அகன்ற முற்றத்தைப் பார்த்ததுபோ லிருந் தது. அம்முற்றத்தைச் சுற்றியே சிறை யறைகள் இருக்

கின்றன. ஜனரல் பிரயாணத்தால் எவ்வளவோ களைப் படைந்திருந்தபோதிலும் நித்திரைக்கு இடமளிக்கலாகா தென்று எச்சரிக்கையோடு விழித்துக்கொண் டிருந்தார். ஏனெனில், அரசன் கட்டளை யெப்படியும் வரும். இரா ஜப்பிரதிநிதியும் காரியதரிசியும் அயோக்கியர்களென்றும் முக்கியமாக அர்ச்சுனசிங் பிரபுவை யொழித்து விட எண் ணங்கொண் டிருக்கிறார்களென்றும் அவருக்குத் தெரியும். ஆகையால் எந்தச் சமயத்தில் அரசனுடைய கட்டளை வந் தாலும் அவர்கள் துணிகரமாக அதை நிறைவேற்றி விட் டுத் தாம் கொண்டு வந்ததைக் கவனியாததற்கு ஏதேனும் சாக்கான காரணம் கூறிவிடுவார்கள் என்பது அவர் சிந் தனை. அதற்காகவே சிறைச்சாலையி னருகிலேயே இரவு இருக்கவேண்டுமென்று தீர்மானித்தார்.

அந்த அறையிலிருந்த நாற்காலியி லுட்கார்ந்து கொண்டு மனதைச் சுறுசுறுப்பான சிந்தனையில் வைத் துக்கொண் டிருந்தார். அங்கிருந்த தீபம் அணைந்து விட்டபோதும் அவர் உறக்கத்திற்கு இடந்தரவில்லை. சுமார் இரண்டு மணி நேரம் வரையில் எங்கும் நிர்ச்சந்தடி யாகவே யிருந்தது. ஆங்காங்கு காவல் நிற்கும் ஆட்கள் ஒரு நிதானமாகவும் ஒழுங்காகவும் முன் பின் நடக்கும் சொல்ப சந்தடி மட்டுமே அதுவரையிலிருந்தது. அதன் பிறகு அச்சந்தடியை விட அதிகமான சந்தடி கேட்கத் தொடங்கியது. ஜெனரல் இராணுவப்பழக்க மதிகமாக வுடையவரானதால் அச்சத்தம் பல ஆட்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஒழுங்காய் நிற்கத்தொடங்கும் சத்தம் என்று அவருக்குப்புலப்பட்டது. உடனே எழுந்து போய்ச்சாளரத்தருகில் நின்று பார்த்தார். எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. அவர் மனதில் மிக்க சந்தேகம் ஜனித்தது. சற்று நேரத் தில் ஆயுதங்கள் ஒன்றோடொன்று தாக்கும் சத்தமும், ஆட்கள் அணிவகுத்து நிற்க நடக்கும்சத்தமும் கேட் டன. ஒகோ இங்கிருக்கும் காவற்படை வீரர்கள் அணி வகுத்து நிற்கிறார்கள் என்று உணர்ந்தார். ஏன் இங்

நேரத்தில் அவர்கள் அப்படிச்செய்ய வேண்டும்? அவர் சந்தேகம் நிச்சயமாய் விட்டது.

மறுநிமிடம் முற்றத்தின் வலது கோடியிலுள்ள திருப்பத்தில் இரண்டு தீவட்டிகளின் பிரகாசம் தோன்றி யதும், அத்தீவட்டிகளை யேந்திய ஆட்கள் முற்றத்தில் திரும்பினதைக் கண்டார். அவர்கள் பின்னுல் இன்னும் நான்கு பேர் வந்தார்கள். அவர்கள் பின் கூட்டமான போர் வீரர்களும் வேறு உத்தியோகஸ்தர்களும் கூட்ட மாகவும் ஒழுங்காகவும் நடந்து வந்தார்கள். அவர்களின் பின் நான்கைந் தடிகள் காலியாகவிட்டு ஒரு மனிதன் தனியாகவும் அவன் பின் நான்கைந் தடிகள் விட்டு வேறு சிலர் கூட்டமாகவும் வந்தார்கள். எதுவும் திட்டமாகத் தெரியு முன் நாம் ஒன்றும் செய்யலாகாதென்று ஜனரல் உக்கிரசேனர் பார்த்துக்கொண்டே யிருந்தார். அக்கூட் டம் அவருக்கு எதிரிலிருக்கும் விசாலமான முற்றத்திற்கு வரும்போது எல்லா விவரங்களும் அவருக்கு நன்குய்ப் புலப்பட்டன.

மத்தியில் தனியாக வருபவன் கறுப்பு முகமூடி யணிந் திருந்தான். அவன் தோள்மேல் பளபளப்பான ஒரு கண்டகோடரி யிருந்தது. அவன் துரைத்தனக்கொலை யாளி. அவனுக்குப்பின் அர்ச்சுனஸிங் பிரபுவும் கர்னல் இரகுநாதரும் அவர்களுக்குப்பின் இராஜப்பிரதிநிதியும் காரியதரிசியும் இன்னும் இரண்டொரு உத்தியோகஸ்தர் களும் கடைசியில் சிலவீரர்களுமாய் வந்து முற்றத்தின் மைதானத்தை நோக்கிச் சென்று நின்றுர்கள். அங்கு ஒரு சிறு மேடை யிருந்தது. அதன் மேல் சிரச்சேதம் செய்யப்படுபவர்கள் தம் கழுத்தை வைப்பதற்காக ஒரு கட்டை வைக்கப்பட்டிருந்தது. கொலையாளி மேடைமே லேறிக் கோடரியைத் தோள் மேல் வைத்தபடி அக் கட்டை யோரத்தில் நின்றுன். இராஜப்பிரதிநிதியும் உத்தி யோகஸ்தரும் மேடை யோரத்தில் சற்று எட்ட நின்றுர் கள். முதலாவதாக அர்ச்சுனஸிங் பிரபு தம் நண்பராகிய கர்னல் இரகுநாதரின் கரத்தைப்பற்றிக் குலுக்கி விட்டுத்

தைரியத்தோடு மேடைமேலேறி அங்கிருந்த கட்டை முன் முழங்காற்படியிட்டுக் கடவுளைப் பிரார்த்தித்துத் தமது கழுத்தைக் கட்டை மேல் வைக்கப்போனார். அச் சமயம் அதிகாரத்தொனியாக "நில் நில்" என்று ஒரு உரத்த சத்தம் அங்கு கேட்டதும் ஜனரல் உக்கிரசேனர் மேடையருகில் வந்து நின்றார்.

இத்தகைய எதுவோ சம்பவம் நேருமென்று குற்ற வாளிகள் மனதிற்பட்டே யிருந்தது. ஏனெனில், ஜன ரல் தம்மிடம் சரியான அதிகாரமில்லாமல் நம்பிக்கை கூறியிரார் என்றும், இடையில் தீங்கு நேரிடும்படி அசாக் கிரதையாய் இருந்துவிடாரென்றும் அறிவார்கள். ஆயி னும் அவர் கட்டளைப்படி அவர் கூறிய இரகசியத்தை நாம் வெளியிடலாகாதென்று மௌனமாகவே யிருந் தார்கள்.

ஆனல் இராஜப்பிரதிநிதியும் காரியதரிசியும் ஜனரலை நாளைக் காலை ஒன்பது மணிக்கு வரும்படி கூறியதோடு திருப்தியடைந்துபோய் விட்டாரென்று எண்ணிக்கொண் டார்கள். அவர் இவ்வளவு அருகிலிருக்கிறரென்று அவர் கள் கருதவேயில்லை. ஆகையால் அவரைத் திடீலென்று கண்டதும் பிரமிப்படைந்தார்கள்.

அங்கிருக்கும் காவலாட்களின் உத்தியோகஸ்தனுகிய மேஜர், நடக்கும் சங்கதிகளை ஜனரலிடம்போய்க் கூறுவ தற்குச் சரிப்படவில்லை. ஏனெனில் தன் ஆட்களை யெல் லாம் சிறைச்சாலைப் பிரதம அதிகாரியாகிய கவர்னரின் வாசஸ்தலத்திற்கு எதிரிலுள்ள விடத்தில் அணிவகுக்கும் படி கட்டளையிட்டதால் அவன் தன் தொழிலை விட்டுச் செல்வது இராணுவச் சட்டத்திற்கு விரோதமாகும். மேலும் ஜனரல் குற்றவாளிகளின் மன்னிப்பு உத்தர வைக் கொண்டு வந்திருக்கிறர் என்று அவனுக்குத் தெரி யாது. அவர் அவர்களுக்கு ஆறுதல் கூற வந்தார் என்று மேஜர் நினைத்துக்கொண்டான். அப்படியும் முற்றத் திற்குச் செல்லும்போது மேலே ஜனரல் இருக்கும் அறை யின் சாளரத்தை நோக்கினன். அங்கு தீபமில்லாம

லிருக்கவே அவர் நித்திரை செய்கிறார் என்று மேஜர் எண்ணிக்கொண்டான்.

அங்கு அணிவகுக்கப்பட்ட படை வீரர்களுக்கு அங்கு வந்து நிற்பவர் யாரென்று தெரியாது. ஜனரல் அங்குவந்து நின்றபோது தீபவொளியில் அவரைக் கண்டதும் மேஜர் திடுக்கிட்டு "ஆ! ஜனரல் உக்கிரசேனர்" என்றான். இதைப் பக்கத்திலிருந்த போர்வீரர்கள் கேட்டதும் ஒருவர் மற்றொருவருக்குக்கூற ஒரு நிமிடத்தில் அங்கு வந்திருப்பவர் ஜனரல் உக்கிரசேனர் என்று யாவர்க்கும் தெரிந்துவிட்டது. அவரைக்காண நேர்ந்ததைப்பற்றி அவர்கள் மிக்க சந்தோஷமும் பெருமையும் கொண்டார்கள். அவருடைய கீர்த்தியைப்பற்றி அவர்கள் அதிகமாகக்கேட்டு முன்னமே அவர் விஷயத்தில் அன்பும் கௌரவமும் கொண்டிருக்கிறார்கள். இதுமட்டுமல்ல. மங்களத்தீவின் சிற்றரசனாகிய பிரபுவை ஜனரல் காப்பாற்றினாரல்லவா. அப்பிரபு தங்கள் நாட்டானாதலால் இம்மலை நாட்டுப் போர்வீரர்கள் அதுமுதல் ஜனரல் உக்கிரசேனரிடம் தாங்கள் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களென்று கருதி யிருக்கிறார்கள். இக்காரணங்களால் இப்போது அவரைக் கண்டதே அவருடைய கம்பீர உருவம் அவர்களின் அன்பையும் மனத்தையும் அடியோடு கவர்ந்துகொண்டது. அவர்கள் மிக்க ஆரவாரத்தோடு அவரை வாழ்த்தியே யிருப்பார்கள். அச்சமயம் அப்படிச் செய்வது இராணுவச் சட்டப்படி ஒழுங்கீனமான நடக்கையாகையால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. ஆயினும் கண்பார்வையாலும் முகக்குறியாலும் அவர்கள் மனோபாவம் நன்கு விளங்கியது.

அனுபோக சாலியாகிய சிறைச்சாலை யதிகாரிமட்டும் அதைக் கவனித்துணர்ந்தார். இராஜப்பிரதிநிதியும் காரியதரிசியும் ஜனரல் திடீலென்று வந்து முளைத்ததைக்கண்டு பிரமிப்பும் கலக்கமும் அடைந்தார்கள். தங்கள் தீய எண்ணம் நிறைவேறாதுபோ லிருக்கிறதே என் செய்வதென விழித்தார்கள். அதற்குள் சிறைச்சாலை யதிகாரி இரா

ஜப்பிரதிநிதியின் செவியில் இரகசியமாக "பிரபுவே! போர்வீரர்களின் மனோநிலைமையைத் தாங்களே கவனியுங்கள். இச்சமயம் இவர்களை நான் நம்பமாட்டேன். தாங்கள் ஜனரல் உக்ரசேனர் விருப்பத்திற்கு மாருக ஏதேனும் செய்வதாயின் இவர்களனைவரும் உடனே நம் மேல் விழுந்து வஞ்சந் தீர்த்துக்கொள்வார்களென்பது நிச்சயம்'' என்ருர்.

இம்மொழிகளைக்கேட்ட இராஜப்பிரதிநிதி போர்வீரர்களின் முகத்தை நோக்கியதும் அது உண்மையென்றுணர்ந்து காரியதரிசியிடம் இரகசியமாக இரண்டொரு மொழிகளைக்கூறி, "அப்படியாயின் நாம் ஜனரலோடு இதைப்பற்றிக் கலந்துபேசுவோம்'' என்ருர். காரியதரிசியும் அதுவே நலம் என்றதே இராஜப்பிரதிநிதி ஜனரலை நோக்கி "ஜனரலவாள்! நமது கவர்னரின் அறைக்குச் சென்று இதைப்பற்றிக் கலந்துபேசி ஏற்பாடு செய்யலாம்'' என்ருர்.

ஜனரல்:—"பிரபுவே! இதைப்பற்றி ஏற்பாடு செய்ய வேண்டிய தொன்றுமில்லையே. அரசனுடைய கட்டளைப்படி நடந்துகொள்வதாகத் தாங்கள் முன்பே வாக்களித்திருக்கிறீர்கள். அதன்படியே நடக்க வேண்டியதுதான். இன்னும் வேறு ஏற்பாடென்ன இருக்கிறது?'' என்ருர்.

பிரதிநிதி:—"அது உண்மையே. ஆனல் இதற்கிடையில் இருவரையும் சிரச்சேதம் செய்துவிட வேண்டும் என்று அரசனிடமிருந்து கட்டளை வந்திருக்கிறதே'' என்ருர்.

ஜனரல்:—இருக்கட்டும். அக்கட்டளை கொண்டு வந்தவனை யழைத்து, அவனிடம் அது எப்போதளிக்கப்பட்டது என்று தெரிந்துகொள்ளுங்கள். அவன் இலவணபுரியைவிட்டுப் புறப்பட்டுச் சில மணிகள் நேரங் கழிந்த பின்பே நான் இக் கட்டளையோடு புறப்பட்டேன் என்று ருசுப்படுத்துகிறேன்.

பிரதிநிதி:—ஜனரலவாள்! தங்கள் பிரியத்திற்கு மாருக

இப்போது நடக்கப் போகிறதில்லை. ஆயினும் நேரிட்ட சம்பவங்களால் இதைப்பற்றிச் சில விஷயங்களை நாம் பேசவேண்டுமென்பதே என் கோரிக்கை.

ஜனரல்:—"பிரபுவே! தாங்கள் நான் கொண்டுவந்திருக்கும் கட்டளையின்படி நடப்பதாயின் இதைப்பற்றிய மற்ற ஏற்பாடுகளுக்காகத் தங்களோடு கலந்து பேச ஒரு தடையுமில்லை'' என்றார்.

உடனே போர்வீரர்கள் காவல் அறைக்குச் செல்லும்படி கட்டளையிடப்பட்டது. மேடை யெடுத்துவிடப் பட்டது. கோடரி யேந்தி நின்ற கொலையாளி மாயமாய்ப் போய்விட்டான். அர்ச்சுனசிங் பிரபுவும் கர்னல் இரகுநாதரும் திரும்பச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப் படாமல் காவலறையில் மேஜரின் பாதுகாப்பில் விடப் பட்டார்கள். இராஜப்பிரதிநிதி, காரியதரிசி, சிறைச்சாலைக் கவர்னர் மூவரும் ஜனரலை யழைத்துக்கொண்டு கவர்னரின் வாசஸ்தலத்திலுள்ள ஒரு அழகிய அறைக்குச் சென்றார்கள்.

உடனே அவர்கள் எதிரிலிருந்த மேஜைமேல் ஒயின் சிற்றுண்டி முதலியவை பரிமாறப்பட்டன. கர்னலுக்கு மரியாதையோடு உபசாரம் செய்தபின் இராஜப்பிரதிநிதி அவரை நோக்கி "ஜனரல்! தாங்கள் இப்போது ஒரு நாட்டின் தலைவராகிய அரசனாக விருக்கிறீர்கள். இப்போது இத்தகைய கலகக்காரர் மன்னித்து விட்டு விடப் பட்டார்கள் என்றால் அது நாட்டிற்கு எத்தகைய தீங்கை விளைவிக்கு மென்பதைத் தாங்களே சிந்திக்கலாகும். மற்ற துஷ்டர்களை யெல்லாம் தட்டிக்கொடுத்தது போலாகும். மேலும் செல்வராஜு இராஜகுமாரன் இந் நாட்டின் மேல் படை யெடுத்து வர அன்னிய நாட்டில் சேனை சேகரித்துக்கொண் டிருக்கிறான். இப்போது இவர்கள் மன்னிக்கப்பட்டு விட்டால் இன்னும் உள்ள கலகக்காரர்கள் அந்த இராஜகுமாரன் இந்நாட்டின் கரையில் கால் வைத்ததே அவரோடுபோய்க் கூடிக்கொள்வார்கள். அரசர் என்னமோ இவர்களைத் தண்டிக்க வெண்

ணியே கட்டளை பிறப்பித்தார். தாங்கள் கொண்டு வந்திருக்கும் கட்டளையும் மெய்யானதே. ஆனல் அது எப்படிப் பிறப்பிக்கப்பட்டதென்பது எனக்கு விளங்கவில்லை. ஆனல் ஒன்று மட்டும் நான் உறுதியாகக் கூறுவேன்: அதாவது இவர்கள் தண்டிக்கப்பட்டால் அரசர் திருப்தியே யடைவார்'' என்றபோது,

ஜனரல்:—நேர்ந்த சந்தர்ப்பங்களால் தாங்கள் இவ்வாறு சிந்திப்பது தகுதியானதே.

பிரதிநிதி:—"இதில் கவனிக்க வேண்டியது இன்னென்றுளது. நான் இராஜப்பிரதிநிதியாக இருந்து நான் சிபாரிசு செய்து அரசரின் அங்கீகாரத்திற்கனுப்பி அரசன் சம்மதித்து அதன் மேல் பிறப்பித்த கட்டளை, இந்த இராஜ்ஜியத்தில் ஒரு பதவியிலுமிராத ஒருவரால் இரத்து செய்யப்பட்டுப் போவதானல் பிறகு என் அதிகார பதவிக்கு என்ன கௌரவமிருக்கிறதென்று தாங்களே பாருங்கள். ஜனங்கள் என்னை மதிப்பார்களோ? உடனே நான் என் பதவியை இராஜி நாமா செய்துவிட வேண்டுமே யன்றி இதிலிருக்கலாகுமோ? ஜனரல் இச்சந்தர்ப்பத்தில் நான் தங்களைப்பற்றிக்கூறியதைக் குற்றமாகவாவது அகௌரவமாகவாவது தாங்கள் கருதாதிருக்கப் பிரார்த்திக்கிறேன். என் நிலைமையை விளக்கிக் காட்ட அப்படிக்கூறினேனன்றி வேறு நோக்கங் கொண்டல்ல'' என்றபோது,

ஜனரல்:—இப்போது தாங்கள் விவகரித்த யாவும் உணர்ந்தேன். பிறகு, என்ன முடிவிற்காக இவ்வளவும் கூறுகிறீர்கள்?

இராஜப்பிரதிநிதி:—"கூறுகிறேன். இவர்களை மன்னித்து விடுவதென்பது முடிவான விஷயமே. அந்த மன்னிப்பிற்கு ஒரு நிபந்தனை யிருக்கிறது. அதாவது இவர்கள் உடனே இந்நாட்டை விட்டு அந்நிய நாட்டிற்குச் சென்றுவிடவேண்டுமென்றும் மறுபடி இங்கு வரலாகாதென்றுமே. இப்போது தாங்கள்

அவர்கள் உயிரைக்காப்பாற்றும் பொறுப்பை யேற்றுக் கொண்டீர்கள். கூடவே அவர்களுடைய எதிர்கால க்ஷேமமும் தங்கள் பொறுப்பிலேயே யேற்றுக்கொண்ட மாதிரிதான்.

இவ்வாறிருக்கிறவரையில் தாங்கள் இவர்களைத் தங்கள் கூடத் தங்கள் இராஜ்ஜியத்திற்கே யழைத்துச் சென்று அங்கேயே யிவர்கள் தங்கள் வாழ்நாட்களைக் கழிக்குமாறு செய்யவேண்டுமாகத் தங்களைப்பிரார்த்திக்கிறேன்'' என்றார்.

ஜனரல் உக்கிரசேனர் இம்மொழிகளைக்கேட்டதும் சற்றும் யோசிக்காமலே "பிரபுவே! எனது எண்ணம் இவ்வாறே யிருந்தவரையில் நான் ஒரு கஷ்டமுமின்றி இதற்குச் சம்மதிக்கிறேன்'' என்றார்.

இராஜப்பிரதிநிதி:—"இனி நான் எந்த முடிவான கோரிக்கைக்காக இவ்வளவும் கேட்டுக்கொண்டேனே அதைக் கூறி விடுகிறேன். ஜனரல்! இப்போது தாங்கள் எனக்குச் செய்யவேண்டிய பேருதவியாவது, தாங்கள் இவர்களை மாறுவேடமணியச்செய்து துரிதமாக அழைத்துக்கொண்டு இருபது மைல் தூரத்திலிருக்கும் துறைமுக நகரம் சென்று ஒரு கப்பலிலேற்றிப் பாஞ்சாலநாட்டிற்கனுப்பி விடுங்கள். இவர்கள் அங்கு ஒரு இடத்தில் மாறுபெயரோடு தங்கள் வரவை யெதிர் பார்த்துக்கொண்டிருக்கட்டும். தங்களுக்கு இந்நாட்டிலுள்ள வேலைகள் முடிந்து தங்கள் நாட்டிற்குச் செல்லும்போது இவர்களிருக்குமிடம் சென்று இவர்களையு மழைத்துக்கொண்டு போய்விடுங்கள். இடையில் இவ்விஷயமாக நான் என்ன பிரஸ்தாபம் செய்தாலும் தயவு செய்து தாங்கள் அதை மறுத்து அது பொய்யென்று கூறுதிருக்கவேண்டும். இதுவே என் பிரார்த்தனை'' என்றார்.

ஜனரல் அப்பத்திரத்தில் இவர்கள் நாட்டை விட்டுப் போய்விட வேண்டுமென்ற நிபந்தனையைச் சேர்த்தது

ஒரு கருத்துக்கொண்டே. அதாவது கர்னல் இரகுநாதர் தம்மோடு வந்து விட்டால், இனிக் கலக விஷயங்களில் பிரவேசித்து ஆபத்தில் சிக்கிக்கொள்ளச் சந்தர்ப்பம் இல்லாது போம் என்று கருதி அவ்வாறு செய்தார். அவரைப்பற்றி எழுதிய நிபந்தனையை அவர் கூடவிருப் பவர்க்கும் எழுதாவிட்டால் சந்தேகத்திற்கிடமுண்டா கும். ஆகையால் அர்ச்சுனசிங் பிரபுவுக்கும் அந்நிபந் தனையே யேற்பட்டது. இராஜப்பிரதிநிதியின் கருத்து இன்னதென ஜனரல் அறிந்து கொண்டார். அதாவது அவர் அரசன் அனுப்பிய கட்டளைப்படி இருவரையும் சிரச்சேதம் செய்து விட்டதாக அரசனுக்கு அறிவித்து விடக் கருதி யிருக்கிறார் என்பதே. அத்தகைய பிரஸ்தா பத்தால் அவர்களிருவர்க்கும் கெடுதி யொன்றுமில்லை. அவர்கள் வேறு நாட்டில் க்ஷேமமாகவே சீவித்துக்கொண் டிருக்கப்போகிறார்கள்.

78-வது அத்தியாயம்.

கர்னல் இரகுநாதரும் அர்ச்சுனஸிங் பிரபுவும் அன்னியநாடு செல்லல்—முடிவான சம்பவங்கள்

இந்த ஏற்பாட்டால் ஜனரலுக்கு இன்னொரு அநு கூலமுண்டு. அரசன் சமாதான ஏற்பாட்டைப் பற்றி ஜனரலிடம் பேசிக்கொண் டிருந்தபோது ஆயத்த மாகத் தன் கையொப்பம், உள்நாட்டு மந்திரியின் கை யொப்பம், இராசாங்க முத்திரை, யாவும் வைத்த இரண்டு காலிப் பத்திரங்களை அரசன் ஜனரலிடம் கொடு த்து "எனக்கு அகௌரவமாவது கெடுதியாவது உண்டா கும் வழியில் இதை யுபயோகிக்கமாட்டீர்களென்று எனக்கு நம்பிக்கை யிருக்கிறது" என்று கூறினனல் லவா. அந்தப்பத்திரங்களில் ஒன்றிலேயே ஜனரல் இவர் கள் இருவரையும் விடுதலை செய்யும்படி கட்டளை யெழுதி

விட்டார். இதனால் வாக்களித்தபடி அரசனுக்கு அகௌ ரவமாவது கெடுதியாவது உண்டாகாது தான். ஆயினும் இது ஒருவித சூதான தந்திரமே. அவர்களை மன்னிக்கும் விஷயம் அரசனுக்குச்சற்றும் விருப்பமாக விராது. ஆகை யால் நடந்த சங்கதி தெரிந்தால் அரசன் அதைப்பற்றிப் பிரஸ்தாபமே செய்யானெனினும் உள்ளத்தில் வருத்தம டைவான் என்பதுஉண்மை. இப்போது இராஜப்பிரதிநிதி செய்யும் ஏற்பாட்டால் இச்சங்கதியே வெளிவராது. ஜன ரல் அந்தஇரண்டு பத்திரங்களில் ஒன்றையேனும் உபயோ கிக்கவில்லை யென்று அவர் பெருந்தகைமையைப் பற்றி வியப்படைவான். ஜனரல் அப்பத்திரத்தில் ஒருவனுக்குப் பிரபுப்பட்டமும் வருடம் இருபதினாயிரம் பவுன் வரு மானம் தரத்தக்க ஜாகிரும் விடப்பட்டதாக எழுதிவிட் டாலும் அது அப்படியே நடக்கவேண்டியதே. ஜனரல் யாவுங் கவனித்து இப்போது நாம் இராஜப்பிரதிநிதியின் கோரிக்கைப்படி நடக்கவேண்டியதே யென்று கருதி அவர் கோரியபடி செய்வதாக வாக்களித்தார்.

உடனே ஜனரல் உக்கிரசேனரும், அர்ச்சுனசிங் பிர புவும், கர்னல் இரகுநாதரும் சிறைச்சாலையிலிருந்து புறப் பட்டார்கள். மூவரும் இரண்டுமணி நேரத்திற்குள் அந் நகரத்தை விட்டுப் புறப்பட்டார்கள். ஜனரல் உக்கிரசே னர் அவர்களை உருத் தெரியாதபடி மாறுவேடமணியச் செய்து துறைமுக நகரத்திற் கழைத்துக்கொண்டுபோய் அங்கிருந்து பாஞ்சால நாட்டிற்குச் செல்லும் ஒரு கப்ப லில் அவர்களை யேற்றிவிட்டுத் தாம் இலவண புரிக்குச் சென்றார்.

மறுநாள் மலை நாட்டின் இராஜப்பிரதிநிதி அரசன் கட்டளைப்படி அர்ச்சுனசிங் பிரபுவையும் கர்னல் இரகு நாதரையும் சிரச்சேதம் செய்துவிட்டதாக அரசனுக்கு அறிவித்தார். ஜனரல் உக்கிரசேனர் தமக்கு வேண்டிய விஷயங்களைப்பற்றி ஏற்பாடு செய்வதற்காக இரண்டுமாத காலம் இலவணபுரியிலிருந்தார்.

அதற்கிடையில் பஞ்சநாதம்பிரபு காலமாய்விட்

டார். அவர் அரசனிடம் தாம் கூறியபடி தமக்கு அரச ஞல் அளிக்கப்பட்ட இராஜகுமார பட்டத்தையும் ஜாகீர் பூமியையும், தன் சொந்த ஆஸ்தியையும் யாவும் உலக நாயகனுக்கே யளித்துவிட்டார். உலகநாயகன் பிரபுப் பட்டத்தை யேற்றுக்கொள்ளவில்லை. ஜாகீரையும் மற்ற ஆஸ்தியையும் மாளிகை யாவற்றையும் விற்றுவிட்டுப் பிரபுவின் சொந்த ஆஸ்தியில் வந்த பணத்தைத் தரு மத்தில் செலவழித்துவிட்டு, மற்றவைகளில் வந்த செல் வத்தை மட்டும் தனக்கு வைத்துக்கொண்டான். இப் போது இவனுக்கு மணமாகி இரண்டு வருடங்களுக்கு மேலாயின. இரண்டு ஆண் பிள்ளைகள் அமராவதிக்குப் பிறந்திருக்கின்றன.

ஜனரல் உக்கிரசேனர் இலவணபுரியில் தமக்கிருந்த வேலை முடிந்ததும் அங்கிருந்து புறப்பட்டுப் பருதிபுரம் சென்று இரண்டுமூன்று வாரங்கள் அங்கு தங்கியிருந்தார். அங்கு பாஞ்சால துரைத்தனத்தோடு தமது இராச்சியத் திற்கு வேண்டிய அவசியமான சமாதான ஏற்பாடுகளை யெல்லாம் செய்துகொண்டபின் பாஞ்சாலத் துறைமுக நகரம் சென்ருர். அங்கு அவருடைய இராச்சியத்தைச் சேர்ந்த துரைத்தன யுத்தக்கப்பல் ஒன்று இவரை யேற் றிச் செல்வதற்காக ஆயத்தமாகக் காத்துக்கொண்டிருந் தது. அத்துறைமுக நகரிலேயே இவரோடுகூடச் செல்ல வேண்டியவர்களும் இவருக்காகக் காத்துக்கொண்டிருந் தார்கள். அவர்கள் யாரெனில், கர்னல் இரகுநாதர், அவர் மனைவி, உலகநாயகன், அவன் மனைவியாகிய அமரா வதி, அவன் தாயார் இராஜாம்பாள், அர்ச்சுனசிங்பிரபு, கர்னலும் அர்ச்சுனஸிங்பிரபுவும் வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலை காவற்படையின் உத்தியோகஸ்தனை மேஜர், ஜனரலுடைய இரண்டு உத்தியோகஸ்தர், ஆகிய வர்களே. அந்த மேஜர், ஜனரல் உக்கிரசேனரிடம் வைத் திருந்த அன்பினுல் அவரிடமே உத்தியோகம் செய்யக் கருதி இலவணபுரி இராஜ்ஜிய சைனியத்திலிருந்த தன் பதவியை இராஜிநாமா கொடுத்து விட்டான்.

இரொட்டிக் கிடங்குக் கலகக்காரரைப்பற்றிய விசாரணை முடிந்து அதிற் சேர்ந்தவர்கள் தண்டனை யடைந்ததே அவர்களைக் காட்டிக்கொடுத்த துரோகியாகிய கர்னல் இரவணப்பன், இனி ஜெயசிங்கன் தன்னிட மெழுதி யளித்த கடிதத்தால் அவனிடம் தற்சமயம் நல்ல பரிசு பெறலாமென்றும், பிறகு அவன் பட்டத்திற்கு வந்ததே உயர்ந்த பட்டமும் ஜாகீரும் அல்லது உபகாரச் சம்பளமும் பெறலாமென்றும், தான் அக் கடிதத்தைக் கொடுத்துவைத்திருந்த ஸர்தார் சோமநாதன் என்பவரிடம்சென்று கேட்டு மனமுறிந்து திரும்பிவந்தானென்று முன்னமே கூறி யிருக்கிறோம். சோமநாதர் அதைத் தாமளித்த தம் நண்பனான இரங்கராஜபிரபு சிறைச்சாலையில் தற்கொலை புரிந்துகொண்டபோது. அங்குள்ள அதிகாரிகள்கையில் அக்கடிதம் சிக்கியிருக்கும், அதை யவர்கள் இளவரசனிடம் அளித்திருப்பார்கள் அல்லது அழித்துவிட்டிருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டாரேயன்றி அக்கடிதமே இரங்கராஜனுக்கு எமனாக விருந்ததென்பதை யறியார்.

கர்னல் இரவணப்பன் அதன்பின் பன்முறை ஜெயசிங்கனுக்குக் கடிதங்கள் மூலம் மனுச் செய்துகொண்டும் ஜயசிங்கன் சட்டைசெய்யவில்லை. பிறகு அவன் பட்டத்திற்கு வந்த பிறகும் தன்னாலானவரையில் வேண்டிக்கொண்டான். ஒரு பயனுமில்லை. பிறகு வருமானமின்றி மிக்க கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் செல்வராஜனு இராஜகுமாரன் தன் சிறிய தந்தையாகிய ஜெயசிங்க அரசனிடமிருந்து இராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காகப் படை யெடுக்க வெண்ணிப் பாஞ்சால நாட்டில் சேனைகளைச் சேகரித்துக்கொண்டிருக்கிறானென்று கேள்விப்பட்டுத் தன்னோடுகூட முன்பு இராஜாங்கச் சாக்ஷியாக

விருந்தவனை யழைத்துக்கொண்டு அங்கு சென்றான். அங்கு சென்றதும் செல்வராஜு இராஜகுமாரனைக் கண்டு, தான் ஜெயசிங்க அரசன் மேல் மிக்க வெறுப்புக் கொண்டிருப்பதாகவும் அவன் தன்னைப் படுமோசம் செய்ததாகவும் இப்போது உறுதியாக அவனுக் கெதிர்க்கட்சியில் இருந்துழைக்க விரும்புவதாகவும் கூறினான்.

உலக அனுபவம் சரியாக அறியாத அந்த இராஜகுமாரன் தன் சிறிய தந்தைமேலுள்ள விரோதத்தையே முக்கியமாகக் கருத்திற்கொண்டு இவனை நம்பித் தான் சேகரம் செய்யும் சைனியத்தில் இவனை யொரு முக்கிய படைத்தலைவனாக வைத்துக்கொண்டான்.

ஜனரல் உக்கிரசேனரும் உலகநாயகன் முதலியவர்களும் பாஞ்சாலநாட்டை விட்டுப்புறப்பட்ட மூன்று நான்கு மாதங்கள் கழித்து செல்வராஜு இராஜகுமாரன் ஒரு பெருஞ்சேனையைத் திரட்டிக்கொண்டு இலவணபுரி இராஜ்ஜியத்தின் மேல் படை யெடுத்தான்: அவனுடைய வீரர்கள் உறுதியாகவே நின்று யுத்தம் செய்தார்களாயினும், இராஜகுமாரனுடைய புத்தி சூக்குமக் குறைவாலும் மனச்சலனத்தாலும் கடைசியில் அவன் சேனை யடியோடு முறுயடிக்கப்பட்டு, அவனும் கர்னல் இரவணப்பன் அவன் நண்பன் முதலியவர்களும் எதிரிகளிடம் சிக்கிக்கொண்டார்கள்.

அச்சமயம் கர்னல் இரவணப்பனும் அவன் நண்பனும் மறுபடி துரைத்தனச்சாட்சியாகத் திரும்பி விட்டார்கள். முதலில் செல்வராஜு இராஜகுமாரன் இலவணபுரி இராச்சியத்தில் கரையிறங்குவதற்கு இடங்கொடுத்த துறைமுகநகர அதிகாரி இராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டான்.

நகர அதிகாரியைப் பற்றிய விசாரணை நடந்தபோது

அவன் "நான் முன்னடி இராஜகுமாரனேடு கலந்து அவனுக்கு உதவிசெய்யவில்லை. இராக்காலத்தில் எதிரிகள் திடீலென்று கரையிறங்கி விட்டார்கள். நான் உடனே பதினைந்து மைல் தூரத்திலிருந்த காவற் படைக்குச் சங்கதி யனுப்பி விட்டு அப்படை வருமளவும் என்னிடமிருந்த ஐந்நூறு வீரர்களை யழைத்துக்கொண்டு சென்றேன். இதற்கிடையில் வேவுகாரரால், எதிரிகள் இருபதாயிரத்திற் கதிகமாக;விருப்பதை யறிந்து கொஞ்சம் ஆட்களோடு சென்று அவர்களை எதிர்த்தால் தவருக முடியுமென் றுணர்ந்து யுத்ததந்திரப்படி பின்னிடைந்து வந்து, பிறகு நமது படைகள் வரும் வழியிலிருந்து அவர்களோடு கலந்து கொண்டேன். என்னுல் கூடிய வரையில் நான் உறுதியாகவே நின்று போர் புரிந்தேன். இனிக் கடவுளே நிரபராதிகளைக் காப்பாற்ற வேண்டும்." என்ருர்.

கர்னல் இரவணப்பன், "நகர அதிகாரி முதலிலிருந்தே செல்வராஜ அரசனுக்கு உளவாயிருந்தாரென்றும், தன்னை யவரே இராஜகுமாரனிடம் போகும்படி யனுப்பினுரென்றும், பிறகு இவரிடமிருந்து அடிக்கடி இராஜகுமாரனுக்குக் கடிதம் வந்துகொண் டிருந்ததென்றும், அவருடைய உதவியாற்றுன் சற்றும் கஷ்டமாவது சேதமாவது இல்லாமல் எதிரிசேனை கரை யிறங்கியதென்றும்" கூறினுன்.

அவன் நண்பனும் அவ்வாறே கூறினுன். அந்த இரண்டு பேருடைய சாட்சிய மன்றி வேறு எள்ளளவு சாட்சியமும் இல்லை. இந்தத்துஷ்டர் சாக்ஷியத்தை நம்பியே இந்த நகர அதிகாரி குற்றவாளி யென்று தீர்மானிக்கப்பட்டு மூன்ருவது நாள் சிரச்சேதம் செய்ய அவருடைய ஆஸ்திமுழுமையும் துரைத்தனத்தாரால் பறி

முதல் செய்யப்பட்டது. ஆனல் மூன்ருவதுநாள் செல்வராஜ இராஜகுமாரனைப்பற்றி விசாரணை நடந்தபோது நகர அதிகாரி நிரபராதி யென்றும், அவருக்கு விரோதமாகக் கொண்டுவரப்பட்ட இரண்டு சாக்ஷிகளும் அடியோடு பொய் கூறினர்களென்றும் ருசுவாய்விட்டது. அநீதமாக மரணதண்டனை யடைந்த நகர அதிகாரியின் மைந்தன் சாக்ஷி கூறிய இருவர்மேலும் பிராதுசெய்தான். அதன்மேல் விசாரணை நடந்தது.

கர்னல் இரவணப்பனும் அவன் நண்பனும் மாறி மாறி இரு பட்சத்தார்க்கும் துரோகம் செய்தபடியால், சின்னக்கட்சியார் பெரியகட்சியார் இருவருமே அவர்களை வெறுக்கத் தொடங்கினர்கள். துரைத்தன வக்கீல் முடிவாய்க் கூறும்போது, “இந்த இருவரும் தேசத்தில் சதா கலகத்தை யுண்டாக்கிக்கொண் டிருக்கிருர்கள். இரொட்டிக்கிடங்கில் நடந்த சதியாலோசனையில் அரசரையும், இளவரசரையும் கொலை செய்யவேண்டுமென்று பிரேரேபனை செய்தவர்களில் இவர்களிருவரும் சேர்ந்தவர்களே. அப்போது இவர்கள் தாங்கள் சேர்ந்திருந்த கட்சிக்குத் துரோகம் செய்து துரைத்தன சாக்ஷியாகத் திரும்பி விட்டதாலேயே தப்பித்துக்கொண்டார்கள். பிறகும் இவர்கள் செல்வராஜ இராஜகுமாரரிடம் போய்ச் சேர்ந்து அரசருக்கு விரோதமாக யுத்தம் செய்திருக்கிருர்கள். மறுபடி துரைத்தனத்தார் பட்சத்தில் சாக்ஷிகளாகத் திரும்பிப் பொய்ச்சாக்ஷி கூறி ஒரு நிரபராதி மரணதண்டனை யடையும்படி செய்தார்கள். சட்டப்படி இவர்கள் இருவர்களும் மரணதண்டனைக்குரியவர்களே” என்ருர். நியாயாதிபதி அவர்களிருவருக்கும் மரணபரியந்தம் தீபாந்தரவாசத் தண்டனை விதித்தார்.

கர்னல் இரவணப்பன் ஜெயசிங்கன் கடிதத்தைப்

பாதுகாப்பிற்காகத் தன் சிநேகர் என நம்பிய ஒருவரிடம் அளித்தான். அவர் அதை இரங்கராசுப் பிரபுவுக்களித்துவிட்டார். அவர் அப்படிச் செய்தது கர்னலுக்குத் தெரியாது. ஜெயசிங்க அரசனே கர்னல் இரவணப்பனே யதை இரங்கராஜுப் பிரபுவுக்குப் பணத்திற்குக் கொடுத்துத் தன்னைக் காட்டிக்கொடுத்துவிட்டான் என்றெண்ணினர். அந்த ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள அவர் கொலை செய்ய நேர்ந்ததால் கர்னல் இரவணப்பன் மேல் அரசனுக்கு எத்தகைய வெறுப்பும் வஞ்சமுமுண்டாயிருக்கவேண்டுமென்பதை நாம் கூறவேண்டுவதின்றும். ஆகையால் அவர்களிருவரும் தண்டனை யடைந்ததற்கு அரசரின் தூண்டுதலும் ஒரு காரணமாக விருந்ததெனலாம். கடைசியில் செல்வராஜு இராஜகுமாரன் சிரச்சேதம் செய்யப்பட்டான்.

பஞ்சநாதம்பிரபு இறந்துபோன ஒரு வருடத்திற்கெல்லாம், அவருடைய பத்தினி மடத்திலிருந்தவள் காலகதியடைந்தாள். கர்னல் குமரவேல் சுட்டுக் கொல்லப்பட்ட மறுநாள் மரண விசாரணை நடந்தது. வேலையாட்கள் சாட்சியத்தால், மதனும்பாள் சீமாட்டி அவ்விஷயம் வெளிக்கு எப்படிப் புலப்படவேண்டுமென்று கருதினளோ அவ்வாறே, களவு செய்யும் எண்ணத்தோடு வந்ததால் கொல்லப்பட்டான் என்று முடிவு கூறப்பட்டது. ஆனல் ஜனரல் உக்கிரசேனருக்குமட்டும் இக்கொலை மதனும்பாளின் தந்திரத்தால் நேர்ந்ததேயென்று தெரியும்.

மதனும்பாள் சீமாட்டி கொஞ்சக்காலங் கழித்துப் பாஞ்சால நாடுபோய்ச் சேர்ந்தாள். அவள் இலவணபுரியரசன் மூலமாய்ப் பாஞ்சால நாட்டிற்குச் செய்த நன்மைக்காக அவ்விராச்சியத்தில் அவளுக்கு மரண பரியந்தம் உபசாரசம்பளமளிக்கப்பட்டது. அவள் அந்த நாட்

டிற்குச் சென்றபின் நல்ல நெறியிலேயே தன் காலத்தைக் கழித்து மிக்க வயோதிக வயதில் விண்ணுலகடைந்தாள்.

குமுதவல்லிச்சீமாட்டி பிறகு இராஜாங்கத்தில் சம்பந்தப்படவே யில்லை. அவள் தன்னிடம் இருந்த செல்வத்தைக்கொண்டு தன் நாட்டு மாளிகையிலேயே தனியாக வாழ்ந்து வந்தாள். மகன் இறந்தபின் ஐந்தாறு வருடங்கள் கழித்து ஒரு அயோக்கியனை மணம் புரிந்துகொண்டாள். அவனால் அவளுடைய செல்வம் சீக்கிரத்தில் அழிக்கப்பட்டதோடு அவனால் குரூரமாக நடத்தவும் பட்டாள். அவன் ஒரு நாள் குதிரை யேறிச்சென்றுகொண் டிருக்கையில் குதிரை திடீரென்று மிரட்சியடைந்து அவனைக் கீழே தள்ளிவிட அவன் மண்டையில் காயமடைந்து மடிந்தான். பிறகு அச்சீமாட்டி மிக்க கஷ்டங்களை யனுபவித்துக்கொண் டிருந்து தன் அறுபதாவது வயதில் மடிந்தாள்.

கர்னல் இரகுநாதருக்குச் சினேகனாக விருந்து கடைசியில் இரொட்டிக்கிடங்குச் சதியாலோசனை விசாரணையில் கர்னல் முதலியவர்களைக்காட்டிக்கொடுத்த ஹோட்டல் காரனாகிய செந்திலடிமை யென்பவன், தன் ஹோட்டல் திடீலென்று தீக்கிரையாய் விடச் சொத்தனைத்து மிழந்து யாவராலும் வெறுக்கப்பட்டு உதவுவாரில்லாமல் வருந்தி மடிந்தான்.

உலகநாயகன் முதலியவர்கள் ஜனரல் உக்கிரசேனரோடு அவரால் தாபிக்கப்பட்ட புது இராஜ்ஜியமாகிய மச்சபுரிக்குச் சென்றார்கள் என்று கூறினோ மல்லவா. அவர்களனைவரும் க்ஷேமமாகவே அங்கு போய்ச் சேர்ந்தார்கள். அங்கு செல்வதால்தான் உலகநாயகன் பஞ்சநாதம் பிரபுவின் பிரபுப்பட்டத்தை யேற்றுக்கொள்ளாமல் யுத்தமுனையில் ஜனரல் உக்கிரசேனராலளிக்கப்பட்ட

பட்டமே கௌரவமானதென மதித்துக்கொண்டான். அங்கு சென்றதும் கர்னல் இரகுநாதருக்கு ஜனரல் பதவி யளித்து அந்த இராச்சியத்தின் சேனாதிபதியாக்கப்பட்டார். மேஜர் இராணுவ காரியதரிசியாகவும் அர்ச்சுனசிங் பிரபு உள்நாட்டு மந்திரியாகவும் அமர்த்தப்பட்டார்கள். உலகநாயகன் முதலில் வெளிநாட்டு மந்திரியாக அமர்த்தப்பட்டுப் பிறகு பிரதமமந்திரிப்பதவியைப் பெற்றான்.

சில வருடங்கள் கழித்து அத்தேசத்தார் வேண்டுகோளுக்கிணங்கி ஜனரல் உக்கிரசேனர் அந்நாட்டிற்கு அரசராக முடி சூட்டப்பட்டார். இருபது வருடங் கழித்து, அவர் இறந்துபோகும் காலத்தில், தமக்குப்பின் உலகநாயகனுக்கு அரசனைப் முடிசூட்டும்படிக்கும் அவன் சந்ததியாரே அரசாண்டு வரும்படிக்கும் ஏற்பாடு செய்து விட்டுக் காலமாய்விட்டார். ஆதியில் மிக்க துன்பத்தை யனுபவித்த இராஜாம்பாள் பிற்காலத்தில் மிக்க சுகத்தோடும் சந்தோஷத்தோடு மிருந்து மிக்க வயோதிக பருவத்தில் விண்ணுலகடைந்தாள். கர்னல் இரகுநாதரும் அவர் மனைவியும் கூட அவ்வாறே சகல சுகங்களோடும் வாழ்ந்து வந்தார்கள். உலகநாயகன் முடி சூட்டிக் கொண்டு மிக்க நீதியோடு நெடுங்காலம் அரசு செலுத்தி வந்தான். நேர்வழி நடப்போர்களுக்கு ஆண்டவன் எப்படியும் நன்மை புரிவார்.

ஓம் தத் ஸத்.

முற்றிற்று.

"ANANDA BODHINI" POWER PRESS, MADRAS.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதா யிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது முதலில் மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி துப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் வெளியாகி இத்துடன் முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923௵ மார்ச்சு௴ 1௳ முதல் முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கப்படும். அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-பிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி துப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

சென்னை-600 008
186486

மின்சாரமாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்தியமும், தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும் மிக்க விருப்பத்தையும், உலக அனுபவம்பெற அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது. ஆதிமுதல் அந்தம் வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டு விடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம். நல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350 பக்கங்களுக்குமே லுடையது.

விலை ரூபா 1—8—0.

புது ! துப்பறியும் !! நாவல் !!!

வெளியாய் விட்டது.

மஞ்சள் அறையின் மர்மம்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால்வரையப்பட்டது.

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச்செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச்செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1 8 0 தபால் கூலி பிரத்யேகம்.

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை, மதராஸ்.

“ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி துப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ஆரணி துப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி ரூபா	1	0
2-பாகமும் ...	4	0	பத்மாஸனி ...	0	14
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் (மறுபதிப்பில்)			பவளத்தீவு-அச்சில்		
சுவர்ணாம்பாள் ...	0	12	பூங்கோதை ...	0	10
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரு			சகோதரவாஞ்சை	0	6
டையசரித்திர உபதேசங்கள்	1	12	ஹை ஸ்கூல் பதிப்பு ...	0	7

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the “Ananda Bodhini” Power Press, Madras.